பக்கங்கள்: இருபத்தெட்டு + I+II

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2042 தை 26 புதன்கிழமை (09.02.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 075



06 புதிய நாணயத் தாள்கள்



12 பியசேன நீக்கப்பட்டது சட்டவிரோதம்



14 தமிழ்ச் சமூகத்தின் நிலைப்பாடு என்ன?



21 சூடான் பிரிக்கப்பட 99% ஆதரவு

### அரசியல் தீர்வுக்கு அரசு முயற்சித்து வருகின்ற வேளையில்

# இலங்கைக்கு எதிராக ஐ.நாவில் மீண்டும் போர்க்குற்றப் பிரேரணை

## புலம்பெயர் தமிழர் முயற்சி எனப் பதறுகிறார் பிரதமர்



கொழும்பு, பெப்ரவரி 09

இனப் பிரச்சினையை முடிவுக்குக் கொண்டு வந்து தமிழ் மக்களுக்கு நிரந்தர மான அரசியல் தீர்வு ஒன்றை ஏற்படுத்துவதற்கான முயற்சியில் அரசு ஈடுபட்டிருக்கும் சந்தர்ப்பத்தில் இலங்கை அரசுக்கு எதிராகப் போர்க்குற்ற விசாரணைகளை ஆரம்பிக்க வேண்டும் எனப் புலிகளின் ஆதரவாளர்களும், புலம்பெயர் தமிழர்களும் மீண்டும் கோஷம் எழுப்ப ஆரம்பித்துவிட்டனர் என்று நாடாளுமன்றத்தில் நேற்றுப் பதற்றப்பட்டார் பிரதமர் டி.எம்.ஜயரத்ன. அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாதம் நீடிப்பதற்கான காரணங்களில் ஒன்றாக அவர் இதனை முன்வைத்தார்.

''ஐ.நா மனித உரிமைகள் ஆணைக்குழுவின் வருடாந்தக் கூட்டம் அடுத்த மாதம் ஜெனிவாவில் ஆரம்பமாகவுள்ளது. இந்தக் கூட்டத்திலேயே இலங்கைக்கு எதிரான போர்க் குற்றச்சாட்டுக்களைச் சுமத்த முயற்சிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. இராஜதந்திரத் தொடர்பாடல்களின் மூலம் அரசு இதை உறுதிப்படுத்தியுள்ளது.

விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான சக்திகளும் அவற்றுக்குத் துணை போகும் நாடுகளும் இந்த நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றன'' - என்றார் பிரதமர்.

அவசரகாலச் சட்டத்தை நீடிப்பதற்கான பிரேரணை நேற்று நாடாளுமன்றத்தில் நடைபெற்றது. முடிவில் 109 வாக்குகள் வித்தியாசத்தில் அது நிறைவேற்றப்பட்டது. ஆதரவாக 121 வாக்குகளும் எதிராக 12 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

பிரேரணையை ஆரம்பித்து வைத்துப் பேசினார் பிரதமர். அவர் தனது உரையில் தெரிவித்ததாவது:-

போர் முடிவுற்ற நிலையில் அரசு பல்வேறு நலன் புரி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

(27ஆம் பக்கம் பார்க்க)

## போர்க் குற்றம் மீதான கரிசனை அற்பமானதல்ல என்கிறது அமெ.

சென்னை, பெப். 9

இலங்கையில் இடம் பெற்ற போர்க்குற்றங்கள் தொடர்பான கரிசனை அற்பமானதோ, ஏற்றுக்கொள்ள முடியாததோ அல்ல என்று இலங்கைக்கான முன்னாள் அமெரிக்கத் தூதுவர் ரெரெசிற்றா ஸ்காபர் தெரிவித்தார்.

சென்னையில் கருத்தரங்கு ஒன்றில் நேற்றுமுன்தினம் உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

'நேபாளம், இலங்கை மீதான சிறப்புக் கவனத்துடன் கூடிய தெற்காசியப் பிராந்தியத்தின் பாதுகாப்பு குறித்த அமெரிக்காவின் பார்வை' என்ற தலைப்பில் அவரது உரை அமைந்திருந்தது.

தனது உரையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

விடுதலைப் புலிகளுக்கும் இலங்கைப் படைகளுக்கும் இடையிலான போரின் இறுதிக்கட்டம் மிகவும் கொடுமையானது என்பதற்கான ஆதாரங்கள் கிடைத்துள்ளன.

இலங்கையில் தனி நாடு ஒன்றை உருவாக்குவதற்கு ஆதரவான நிலையில் அமெரிக்கா இல்லை. மஹிந்த ராஜபக்ஷ அரசு உண்மையான நல்லிணக்கத்தை ஏற்படுத்த வேண்டியது அவசியம்.

நல்லிணக்க செயற்பாடுகள் மேற்கொள்ளப் படாது போனால் மீண்டும்

(27ஆம் பக்கம் பார்க்க)

## ஊடகங்களைத் தாக்கி வருவோரை கைதுசெய்ய முடியாதிருப்பது ஏன்?

### ஜே.வி.பி. உறுப்பினர் சபையில் கேள்வி



கொழும்பு, பெப். 09

கொள்ளை, கொலைச் சம்பவங்களுடன் தொடர்புடைய குற்றவாளிகளைக் கண்டுபிடித்து சட்டத்தின் முன் நிறுத்தும் அரசுக்கு ஊடகங்கள் மீது தாக்குதல் நடத்துபவர்களையும், ஊடகவியலாளர்களைக் கடத்துபவர்களையும் கண்டுபிடித்து சட்டத்தின் முன் நிறுத்த முடியாதது ஏன்?

- இவ்வாறு ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க நேற்று நாடாளுமன்றில் கேள்வி எழுப்பினார்.

நாடாளுமன்றில் நேற்று நடைபெற்ற அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாதத்துக்கு நீடிப்பது மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கேள்வி எழுப்பினார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவித்தவை வருமாறு:-

அரசு மாதாமாதம் சாதாரண சட்டத்தின்கீழ் அல்லாது தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி அவசரகாலச் சட்டத்தை செயற்படுத்துகிறது. முன்னர், ஆயுதங்கள் மீட்கப்படவேண்டும் - கைதுசெய்யப்படவேண்டும் எனக்

(27ஆம் பக்கம் பார்க்க)

## மாவை எம்.பியின் கருத்துக்கு இராணுவப் பேச்சாளர் மறுப்பு

கொழும்பு, பெப். 9

யாழ்ப்பாணத்தில் இராணுவத்தினர் பொதுமக்களிடம் பணம் வசூலித்து, குடும்பப் படங்களைப் பிடிக்கின்றனர் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா தெரிவித்துள்ள குற்றச்சாட்டுகளை இராணுவம் நிராகரித்துள்ளது. எனினும் கடந்த ஞாயிற்றுக் கிழமை இராணுவம் தம்மைப் படம் பிடிப்பதற்கு வருமாறு கிராம அலுவலர் மூலமாக உத்தரவிட்டிருந்தது என்று கல்வியங்காடு மற்றும் இருபாலைப் பகுதிகளைச் சேர்ந்த மக்கள் நேற்று மீண்டும் உறுதிப்படுத்தினர். ஒரு தொகுதியினரைப் படம் எடுக்கும் பணிகள் அன்றைய தினம்

(27 ஆம் பக்கம் பார்க்க)

## பிள்ளையைப் பார்க்க லண்டன் சென்றவரே தீயில் கருகிப் பலி

லண்டன், பெப். 09

லண்டனில் தங்கி உள்ள தனது பிள்ளைகள் மற்றும் பேரப்பிள்ளைகளைப் பார்ப்பதற்காக லண்டனுக்கு வருகை தந்திருந்த புதுக்குடியிருப்பைச் சேர்ந்த ஐந்து பிள்ளைகளின் தாயாரே கடந்த வெள்ளிக்கிழமை ஏற்பட்ட தீ விபத்தில் உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர். சந்திரமதி தர்மலிங்கம் (வயது 59) என்பவரே சம்பவத்தில் உயிரிழந்தார்.




கடந்த 6 வருடங்களாக லண்டனில் கணவர் மற்றும் பிள்ளைகளுடன் வசித்து வந்தவரான திருமதி குணாலினி அழகரட்ணமும் (வயது 42) சம்பவத்தில் உயிரிழந்திருந்தார். இவரும் புதுக்குடியிருப்பைச் சேர்ந்தவர். (28 ஆம் பக்கம் பார்க்க)

## 30 ஆயிரம் பசு மாடுகள் கிழக்கில் மாழையால் சாவு

கொழும்பு, பெப். 09

மட்டக்களப்பு மாவட்டத்தில் அடை மழையால் ஏற்பட்ட கடும் வெள்ளம் காரணமாக பெருந்தொகையான கால்நடைகள் இறந்துள்ளன என்று மாவட்ட கால்நடை வைத்திய அதிகாரி நேற்றுத் தெரிவித்தார்.

(28 ஆம் பக்கம் பார்க்க)

## 35 வீதமான நெற்பயிர் மழையினால் அழிவு

கொழும்பு, பெப். 09

ஜனவரி மாத நடுப்பகுதியில் இருந்து இரண்டு தடவைகள் ஏற்பட்ட கன மழை மற்றும் வெள்ளத்தால் நாட்டின் மொத்த நெல் உற்பத்தியில் 35

(27ஆம் பக்கம் பார்க்க)

உதயன்
தொடர்புகளுக்கு
ஆசிரியபீடம்: 021 2229933
தொலைநகல்: 021 2229944
செய்தி/பக்கங்கள்:
021 5679933
021 5679944
விளம்பரம்: 021 5671111
விநியோகம்: 021 5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: admin@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com




அனைத்து மாவட்டங்களிலும் காலநிலை தெளிவாகக் காணப்படும் சாத்தியம் உண்டு.

CSE
COLOMBO STOCK EXCHANGE

பங்குச்சந்தை நிலவரம்
மாசி 08, 2011
பங்குச் சந்தைச் சுட்டிகள்
அனைத்துப்பங்கு(ASPI) 7385.04↑
மிலங்கா(MPI) 7199.09↑
உரிமைமுதல் தகவல்கள்
வியாபாரப்புரள்வு(Rs.) 4361.78Mn
பங்குகளின் அளவு(No.) 131.25Mn
வியாபாரம்(No.) 33089
விலை அசைவுகளின் அடிப்படையில்
அதிகரிப்பு(Top 5 gainers)விலை Rs.
சன்ரேன் மேக்கன்ற் 673.50
செலிங்கோ இன்சுறன்ஸ் 499.30
போட்றெஸ்ற் 30.20
மகாவெலி ரீ ஹோட்டல் 76.50
கொழும்பு இன்வெஸ்ற்மென்ற் 5
குறைவு(Top 5 losers) - விலை Rs.
ஓட்டோறோம் 503.00
அகலவத்தை 100.70
எல்பிரிய 41.90
கீல்ஸ் பூட் 150.00
எஸ் எம் பி லீசிங் (W) 221.20
மேலதிக தகவல்கள்- www.cse.lk

# அவசரகாலச் சட்டத்தை கையில் வைத்துக்கொண்டு அரசியல் பழிவாங்கல்களில் ஈடுபட்டு வருகிறது அரசு

சபையில் கேட்டவை

அரசின் தவறுகளைச் சுட்டிக் காட்டுபவர்களையும் அரசுக்கு எதிராக விமர்சனம் செய்பவர்களையும் அடக்கி ஒடுக்குவதற்காகவே இந்த அரசு அவசரகாலச் சட்டத்தை பயன்படுத்தி வருகின்றது.

அதேவேளை, பொலிஸாரினால் கைது செய்யமுடியாத 16 பாதாளக் கோஷ்டியினர் பலம் பொருந்திய அரசியல்வாதியின் ஆதரவுடன் சுதந்திரமாக நடமாடுகின் றனர் என ஊடகங்கள் வெளிப்படையாகக் கூறுகின்றன. இவர்களைக் கைதுசெய்ய முடி யாத பொலிஸ்மா அதிபர் புஞ்சிப்பொரளையில் நாம் அமைதியாக நடத்திய சாத்வீகப் போராட்டம் மீது குண்டர்கள் தாக்குதல் நடத்தியமைக்கு ஐ.தே.கவின் தான்தோன்றித்தனமான செயலே காரணம் என்று எம்மீதே குற்றம் சுமத்துகின்றார். இதுதான் பொலிஸாரின் சிறந்த சேவை - என்று சாடு கிறார் ஐ.தே.கவின் பிரதித் தலைவர் கரு ஜெயசூரிய.

நாடாளுமன்றம் நேற்று சபாநாயகர் சமல் ராஜபக்ஷ தலைமையில் கூடியது. வழமையான வாய்மூல விடைக்கான கேள்விகளுக்குப் பதிலளிக்கப்பட்ட பின், அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒருமாதகாலத்துக்கு நீடிப்பதற்கான விவாதம் ஆரம்பமானது.பிரதமர் டீ.எம்.ஜயரத்ன அவ சரகாலச்சட்டத்தை நீடிப்பதற்கான காரணங்களை சபையில் சமர்ப்பித்தார்.

வழமையாக இக்குற்றச் சாட்டுக்களைப் பட்டியல் போட்டுக் காட்டும் பிரதமர் இம்முறை எதனையும் கூறவில்லை. பொதுவாக சில பொலிஸ் பிரிவுகளில் ஆயுதங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. விடுதலையான புலி உறுப்பினர்கள்தான் சட்டவிரோதமான செயல்களில் ஈடுபடுகின்றனர் என்று தகவல்கள் கிடைத்துள்ளன எனக் கூறிவிட்டு அமர்ந்துவிட்டார் பிரதமர்.

**சர்வதேச பயங்கரவாதியான கே.பிக்கு இராஜ யோகம்**

யுத்தத்தையும் பயங்கரவாதத்தையும் முடிவுக்குக் கொண்டு வந்து விட்டதாகக் கூறும் அரசு மீண்டும் அவசரகாலச் சட்டத்தை நீடிப்பது ஏன் என்று கேள்வி எழுப்பினார் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரம சிங்க.

63ஆவது சுதந்திர தினத்தைக் கொண்டாடும் அதே தினத்தில் அப்பாவிப் பொதுமக்கள் மீது காட்டுமிராண்டித்தனமான தாக்குதல்களை அரசு கட்டவிழ்த்து விட்டுள்ளது.

அதன்மூலம் 63 வருடங்களின் முன் பெற்ற சுதந்திரத்தைப் பறித்து சர்வாதிகாரத்தை மீண்டும் அரசு அமுலுக்குக் கொண்டுவந்துவிட்டது.

இதனால்தான் சர்வாதிகாரம் தலைதூக்கிவிட்டது. இதற்கு ஒரு உதாரணமாக சர்வதேச பயங்கரவாதியும் புலிகளின் பிரதித் தலைவரான கே.பி. இன்று அரச பாதுகாப்புடன் உலா வருகிறார்.

ஆனால், பயங்கரவாதத்தை ஒழித்து நாட்டிற்கு சுதந்திரத்தைப் பெற்றுக்கொடுத்த சரத் பொன்சேகா இன்று சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். இதுதான் இன்றைய ஜனநாயகம் என்று சாடினார் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க

**அவசர காலச்சட்டத்தின் அர்த்தம் புரியாத அரசு**

சட்டத்தரணியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினரான அப்பாத்துரை விநாயகமூர்த்தி உயர்நீதிமன்ற தீர்ப்புக்களை உதாரணம் காட்டி அவசர காலச் சட்டம் தேவைதானா என்று கேள்வி எழுப்பினார்.

அவசரகாலச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுபவர்களை மூன்று மாதங்களுக்கு மேல் தடுத்து வைத்திருக்க முடியாது. மூன்று மாதங்களுக்குள் நீதிமன்றங்களின் முன் நிறுத்த வேண்டும். வழக்குத் தாக்கல் செய்யப்பட வேண்டும் என உயர்நீதிமன்ற நீதியரசர் சிராணி பண்டாரநாயக்க தீர்ப்பு ஒன்றை வழங்கியுள்ளார்.

ஆனால், இங்கு நீதிமன்றத் தீர்ப்புக்கள் கூட உதா சீனப்படுத்தப்பட்டுள்ளன. எமது இளைஞர் - யுவதிகள் எந்தவிதமான விசாரணைகளும் இன்றி சிறைகளில் அடைத்து வைக்கப்பட்டுள்ளனர்.

புலிகளின் உடைமைகளை மட்டும் அரசுடமையாக்குவதில் ஆர்வம் காட்டுகிற அரசு சிறையில் இருக்கும் தமிழ் இளைஞர்களை விடுவிக்க ஆர்வம் காட்டாதது ஏன் என்று கேள்வி தொடுத்தார் விநாயகமூர்த்தி.

**உயிருக்கு பயந்தவர்கள் அல்லர் நாங்கள்**

ஐக்கிய தேசியக்கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜெய சூரிய பேசும்போது, ஆளும்கட்சி உறுப்பினர்கள் சிலர் இடையூறு செய்தனர்.

ஐயா, நான் ஒரு பௌத்தன். பௌத்த தர்மத்தைக் கடைப்பிடிப்பவன். நல்ல குடும்பத்தில் பிறந்தவன். இந்த சபையில் கூட உறுப்பினர்கள் உரையாற்றும்போது இடையில் நான் குறுக்கிட்டது இல்லை. எனவே, நீங்களும் இதைப் பின்பற்ற வேண்டும் என்று விநயமாகக் கூறினார். இதனால் ஆளும் தரப்பினர் அமைதியடைந்து விட்டனர்.

நாங்கள் கத்திகளையும், குண்டாந்தடிகளையும் துப்பாக்கிகளையும் தூக்குபவர்கள் அல்லர். ஆனால், துப்பாக்கிகளைக் கண்டு அஞ்சி ஒதுங்குபவர்களும் அல்லர். துப்பாக்கிகளுக்கு நெஞ்சை நிமிர்த்திக் காட்டுவோம்.

ஆகவே, அரசு அவசரகாலச் சட்டத்தைக் கையில் வைத்துக் கொண்டு அரசியல் பழிவாங்கல்களில் ஈடுபட்டு வருகின்றது என்றும் கரு ஜயசூரிய வன்மையாகக் கண்டித்தார்.




**ஆளும் கட்சிக்குள் பாய்ந்துவிட்டால் எல்லா வழக்குகளும் வாபஸ்**

எதிர்க்கட்சி உறுப்பினரான தயாசிறீ ஜயசேகர உரையாற்றும் போது சபையில் சூடு பிடித்தது. ஆளும் தரப்பு உறுப்பினர்களுக்கும் தயா சிறி ஜயசேகரவிற்கும் இடை யில் கடும் வாக்குவாதம் ஏற் பட்டது.

இன்றைய அரசியல் சட்டமும் ஒழுங்கும் கேலிக் கூத்தாக்கப்பட்டுள்ளன. அமைதியான ஊர்வலம் நடத்திய எம்மீது அரச ஆதரவுக் குண்டர்கள் தாக்குதல் நடத்தினர். சட்டத்தையும் ஒழுங்கையும் பாதுகாக்க வேண்டிய இராணுவத்தினரும், பொலிஸாரும் கைகட்டி வேடிக்கை பார்த்துக்கொண்டே இருந்தனர் என்று கூறியதோடு ஆளும்கட்சி உறுப்பினர்கள் சிலரின் ஆதரவாளர்களும் அமைப்பாளர்க ளுமே தாக்குதல்களை நடத்தினர் என்று சிலரின் பெயர்களைப் பட்டியல் போட்டுக் காட்டினார்.

இதனால் சபையில் பெரும் சர்ச்சை ஏற்பட்டது. ஆளும் தரப்பினர் கூச்சல் போட்டனர்.

எனினும், தயாசிறி ஜயசேகர விட்டேனா பார் என்று தொடர்ந்து வாதிட்டார்.

இன்று எந்தவிதமான கிரிமினல் குற்றங்களையும் செய்து விட்டு ஆளும் கட்சிக்குத் தாவி விட்டால் தப்பித்துக் கொள்ள முடியும்.

எதிர்க்கட்சியில் இருந்து அரசுடன் ஒட்டிக்கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலருக்கு எதிரான வழக்குகள் வாபஸ் பெறப்பட்டுள்ளன என்றும் சாடினார் தயாசிறி ஜயசேகர.

இதனால் தயாசிறி ஜயசேகரவுக்கும் முன்னாள் சகாக்களுக்கும் இடையில் ஏற்பட்ட மோதல் சுவாரஸ்யமாக இருந்தது.

**உள்ளாடையின்றி சாரம் கட்டியவர்களை கைதுசெய்யும் பொலிஸார்**

தயாசிறி ஜயசேகர மற்றொரு விடயத்தையும் கூறினார். இப்போது உள்ளாடையின்றி சாரம் கட்டிக்கொண்டு செல்பவர்களையும் காலில் செருப்பு இல்லாமல் வீதியில் செல்பவர்களையும் தேடித் தேடி கைதுசெய்து நீதிமன்றத்தில் நிறுத்தும் எமது பொலிஸாரால் காணாமற்போன ஊடகவியலாளர்களைக் கண்டுபிடிக்க முடியவில்லை. ஊடகவியலாளர்களையும், அரசியல்வாதிகளையும் கொலை செய்தவர்களை கண்டுபிடிக்கும் சக்திய்ய மட்டும் இழந்துவிட்டனர் எமது பொலிஸார் என்று சாடினார் தயாசிறி.

**நாங்கள் என்ன கிரிமினல்களா?**

வடக்கு,கிழக்கு மக்கள் தொடர்ச்சியாக பல்வேறு துன்பங்களுக்கு முகம்கொடுத்து அவலப்படுகின்றனர். சுனாமி, யுத்தம், பெருவெள்ளம் என பெரும் பாதிப்புகளுக்கு முகங் கொடுத்துள்ளனர். ஆனால், இவர்களுக்குத் தேவையான அத்தியாவசியத் உதவிகள் வழங்கப்படவில்லை.

உதயன் சபைச் செய்தியாளர்
**இரா. புத்திரசிகாமணி**

இப்படியான சூழலில் பாதுகாப்புப் படையினர் தமிழ் மக்கள்மீது பல்வேறு விதமான கெடுபிடிகளை மேற்கொண்டு வருகின்றனர். எமது மக்களை பொதுவான இடத்திற்கு அழைத்து குடும்பம் குடும்பமாக புகைப்படம் எடுக்கின்றனர். இது ஏன்? இராணுவத்தினரின் இந்தச் செயல் மேலும் பீதியைக் கிளப்பியுள்ளது. நாங்கள் என்ன கிரிமினல்களா? எங்களைப் படம் பிடித்து மாட்டுவதற்கு? இராணுவத்தி னரின் இச்செயல் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என்றார் கிளிநொச்சி மாவட்ட நாடா ளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறீதரன்.

# நிகழ்வுகள்

**வி.கழகங்களுக்கு கூட்டம்**

வலிகாமம் கிழக்கு கோப்பாய் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கான கூட்டம் இன்று புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு பிரதேச செயலக மகாநாட்டு மண்டபத்தில் நடைபெற உள்ளது.

பிரதேச செயலர் ம.பிரதீபன் தலைமையில் நடைபெறவுள்ள கூட்டத்துக்கு சகல விளையாட்டுக் கழகங்களின் பிரதிநிதிகளையும் பங்கேற்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

வருடாந்த பிரதேச விளையாட்டு விழாவை நடத்துவது தொடர்பான கலந்துரையாடலின் பொருட்டே இக் கூட்டம் நடைபெறவுள்ளது.

**நிர்வாக சபைக் கூட்டம்**

தமிழ் மக்கள் பேரவையின் முதலாவது நிர்வாக சபைக் கூட்டம் இன்று புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு கட்சியின் மாவட்ட அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

கட்சியின் தலைவர் சண்முகம் பரமலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இக்கூட்டத்தில் கட்சியின் நடப்பாண்டுக்கான செயற்பாடுகள் பற்றி கட்சியின் பேச்சாளர் பொன்னுச்சாமி கேதீஸ்வரன் உரையாற்றவுள்ளார்.கடந்த 25ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு நடைபெற்ற கட்சியின் அங்குரார்ப்பண நிகழ்வில் நிர்வாக சபை உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப் பட்ட அனைவரையும் தவறாது சமுகமளிக்குமாறு கட்சியின் தலைவர் சண்முகம் பரமலிங்கம் அறிவித்துள்ளார். (ற)

**ப.நோ.கூ.ச. கூட்டம்**

மானிப்பாய் ப.நோ.கூ சங்கத்தின் விசேட பொதுச் சபை கூட்டம் எதிர்வரும் 12ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு சங்கத்தின் தலைவர் ஆ.அப்புத்துரை தலைமையில் இடம்பெறும்.

இதில் சங்கத்தின் நிதி நிலைமை பற்றி ஆராய்வதுடன் சங்கத்தின் காணி கட்டடங்களை பிணையாக வைத்து மக்கள் வங்கியில் எடுத்த கடன் பற்றி ஆராய்ந்து முடிவெடுத்தல் மற்றும் கிராமிய வங்கியின் நிதிநிலைமை தொடர்பாகவும் ஆராய்ந்து முடிவெடுக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ற-302)

# நாட்டில் அரிசிக்குத் தட்டுப்பாடு ஏற்படாது 45 - 50 ரூபாவுக்கே விற்கப்படுகின்றது



## அமைச்சர் நிமல் சிறிபால கூறுகிறார்

கொழும்பு, பெப். 9

நாட்டில் அரிசிக்குத் தட்டுப்பாடு ஏற்படாது. தற்போது 45, 50 ரூபாவுக்கு ஒரு கிலோ அரிசி சந்தையில் கிடைக்கின் றது.

யுத்தம் முடிவுற்றதன் பின்னர் 16 வீத வயல் காணியில் மேலதிகமாக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டது. வெள்ளம், மழை காரணமாக அவற்றில் 16 அல்லது 17 சதவீத வயல் காணிகளே பாதிக்கப்பட்டுள்ளன.

எனவே, அரிசித் தட்டுப்பாடு ஏற்படுவதற்கும் விலை அதிகரிப்புக்கும் இடமில்லை.

- இவ்வாறு நீர்ப்பாசன அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா நேற்றுத் தெரிவித்தார்.

நீர்ப்பாசன, நீர்வள முகாமைத்துவ அமைச்சின் செய்தியாளர் மாநாடு நேற்றுக்காலை கொழும்பு மகாவலி கேந்திர நிலையத்தில் நடைபெற்றது.

அமைச்சர் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

வாழ்க்கைச் செலவைக் கட்டுப்படுத்த அரசு பல நட வடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை வழமைக்குக் கொண்டுவர ஜனாதிபதி செயலணி ஒன்றை அமைத்துள்ளார். வெள்ளம், மழை ஆகியவற்றால் பாதிக்கப்பட்ட சகல துறைகள் குறித்தும் இச்செயலணி கவனம் செலுத்தும்.

குறுகியகால காய்கறி வகைகளை உற்பத்தி செய்வதன் மூலம் காய்கறி விலை உயர்வைக் கட்டுப்படுத்த முடியும். எனவே, நாற்பது நாள்களில் அறுவடை செய்யக்கூடிய காய்கறி வகைகளை உற்பத்திசெய்ய விவசாயிகள் ஊக்குவிக்கப்படுவர் - என்றார். (ஒ-சி)

## இன்று ஐ.தே.க. ஆர்ப்பாட்டம்

கொழும்பு, பெப்.9

ஐக்கிய தேசியக்கட்சியும் அக்கட்சி சார் தொழிற்சங்கங்களும் இணைந்து ஏற்பாடு செய்துள்ள அரசுக்கு எதிரான பெரும் ஆர்ப்பாட்டம் ஒன்று இன்று கொழும்பில் இடம்பெறவுள்ளது.

இன்று பிற்பகல் 3 மணிக்கு கொழும்பு லிப்டன் சுற்றுவட்டத்தில் இந்த ஆர்ப்பாட்டம் இடம் பெறும் என்று ஐ.தே.க. கூறியது.

சரத் பொன்சேகாவின் விடுதலை, வாழ்க்கைச் செலவின அதிகரிப்பு மற்றும் அரசில் இடம் பெறும் ஊழல், மோசடிகள் போன்ற விடயங்களை அடிப்படையாகக் கொண்டே இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்படவுள்ளது என்று அக்கட்சி மேலும் கூறியது.

## ஐ.நா. நிபுணர் குழுவின் வருகை: இலங்கையுடன் தொடர்ந்து பேச்சு

### பான் கீ - மூனின் பேச்சாளர் தெரிவிப்பு

கொழும்பு, பெப்.9

ஐ.நா. நிபுணர் குழு இலங்கைக்கு விஜயம் செய்வது தொடர்பாக இலங்கை அரசுடன் தொடர்ந்து பேச்சுக்கள் இடம்பெற்று வருகின்றன.

- இவ்வாறு ஐ.நாவின் செயலாளர் நாயகம் பான் கீ-மூனின் பேச்சாளர் மார்டின் நெஸ்கி தெரிவித்துள்ளார்.

இந்த விஜயம் தொடர்பாக ஐ.நா. இலங்கையுடன் தொலைபேசி மூலம் பேசி வருகிறதா என்று 'இன்னர் சிற்றி பிரஸ்' இணையதளம் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நிபுணர்கள் குழுவின் பணிகளை மேற்கொள்வதற்கு இலங்கைக்குப் போகவேண்டிய தேவை இல்லை என்றும் மார்டின் 'இன்னர்சிற்றி'க்கு தெரிவித்துள்ளார்.

இந்தக் குழுவின் பயண ஏற்பாடுகள் தொடர்பாக இலங்கை அரசுடன் ஐ.நா. தொடர்ந்து பேசி வருகிறது என்று அவர் கூறினார்.

ஐ.நா. இலங்கை செல்வது விரும்பத்தக்கது என்று பான் கீ-மூனின் பிரதிப் பேச்சாளர் பர்ஹான் ஹக் தெரிவித்துள்ளார். (ஒ-சி)

## உலக உணவுத்திட்டத்தின் கீழ் 6 மாதத்துக்கு உலர் உணவு

கொழும்பு, பெப்.9

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உலக உணவுத் திட்டத்தின் கீழ் ஆறு மாதங்களுக்கு உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்படும். அடுத்தவாரம் முதல் கூட்டுறவுச் சங்கங்கள், ச.தொ.ச. நிலையங்களில் இந்த நிவாரணப் பொருள்கள் விநியோகிக்கப்படும் - இவ்வாறு அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

ஐ.ம.சு.முன்னணியின் செய்தியாளர் மாநாடு நேற்றுக்காலை கொழும்பு மகாவலி கேந்திர நிலையத்தில் நடைபெற்றது. அங்கு அவர் கூறியவை வருமாறு:-

தமது வயல்களைக் காப்புறுதி செய்யாத விவசாயிகளுக்கும் இலவசமாக விதை நெல், உரம் ஆகியன வழங்கப்படும். அதேவேளை, அவர்களுக்கும் உலக உணவுத் திட்டத்தின் கீழ் ஆறு மாதங்களுக்கான உலர் உணவுப் பொருள்களும் வழங்கப்படும் - என்றார்.



முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா கைது செய்யப்பட்டு நேற்றுடன் ஒரு வருடம் பூர்த்தியான நிலையில் அவரை விடுதலை செய்யுமாறு கோரி வெலிக்கடைச் சிறைச்சாலைக்கு முன்னால் நேற்று நடைபெற்ற சத்தியாக்கிரகப் போராட்டம்.

## மீனவர் தாக்குதல்; இந்தியா அதிருப்தி

இலங்கைக் கடற்படையினரால் தமிழக மீனவர்கள் கொல்லப்படுவது குறித்து வெளிவிவகார அமைச்சர் பீரிஸிடம் இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா அதிருப்தி தெரிவித்தார்.

பூட்டான் தலைநகர் திம்புவில் நடைபெறும் சார்க் மாநாட்டில் பங்கேற்றுள்ள இருநாட்டு வெளிவிவகார அமைச்சர்களும் தமிழக மீனவர்கள் பிரச்சினை தொடர்பாக நேற்றுமுன்தினம் சந்தித்துப் பேசினர்.

அப்போதே இந்திய வெளி விவகார அமைச்சர் கிருஷ்ணா இந்தியாவின் அதிருப்தியைத் தெரிவித்தார்.

அதற்குப் பதிலளித்த அமைச்சர் ஜி.எல்.பீரிஸ், அரசுக்குக் கிடைத்துள்ள தகவல்களின்படி இலங்கைக் கடற்படையினர் இந்தச் சம்பவங்களுக்குப் பொறுப்பாளிகள் அல்லர் என்று கூறியுள்ளார்.

செயற்கைக்கோள் ஒளிப்படங்கள் மூலம் இந்தச் சம்பவங்களுக்கு இலங்கைக் கடற்படை பொறுப் பில்லை என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது எனவும் பீரிஸ் தெரிவித்தார்.

## அத்துமீறிக் குடியேறியோரே வெள்ளம், மண்சரிவால் பாதிப்பு

கொழும்பு, பெப். 9

மலையகத்தில் அத்துமீறிக் குடியிருப்பவர்களின் வீடுகளே மண் சரிவில் பாதிக்கப்பட்டுள்ளன. அதே போல் குளங்களின் வான்கதவுகள் திறக்கப்பட்டதால், மின்னேரியா உட்பட பல பிரதேசங்களில் அத்துமீறிக் குடியிருந்தவர்களின் வீடுகளே நீரில் மூழ்கின

-இவ்வாறு நீர்ப்பாசன அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா நேற்றுத் தெரிவித்தார்.

நீர்ப்பாசன, நீர்வள முகாமைத்துவ அமைச்சின் செய்தியாளர் மாநாடு நேற்றுக் காலை கொழும்பு மகாவலி கேந்திர நிலையத்தில் நடைபெற்றது. அங்கு உரையாற்றும்போது அமைச்சர் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

தொடர்மழையால் 57 பிரதான குளங்களுக்கு பெரும் பாதிப்பு எதுவும் ஏற்படவில்லை. சிறு பாதிப்புகளே ஏற்பட்டுள்ளன. ஆனால், 500 சிறு குளங்கள் உடைப்பெடுத்துள்ளன. இவற்றைத் திருத்தும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தற்போது மூன்று போகங்களுக்குத் தேவையான நீர் குளங்களில் இருக்கின்றது. அடுத்த போகத்துக்கு வயல்களுக்கு நீரை வழங்க வாய்க்கால்களைத் திருத்த வேண்டியுள்ளது. அதற்கான நடவடிக்கைகளை இப்போது எமது அமைச்சு மேற்கொண்டு வருகின்றது- என்றார். (ஒ-சி)

## கல்வி நிர்வாக சேவைப் பரீட்சை வயதெல்லை 50ஆக அதிகரிப்பு

அச்சுவேலி, பெப்.9

இலங்கைக் கல்வி நிர்வாக சேவைத் தரம் IIIக்கு விண்ணப்பிப்பதற்கான இறுதித்தினம் எதிர்வரும் 22ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது. வயதெல்லை 45 இலிருந்து 50 வயதுவரை அதிகரிக்கப்பட்டுள்ளது.

இலங்கைக் கல்வி நிர்வாக சேவைத் தரம் III போட் டிப் பரீட்சைக்கு மூன்று வகையில் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. திறந்த போட்டிப் பரீட்சை, மட்டுப்படுத்தப்பட்ட போட் டிப் பரீட்சை, இலங்கை அதிபர் சேவைத் தரம் I இல் உள்ளவர்களுக்கான போட்டிப் பரீட்சை.

இவற்றுக்கான விண்ணப்ப இறுதித் தினம் 31ஆம் திகதி என்று ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருக்கிறது. அத்துடன் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்கான வயதெல்லை 45 என்றும் நிர்ணயிக்கப்பட்டிருந்தது.

விண்ணப்பத் திகதியை நீடிக்க வேண்டும். வயதெல்லையை மேலும் அதிகரிக்க வேண்டும் என்ற இலங்கை தரம் பெற்ற அதிபர் சேவைச் சங்கம் கல்வி அமைச்சரை வலியுறுத்தி கேட்டிருந்தது.

சங்கத்தின் கோரிக்கையையடுத்து கல்வி அமைச்சர் அமைச்சரவைக்கு சமர்ப்பித்திருந்த அமைச்சரவையைப் பத்திரத்தை ஏற்றுக்கொண்டுள்ளது.

அதைத் தொடர்ந்து விண்ணப்பத் திகதி நீடிப்பும் வயது எல்லை நீடிப்பும் செய்யப்பட்டுள்ளது என்று ஜவகர்ஷா தெரிவித்தார். (ஒ-11-323)

சுன்னாகம் - சாவகச்சேரிக்கான

## 775 மார்க்க பஸ் சேவையால் மாணவர், அலுவலர்கள் பாதிப்பு

தென்மராட்சி,பெப். 9

சுன்னாகத்துக்கும் சாவகச்சேரிக்கும் இடையில் சேவையில் ஈடுபடும் இ.போ.ச. பஸ் உரிய நேரத்துக்கு வராமையால் சாவகச்சேரி நகரப் பாடசலைகளில் மாணவர்கள் தாமதமாகவே செல்ல நேரிடுகிறது. அதேவேளை அரச அலுவலர்களும் தாமதமாகவே கடமைக்குச் செல்கின்றனர்.

காலை 7 மணிக்கு சுன்னாகத்தில் இருந்து புறப்பட வேண்டிய 775 மார்க்க பஸ் தாமதமாகப் புறப்படுவதால் காலை 9 மணிக்கே சாவகச்சேரி இந்துக் கல்லூரியை சென்றடைகிறது.

இதனால் ஒரு பாடம் முழுமையாக முடிந்த பின்னரே மாணவர்கள் கல்லூரிகளுக்குச் சென்றடைகின்றனர்.

இதேவேளை இந்த பஸ்ஸில் பயணம் செய்யும் சாவகச்சேரி நகரப் பகுதி அரச திணைக்கள உத்தியோத்தர்களும் தின மும் சிவப்புக் கோட்டுக்கு கீழ் கையொப்பமிட்டு 3 தினங்களுக்கு ஒரு தடவை அரைநாள் விடுமுறைப் படிவம் கொடுக்க வேண்டியுள்ளதாகக் கூறுகின்றனர்.

இந்த பஸ்ஸில் பயணம் செய்யும் மாணவர்களும் அரச உத்தியோகத்தர்களும் மாதாந்த பருவகாலச் சீட்டு (சீசன் ரிக்கெற்) பெற்றுள்ளதால் இந்த மார்க்கத்தில் போக்குவரத்தில் ஈடுபடும் ஒரேயொரு தனியார் பஸ்ஸிலும் பயணிக்க முடியவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-207)

# மெருகூட்டிக் கலை வளர்த்த மெற்றாஸ் மயில்

**அமரர் செல்லையா மெற்றாஸ் மயிலின் முதலாம் ஆண்டு நினைவு தினம் இன்றாகும்.**



கலைக்காகவே பிறந்து அதற்காகவே வாழ்ந்து அமரராகி விட்ட கலைக் காவலன் மெற்றாஸ் மயில் ஒரு தனிப் பெருங் கலைஞன். கலையம்சம் பொருந்திய இவர் கலைகளுக்காற்றிய பணி அளப்பரியது. இவ்வுலக வாழ்க்கையை முற்று முழுதாகக் கலைக்கே அர்ப்பணித்து வாழ்ந்த இவர் மறைந்து இன்று ஓராண்டு பூர்த்தியாகி விட்டது.

மெற்றாஸ் மயில் எல்லோரும் நேசிக்கும் ஒரு கலைஞன்; எல்லோரையும் நேசிக்கும் ஒரு கலைஞன். ஒரு கலைப்பித்தனும்கூட. பாரம்பரிய கலைகளைப் பாதுகாக்க வேண்டுமென்று முழுமூச்சுடன் செயற்பட்ட இவர், அதற்காகப் பாரம்பரிய கலைகள் மேம்மாட்டுக் கழகம் ஒன்றை உருவாக்கி இலை மறை காயாக இருந்த எத்தனையோ தமிழ்க் கலைஞர்களை வெளிக்கொணர்ந்த பெருமையை உடையவர்.

புவியியல் சிறப்புப் பட்டதாரியான இவர், கல்வித் திணைக்களத்தில் பதவிநிலை உத்தியோகத்தராக ஈழத்தின் பல்வேறு பாகங்களிலும் கடமையாற்றியுள்ளார். இவர் ஒரு சிறந்த நாடக நடிகர் மட்டுமின்றி தயாரிப்பாளராகவும் நெறியாள்கை செய்பவராகவும் சிறந்த கிராமியக் கலைப் பாடகராகவும் திகழ்ந்தார். சத்தியவான் சாவித்திரி, வள்ளி திருமணம், அரிச்சந்திரன் மயான காண்டம், கோவலன் கண்ணகி, பவளக்கொடி முதலிய பல நாடகங்களை மேடையேற்றித் தானும் அதில் நடித்துக் கலை வளர்த்த இவர் ஒரு சிறந்த சமூக சேவையாளராகவும் விளங்கியுள்ளார்.

இவரால் மேடையேற்றப்பட்ட நாடகங்களில் 'வேழம்படுத்த வீராங்கனை' பலரது பாராட்டுக்களைப் பெற்றது. இவரது கலைத் திறனைப் பாராட்டி வட கிழக்குப் புனர் வாழ்வு புனரமைப்பு தமிழ் விவகார அமைச்சு ''கலைஞான கேசரி'' என்னும் விருதினை வழங் கிக் கௌரவித் தது.

2001 ஆம் ஆண்டில் ஆளுநர் விருதும் கிடைத்தது.

மங்கிக் கிடந்த கலைகளை வெளிச்சத்துக்குக் கொண்டுவந்த இவர், 'யாம் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்' என்று கடும் முயற்சியால் ஒலிப் பேழைகளிலும் இறுவெட்டுக்களிலும் கலை நிகழ்வுகளை ஆவணப்படுத்தி வெளியிட்டார். அதுமாத்திரமின்றி மூத்த கலைஞர் வரலாறு, ஆனையை அடக்கிய அரியாத்தை, மண்வாசனையில் மூன்று நாடகங்கள், மரபுவழி இசை நாடகங்கள் முதலிய நூல்களையும் வெளியிட்டுள்ளார்.

கலைச் சேவை புரியும் கலைஞர்களை இனங்கண்டு அவர்களுக்கு முடிசூட்டி விழாவெடுத்துப் பொன்னாடை போர்தி மலர் மாலை அணிவித்துச் சிறப்பித்த பெருமை இவரையே சாரும்.

கலைக்காவே வாழ்ந்து மறைந்த அன்னாரது கலைச் சேவைகள் இன்னும் மேம்பாடடைந்து சிறந்து விளங்கிப் பிரகாசிக்கச் செய்வதே நாம் அவருக்குச் செய்யும் கைம்மாறாகும்.

சிவநெறிக் கலாநிதி
இராசையா ஸ்ரீதரன்.

UNIVERSITY OF JAFFNA
SRI LANKA

MEDIA RESOURCE AND TRAINING CENTRE
(Joint venture of the University of Jaffna and the Institute of Further Education (FOJO), Sweden)

**Post of Trainer in Journalism**
(On Contract)

Applications are invited from suitable candidates for the post of Trainer in Journalism (On Contract) in the Media Resource and Training Centre, University of Jaffna upto 25th February 2011

**Qualifications:**
i. A Degree from a recognized University
ii. Should have completed a course in Training of Trainers in Journalism
iii. Possesses minimum of one year experience in print or electronic media or both
• Preference will be given to those who have experience in Teaching of Journalism in recognized Institutions

**Salary: Rs.20,750/- (All inclusive and fixed per month)**

**Selection by interview**

**General Conditions:**

This is a full-time assignment, initially for a period of one year from the date of commencement of the assignment and renewable if the services rendered and work performances during the tenure of assignment are satisfactory.

The appointee will become a contributor to the Employees Provident Fund (EPF). Media Resources and Training Centre will contribute the EPF and the Employees Trust Fund (ETF).

Application forms and other details may be obtained from the office of the *Senior Assistant Registrar/ Academic Establishments, University of Jaffna, Sri-Lanka*, either in person or by post, on a payment of Rs.100/- per application form. Those who wish to obtain application forms by post are requested to send a Money Order/Postal Order drawn in favour of the Bursar, University of Jaffna together with a self addressed stamped envelope 23x10 c.m. in size.

Applications for the above posts shall be sent to the *Senior Assistant Registrar/Academic Establishments, University of Jaffna.*

Applicants from the University System/Government Departments / Corporations and Statutory Board should channel their applications through the Head of the respective Institutions. Incomplete, illegible applications and applications received after the closing date will be rejected without intimation.

(575306)

*Registrar*
*2011.02.07*

### புதிய நியமனம்

வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கு உதவித் திட்டமிடல் பணிப்பாளராக செல்வி கந்தையா ரேணுகாம்பிகை நியமிக்கப்பட்டு நேற்று முன்தினம் கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார். (ஒ-207)

### முன்பள்ளி சிறார்களுக்கு வங்கி சேமிப்புப் புத்தகம்

தென்மராச்சி, பெப்.9

சாவகச்சேரி மக்கள் வங்கிக் கிளை மூலம் தென்மராட்சிப் பிரதேசத்தில் உள்ள முன்பள்ளிகளில் இணைந்துள்ள சிறார்களுக்கு 'இசுறு உதான' சேமிப்புக் கணக்குப் புத்தகங்கள் வழங்கப்படவுள்ளன.

பிரதேசத்தில் உள்ள அனைத்து முன்பள்ளிகளிலும் இவ்வருடம் இணைந்துள்ள சிறார்களின் விவரங்கள் பெறப்பட்டு அவர்களின் பெயர்களுக்கு பணம் செலுத்தி கணக்கு ஆரம்பித்து அதற்குரிய புத்தகங்களைவிரைவில் விநியோகிக்கவுள்ளதாக வங்கி முகாமையாளர் க.சண்முகலிங்கம் தெரிவித்தார். (ஒ-207)

சீட்டிழுப்பு இல.
**2354**
திகதி
**06.02.2011**

**மஹஜன சம்பத**

அலுவலக முடிவுகள்

வெற்றி எழுத்து வெற்றி எண்கள்

**P 4 2 4 9 9 1**

பரிசு அமைப்பு - வலமிருந்து இடமாக

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| சுப்பர் பரிசு | P | 4 | 2 | 4 | 9 | 9 | 1 | ரூபா. 11,119,359/= | பரிசு - |
| 1ம் பரிசுகள் | | 4 | 2 | 4 | 9 | 9 | 1 | ரூபா. 20,00,000/= | பரிசுகள் 01 |
| 2ம் பரிசுகள் | | | 2 | 4 | 9 | 9 | 1 | ரூபா. 100,000/= | பரிசுகள் 05 |
| 3ம் பரிசுகள் | | | | 4 | 9 | 9 | 1 | ரூபா. 10,000/= | பரிசுகள் 73 |
| 4ம் பரிசுகள் | | | | | 9 | 9 | 1 | ரூபா. 1,000/= | பரிசுகள் 699 |
| 5ம் பரிசுகள் | | | | | | 9 | 1 | ரூபா. 100/= | பரிசுகள் 7174 |
| 6ம் பரிசுகள் | | | | | | | 1 | ரூபா. 20/= | பரிசுகள் 70751 |

பரிசு அமைப்பு - இடமிருந்து வலமாக

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 7ம் பரிசுகள் | | 4 | 2 | 4 | 9 | 9 | | ரூபா. 10,000/= | பரிசுகள் 09 |
| 8ம் பரிசுகள் | | 4 | 2 | 4 | 9 | | | ரூபா. 1,000/= | பரிசுகள் 69 |
| 9ம் பரிசுகள் | | 4 | 2 | 4 | | | | ரூபா. 100/= | பரிசுகள் 710 |
| 10ம் பரிசுகள் | | 4 | 2 | | | | | ரூபா. 50/= | பரிசுகள் 7083 |
| 11ம் பரிசுகள் | P | | | | | | | ரூபா. 20/= | பரிசுகள் 28225 |

அடுத்த வார சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூபா.
**11,407,129.00**

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை ரூபா. 7,210,070.00
ஐந்து இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசுத்தொகை அரசாங்க வரி சட்டதிட்டங்களுக்கு உட்படும் பரிசுத்தொகையைப் பெற்றுக்கொள்ள தேசிய அடையாள அட்டை சமர்ப்பிக்கப்பட வேண்டும். வெற்றி பெற்ற டிக்கட், சீட்டிழுப்பு இடம்பெற்ற தினத்தில் இருந்து ஆறு மாதங்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கும் வளமான நாட்டிற்கும்
தேசிய லொத்தர் சபை
234/2 காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி: 2470662, 4607000 Hotline: 2433631

முடிவுகளை அறிய
www.nlb.lk

உ
சிவமயம்

**ஆச்சார்ய அபிஷேக அழைப்பு**

நிகழும் மங்களகரமான விகிர்தி வருஷ தைத்திங்கள் 26ஆம் நாள் (09.02.2011) புதன்கிழமை அஷ்வினி நட்சத்திரம் கூடிய காலை 9மணி 40நிமிடம் முதல் 10மணி 50நிமிடம் வரையுள்ள மீனலக்கின சுபமுகூர்த்த வேளையில் மாவை ஆதீனம் பிரம்மஸ்ரீ துரைச்சாமிக்குருக்கள் தம்பதியரின் பௌத்திரனும் கீரிமலை நகுலேஸ்வரர் ஆதீனம் ராஜராஜஸ்ரீ நகுலேஸ்வரக்குருக்கள் தம்பதியரின் தௌகித்திரனும்

**பிரம்மஸ்ரீ குமாரசாமிக்குருக்கள் தம்பதியரின் புத்திரனுமாகிய**
**சிரஞ்ஜீவி கு.சிவசங்கர் சர்மா (சிவா சர்மா)**
**சிரஞ்ஜீவி கு.உமாசங்கர் சர்மா (உமா சர்மா)**
அவர்களுக்கு
**விஷேஷ தீட்ஷை, நிர்வாண தீட்ஷை, சிவாச்சார்ய அபிஷேகம்**

மாவைக்கந்தன், நகுலாம்பிகை சமேத நகுலேஸ்வரப்பெருமான் அனுக்கிரகத்துடனும் பெரியோர்களது நல்லாசியுடனும் நிச்சயிக்கப்பட்டு மேற்படி சுபமுகூர்த்தம் கீரிமலை நகுலேஸ்வரம் ஆலயத்தில் நடைபெற இருப்பதால் தாங்கள் அத்தருணம் குடும்ப சமேதராக வந்து ஆசி வழங்கி விழாவைச் சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.ஆச்சார்ய அபிஷேக குரு பிரம்மஸ்ரீ தியாக கெங்காதரக்குருக்கள்

தங்கள் நல்வரவை நாடும்!
ராஜராஜஸ்ரீ நகுலேஸ்வரக்குருக்கள் தம்பதியர்
(ஆதீனகர்த்தா நகுலேஸ்வரர் ஆலயம், கீரிமலை)
திருமதி கு.கெங்காதேவி, திரு.திருமதி சு.கணபதீஸ்வரகுரு தம்பதியர்.
திரு.திருமதி வா.பிரபாகர சர்மா தம்பதியர், பிரம்மஸ்ரீ கு.ஸ்ரீசங்கரசர்மா.

இளவாலை வடக்கு,
இளவாலை.

உதயன்

## கால நிலை மாற்றத்துக்கு ஏற்ப நாடு தயாராக வேண்டாமா?

உலக வானிலை அவதான நிறுவனம் விடுத்துள்ள மிகப் பிந்திய அறிவித்தல் ஒன்றின்படி நாட்டின் கால நிலை இன்றிருப்பதிலிருந்து மீள்வதற்கு இன்னும் இரண்டு அல்லது நான்கு மாதங்களாவது எடுக்கும் என்று தெரிகின்றது.

முழுமையான வரண்ட காலநிலையை இப்போதைக்கு எதிர்பார்க்க முடியாது - மழை ஓரளவு குறையலாம் அல்லது கூடலாம். ஆனால் முழுமையான வரட்சி ஏற்பட நாள் பிடிக்கும் என்று எதிர்வு கூறியுள்ளார் இலங்கை வானிலை அவதான நிலையப் பணிப்பாளர் எஸ். எச். காரியவசம்.

சமீப காலத்தில் மழையும் வெள்ளமும் நாட்டை மிக மோசமான நிலைமைக்குக் கொண்டுசென்றுள்ளன. மிகப்பிந்தி ஏற்பட்ட மழை வெள்ளத்தினால் பாதிப்பு ரூ.50 பில்லியனைத்தாண்டியிருக்கும் என்று தெரிவித்துள்ளார் அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் மகிந்த சமரவீர. 2273 வீடுகள் முற்றாக அழிந்துள்ளன. மேலும் 13,148 வீடுகள் பாதியளவு அழிந்துள்ளன என்பது அவரது கணிப்பு.

இந்த கால கட்டடத்தில் அறுவடையாக வேண்டிய நெல் உற்பத்தியில் 20 வீதம் நாசமாகியுள்ளதாகவும் அதேவிதத்தில் மலையகத்தில் காய்கறி வகைகள் அழிந்துள்ளதாகவும் விவசாய அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. அதேவட்டாரங்கள் விடுத்துள்ள செய்திகளின்படி 400 க்கும் மேற்பட்ட சிறிய மற்றும் நடுத்தர நீர்ப்பாசன குளங்களும் அணைக்கட்டுகளும் நாசமாகியுள்ளன. இந்த வகையில் வட மத்திய மாகாணமே மோசமான தாக்கத்துக்குள்ளாகியுள்ளது.

உலகின் பல பகுதிகளையும் காலத்துக்குகாலம் பாதித்துவரும் லா-நினா கால நிலையானது பசுபிக் பெருங்கடற்பகுதியில் தற்போது மையங்கொண்டிருக்கிறது. இனிவரும் சுமார் நான்கு மாதகாலத்தில் அதன் தீவிரத்தன்மை தணிந்துவிடும் என்று கூறப்படுகின்றது.

சமீபகாலமாக நாட்டை வடக்கு - கிழக்கு என்றில்லாமல் சகல பகுதிகளையும் ஒருபிடிபிடித்து முடித்திருக்கிறது காலநிலை - அதனால் உருவான மழை - வெள்ளம் - மண்சரிவுகளால் உயிரிழப்புகளும், விவசாயப்பாதிப்புகளும், வீடுவாசல் நிலபுலன்களின் அழிவுகளும் மக்களை மூச்சுவிட முடியாமல் திக்குமுக்காடச் செய்துள்ளன.

இயற்கையின் விதிகளில் பாகுபாடு இல்லை - அதன் கோரப் பிடிக்குள்ளாபவர் எந்த இனம், மொழி, சமயம், கலாசாரமாக இருந்தாலும்ஒன்று தான் - ஆனால் பாதிக்கப்படும் மக்களுக்கான நிவாரணங்களை வழங்குபவர்களும் , நிர்வகிப்பவர்களும் மனிதர்களே. எனவேதான் துன்பமுற்ற மக்களைக் கவனிப்பதில் அரசும், அதிகாரிகளும், சம்பந்தப்பட்ட அனைவரும் நீதி நியாயத்துடன் பாகுபாடின்றி நடந்து கொள்ளவேண்டும் என்று வற்புறுத்த வேண்டியிருக்கின்றது.

நாடுமுழுவதும் மழை வெள்ளத்தினால் ஏற்பட்ட பாதிப்பு நிலைமைகளை விவரிக்கும் செய்திகள் சில பின்வரும் தலைப்புக்களில் நேற்று நமது பத்திரிகையில் வெளிவந்திருந்தன.

சீரற்ற காலநிலையால் மாத்தளையில் 326 வாவிகள் பெருக்கெடுப்பு, மட்டக்களப்பில் 2,25,000 பேர் முகாம்களில். அரிசித்தட்டுப்பாடு, மலையகத்தில் தேங்காய் விலை உயர்வு, மூதூரில் பாதைகள் முற்றாகப் போக்குவரத்துக்குத்தடை, வீடு இடிந்து குடும்பப் பெண் காயம், நிவாரணம் இன்றி தவிக்கும் மக்கள், அறுவடைக்குத் தயாராய் இருந்த நெல்வயல்கள் திருமலையில் பாதிப்பு, சமைத்த உணவு விநியோகம், மறு அறிவித்தல் வரை பல்கலை கல்வி நடவடிக்கைகள் இடைநிறுத்தம்.

நாடுமுழுவதும் மக்கள் எங்ஙனம் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்பதை எடுத்துக் காட்டும் வகையிலான சிறு குறிப்புகளே இவை. வெளிவராத, எமக்குக் கிடைக்காத, விரிவான செய்திகள் இன்னும் ஏராளம் இருக்கலாம். இந்த நிலைமைகளுக்கு முகம் கொடுத்து மக்களையும் நாட்டையும் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு அரசினுடையது. சரியான சீரான நடவடிக்கைகள் எடுக்கப்படும்போது அவைகளுக்கு ஆக்க பூர்வமான அனுசரணையும் ஆதரவும் வழங்கவேண்டியது எதிர்க்கட்சிகளின் கடமை.

நிலைமை இவ்வாறே தொடருமானால் நாட்டில் பெரிய உணவுத் தட்டுப்பாடு ஒன்று ஏற்படலாம் என்று பலரும் எதிர்வு கூறுகிறார்கள். உணவுக்கு நெல்லையே பெரிதும் நம்பியிருக்கும் மக்கள் பட்டினியை எதிர்கொள்ள அனுமதிக்கக்கூடாது.

கோதுமை மாவை ஒதுக்கிவிட்டு அரிசிமாவை அதிகம் பாவிக்கும்படி சமீபத்தில் அரச தலைவர்கள் சிலர் பொது மக்களுக்கு ஆலோசனை கூறியிருந்தார்கள். நிலைமைமோசமானால் அரிசிக்குத் தட்டுப்பாடு ஏற்படுவது ஒரு புறமிருக்க கோதுமை மாவும் கிடைப்பது அரிதாகலாம்.

சிறிமாவோ பண்டாரநாயக்க அம்மையார் பிரதமராக இருந்த எழுபதுகளில் அரிசிப் பஞ்சம் ஏற்பட்டதால் பாணுக்கும் மாவுக்கும் மக்கள் கடைகளின் முன் ''கியூ'' வரிசைகளில் நின்று தவிக்க நேர்ந்தமை பலருக்கு நினைவிருக்கலாம்.

அரிசியையும் கோதுமை மாவையும் எதிர்பார்க்காமல் மரவள்ளிக் கிழங்கையும் பலாக்காய்- அட்டுகோஸ் வற்றல் போன்றவற்றை சாப்பிட பழகிக் கொள்ளும்படி அரசு தலைவர்கள் மக்களுக்கு அப்போது ஆலோசனை கூறினர்கள்.

அந்த நிலைமை இப்போது ஏற்படக்கூடாது. அரசிக்கும் ஏனைய நுகர்வுப் பொருள்களுக்கும் பஞ்சம் ஏற்படப்போகிறது என்பது முன்கூட்டியே தெரியுமானால் அதற்கேற்ற முறையில் திட்டங்களைத் தீட்டி இப்பொழுதே அரசு மக்களை காப்பாற்றத்தயாராக வேண்டும்.

நாட்டைப் பெரும் நெருக்கடிக்குள்ளாக்கியிருந்த போரின் போது ஆயுதமும் ஆலோசனைகளும் வழங்கியிருந்த இந்தியா, பாகிஸ்தான், சீனா போன்ற நாடுகள் உணவுத் தட்டுப்பாடு நிலைமை ஏற்படுமானால் உதவிக்கு வருமா என்பது தெரியவில்லை. உலக காலநிலை மாற்றம் இந்த நாடுகளையும் பாதிக்காமல் இருக்காது.

அவைகளையே பெரிதும் நம்பி இருப்பது கடைசிநேரத்தில் பயனில்லாமல் போகலாம். அதனால் தான் முன்கூட்டியே நிலைமைகளை சமாளிக்க ஆயத்தமாவது அவசியம் என்று குறிப்பிடவிரும்புகிறோம்.

# தபால் மூலம் வாக்களிப்பதற்கு விண்ணப்பித்தோர் குறைவு

கொழும்பு, பெப்.9

நடந்து முடிந்த தேர்தல்களுடன் ஒப்பிடும் போது இம்முறை தபால்மூல வாக்களிப்புக்கான விண்ணப்பங்கள் 15 வீதமாகக் குறைந்துள்ளதாக சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல் தொடர்பான மக்கள் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரஞ்ஜித் கீர்த்தி தென்னக்கோன் தெரிவிக்கிறார்.

கடந்த ஜனாதிபதித் தேர்திலின் போதும் பொதுத் தேர்தலின்போதும் தேர்தல் பணிகளில் ஈடுபடாதிருந்த அரச ஊழியர்களுக்கு அரசியல் வாதிகளால் விடுக்கப்பட்டுள்ள அச்சுறுத்தல்கள் மற்றும் அழுத்தங்கள் காரணமாவே இம்முறை உள்ளூராட்சித் தேர்தலில் அவர்கள் தமது வாக்குரிமையை நிராகரித்துள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

வாக்குகளை எண்ணும் கடமைகளில் ஈடுபட்ட அரச ஊழியர்களுக்குப் பல்வேறு அழுத்தங்கள் விடுக்கப்பட்டதன் காரணமாக அவர்கள் சுதந்திரமாகத் தமது கடமைகளை மேற்கொண்டுசெல்ல இயலாமல் போனது எனவும்; மாத்தளை, கண்டி, குருநாகல், இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களில் இந்த நிலைப்பாடு கடுமையான தாக்கத்தை ஏற்படுத்தியிருந்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதுவரை காலமும் மிகுந்த உற்சாகத்துடனும் விருப்புடனும் தேர்தல் கடமைகளில் அரச ஊழியர்கள் ஈடுபட்டு வந்துள்ளனரெனவும் தற்போது நிலவும் பாதுகாப்பற்ற தன்மையை அவர்கள் உணர்ந்துகொண்டுள்ளதன் காரணமாக தபால் மூல வாக்களிப்பை நிராகரிப்பதன் ஊடாக அவர்கள் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தியிருப்பதாகவும் கீர்த்தி தென்னக்கோன் தெரிவித்துள்ளார். (த-22)

# சாவகச்சேரி வைத்தியசாலையின் டச்சு வீதி வாசலைத் திறந்து விடுக

தென்மராட்சி, பெப்.9

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் தினமும் நடைபெறும் கிளினிக்குகளில் கலந்து கொள்ளும் நோயாளர்களின் நலன் கருதி டச்சு வீதியில் உள்ள கதவினை கிளினிக் நடைபெறும் நேரங்களில் திறக்குமாறு நோயாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தற்போது கிளினிக்குகள் முன்னைய வெளி நோயாளர்கள் பிரிவு இயங்கிய கட்டடத்தில் இயங்கி வருவதால் நோயாளர்கள் வைத்தியசாலையின் முன் கதவு ஊடாகவே வாகனங்களிலும் நடந்து செல்ல வேண்டியுள்ளது.

இதனால் வைத்தியசாலையின் பின்பகுதியில் டச்சு வீதியுடன் இணைந்துள்ள கதவினை கிளினிக்கு நடைபெறும் நேரங்களில் திறந்து விடுவதால் நோயாளர்கள் சென்றுவரக் கூடியதாக இருக்குமெனத் தெரிவித்தனர்.

இது தொடர்பாக வைத்தியசாலை நிர்வாகத்துடன்தொடர்பு கொண்ட போது வைத்தியசாலையில் வழங்கப்பட்ட பாதுகாப்புச் சேவை ஐந்திலிருந்து இரண்டாகக் குறைக்கப்பட்டதால் பகலில் கடமையாற்றும் பாதுகாப்பு உத்தியோகத்தர் இரு கடமைகளிலும் ஒரே நேரத்தில் கடமையாற்ற முடியாதுள்ளதாகவும் மேலும் ஒரு பாதுகாப்பு உத்தியோகத்தர் கடமையேற்கும் பட்சத்தில் நோயாளர்களின் கோரிக்கை பரிசீலிக்கப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டது. (த-207)

# யாழ்ப்பாணத்தில் 5 இடங்களில் மீன் ஏலவிற்பனை நிலையங்கள்

யாழ்ப்பாணம், பெப்.9

யாழ்.மாவட்டத்தில் ஐந்து இடங்களில் மீன் ஏலவிற்பனை நிலையங்கள் அமைக்கப்படவுள்ளதாக யாழ். மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் இ.ரவீந்திரன் தெரிவித்தார்.

ஜெய்கா நிறுவனத்தினால் இந்த மீன் ஏலவிற்பனை நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன எனவும் கச்சாய், மறவன்புலோ, கற்கோவளம், மண்டைதீவு, புங்குடுதீவு ஆகிய இடங்களிலேயே இவை அமைக்கப்படவுள்ளன எனவும் அவர் மேலும் கூறினார். (த-ரி)

## மீளக்குடியமர்ந்த குடும்பங்களின் விவரம் திரட்டல்

சண்டிலிப்பாய், பெப்.9

வன்னியிலிருந்து வந்து யாழ். மாவட்டத்தில் மீளக்குடியேறிய குடும்பங்களின் காணி, வீடு உட்படக் குடும்ப அங்கத்தவர்களின் விவரங்களைத் திரட்டுவதற்கான ஒழுங்குகளை அரசு மேற்கொண்டுள்ளது.

பிரதேச ரீதியாக கிராம உத்தியோகத்தர் பிரிவுதோறும் இந்த விவரங்கள் கிராம உத்தியோகத்தர் மூலம் திரட்டப்பட்டு வருகின்றன.

மீளக் குடியமர்ந்த குடும்பங்களின் சமூக, பொருளாதாரத் தரவு திரட்டல் 2010/2011 என்ற தலைப்பிலான விண்ணப்பப் படிவங்கள் இடம்பெயர்ந்து மீளக்குடியமர்ந்த மக்களுக்கு தற்பொழுது வழங்கப்பட்டுள்ளன. (த-115)

# வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு திருமலையில் 500 ஏக்கர் நிலம்

கொழும்பு, பெப்.9

திருகோணமலை மாவட்டத்தின் குச்சவெளிக் கரைப் பிரதேசத்தில் 500 ஏக்கர் நிலத்தை 22 வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு வழங்க நிதியமைச்சு தீர்மானித்துள்ளது என உல்லாசப்பயண மேம்பாட்டு அதிகார சபை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இத் தீர்மானத்தின் கீழ் வெளிநாட்டு முதலீட்டாளரொருவர் 25 ஏக்கர் நிலப்பரப் பைக் கொள்வனவு செய்ய முடியும். ஏக்கர் ஒன்றுக்கு 20 மில்லியன் ரூபா என்றவாறு விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளதோடு 99 வருட குத்தகை அடிப்படையில் இந்த விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதாகவும், ஒரே தடவையில் முழுப்பணமும் செலுத்தப்பட வேண்டுமென அவர்களுக்குத் தெரியப்படுத்தப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

யுத்தம் முடிவுற்றதன் பின்னர் குச்சவெளிக் கரைப்பிரதேசத்தில் 48 காணித்துண்டுகள் அப்பிரதேசத்திலுள்ள முதலீட்டாளர்களுக்கு முதலீட்டு யோசனைகளின் அடிப்படையில் வழங்கப்பட்டிருந்தன. அரசின் இப்புதிய திட்டம் காரணமாக அவர்கள் அக் காணித்துண்டுகளை இழக்க வேண்டிய அபாயம் நேரக் கூடும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

அவசியப்படின் அந்த உள்நாட்டு முதலீட்டாளர்களும் இக் காணித்துண்டுகளை ஒரே தடவையில் பணம் செலுத்திக் கொள்வனவு செய்ய முடியும் எனவும் நிதியமைச்சு தெரிவித்துள்ளது.

ஆயினும் நிதியமைச்சு மேற்கொண்டுள்ள இத் தீர்மானம் நியாயமற்றது எனவும் ஏற்கனவே காணித்துண்டுகளைப் பெற்றுள்ள சிலர் அக்காணிகளை அபிவிருத்தி செய்வதற்காக இலட்சக்கணக்கில் பணத்தைச் செலவழித்துள்ளதாகவும், 25 ஏக்கர் கொண்ட நிலப்பரப்பொன்றை ஒரே தடவையில் பணம் செலுத்திக் கொள்வனவு செய்யும் ஆற்றல் உள்நாட்டு முதலீட்டாளர்களுக்கு இல்லையெனவும் ஏற்கனவே அங்கு காணித்துண்டுகளைப் பெற்றுள்ளோர் தெரிவிக்கின்றனர். (த-22)

# யாழ். குடாநாட்டுக்குத் தேவையான போதிய எரிபொருள் கையிருப்பில்

யாழ்ப்பாணம், பெப்.9

யாழ். குடாநாட்டுக்குத் தேவையான போதிய எரிபொருள்கள் கையிருப்பில் உள்ளன. அவை நுகர்வோருக்கு எவ்விதக் கட்டுப்பாடுகளும் இன்றித் தாராளமாக விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

இவ்வாறு தெரிவித்துள்ளார் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் யாழ். பிராந்திய முகாமையாளர்.

ஏ - 9 வீதி ஊடான போக்குவரத்து கடந்த சில தினங்களாகத் தடைப்பட்டிருந்தது. கடந்த ஞாயிற்றுக்கிழமை முதல் அது ஓரளவு சீரடைந்துள்ள போதும் கனரக வாகனங்கள் பயணிப்பதில் சிரமங்கள் எதிர்கொள்ளப்படுகின்றன.

இதனால் எரிபொருள் கொண்டு வருவதில் தாமதங்கள் ஏற்படுமா என அவரிடம் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

கையிருப்பில் இருக்கும் எரிபொருள்கள் சகல எரிபொருள் விற்பனை நிலையங்களுக்கும் வழமை போன்று விநியோகிக்கப்பட்டு வருகின்றன. ஒரு சில விற்பனை நிலையங்களில் எரிபொருள்கள் முடிந்து விட்டதாக தெரிவிக்கப்படுகின்றது. இது அந்த நிலையங்களை நிர்வகிக்கும் முகவர்களின் தவறான செயலாகும்.

எரிபொருள்கள் முடிவடைவதற்கு முன்னர் அதற்கான வழங்கல் கட்டளைகள் மற்றும் காசோலைகளை எமக்கு அனுப்பும்பட்சத்தில் எரிபொருள் உரிய நேரத்துக்கு அனுப்பிவைக்கப்படும்.

எரிபொருள் முடிந்ததன் பின்பே வழங்கற்கட்டளைகளும், காசோலைகளும் எமக்கு அனுப்பிவைக்கப்படுகின்றன. இதனால் அந்த நிலையங்களில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படுகின்றது.

குறிப்பாகப் பெற்றோல் மற்றும் டீசல் என்பன சகல விற்பனை நிலையங்களுக்கும் சீராக விநியோகிக்கப்பட்டுள்ளன. எரிபொருள் விற்பனை நிலைய முகவர்கள் எரிபொருள்களுக்கான வழங்கற் கட்டளைகளை ஒரு நாளைக்கு முன்பே அனுப்பி வைக்க வேண்டும் - என்றார். (த-26)

## புங்குடுதீவு கிழக்கில் கடல் பாசி வளர்ப்பு

யாழ்ப்பாணம், பெப்.9

புங்குடுதீவு கிழக்கில் கடல் பாசி வளர்ப்பு முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இந்தத் திட்டம் கடந்த வாரம் ஆரம்பிக்கப்பட்டதாக கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் இ.ரவீந்திரன் தெரிவித்தார்.

கடல் பாசி கல்முனையிலிருந்து எடுத்து வரப்பட்டு புங்குடுதீவு கிழக்கு கடற்றொழிலாளர் சங்க அங்கத்தவர்களால் வளர்க்கப்பட்டு ஜெலி, வாசனைத்திரவியம் உள்ளிட்ட பல உற்பத்திகளுக்கு இந்தக் கடல் பாசி பயன்படுத்தப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (த-ரி)

## உயர்தரத் தென்னங் கன்றுகள் யாழ்ப்பாணத்தில் விநியோகம்

சண்டிலிப்பாய், பெப்.9

யாழ். மாவட்டத்தில் தென்னம் பயிர்ச்செய்கையை அபிவிருத்தி செய்ய முன்வந்துள்ள தென்னை அபிவிருத்திச் சபை வீட்டுத்தோட்டத்தின் கீழ் பயனாளிகளுக்கு, ஒரு தென்னங் கன்று 50 ரூபா வீதம் உயர் தரத்தைச் சேர்ந்த மூன்று தென்னங் கன்றுகளை வழங்க முன்வந்துள்ளது.


தென்னங் கன்றுகளைப் பெறவிரும்பும் பயனாளிகள் கிராம உத்தியோகத்தர்களிடம் பணத்தைக் கொடுத்து விண்ணப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் ஏற்பட்டுள்ள போர்க் காலச் சூழ்நிலையினால் குடாநாட்டில் பல ஆயிரக்கணக்கான தென்னைகள் அழிக்கப்பட்டுள்ளன.

இதனால் தேங்காய்க்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதுமல்லாமல் அவற்றின் விலையும் அதிகரித்துள்ளது. இதனால் மக்கள் பெரும் பாதிப்புக்குள்ளானார்கள்.

வலி. தென்மேற்குப் பிரதேசத்திலுள்ள மக்களுக்கு தரமான தென்னங்கன்றைப் பெற்றுக்கொடுக்க முன்வந்துள்ள பிரதேச செயலர் தென்னங் கன்றுகளைப் பெற விரும்பும் பயனாளிகள் ஒரு தென்னங் கன்றுக்கு 50 ரூபா வீதம் 150 ரூபாவைக் கிராம உத்தியோகத்தரிடம் கொடுத்து முற்கூட்டியே பதிவு செய்யுமாறு மக்களைக் கேட்டுள்ளார். (த-115)

**சமூக முன்னேற்றத்துக்காக...**



உதவும் மனப்பான்மை: நல்லூர் பிரதேச செயலர் பிரிவின் இந்து ஆலயங்களின் ஒன்றியத்தின் சார்பில் ஆசிமடம் பிள்ளையார் கோயில் வழங்கிய நிதியில் இருந்து வாழ்வாதார உதவியாகக் காலை இழந்த பெண் ஒருவருக்குத் தையல் இயந்திரம் ஒன்று வழங்கப்பட்டது. பிரதேச செயலர் செந்தில்நந்தனன் இதனை வழங்கினார். (த-7)

# புதிய நாணயத் தாள்கள் அடுத்த மாதம் யாழ்ப்பாணத்தில் புழக்கத்துக்கு வரும்

யாழ்ப்பாணம், பெப்.9

இலங்கையின் 63 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு நாட்டின் அபிவிருத்தியைக் குறிக்கும் வகையில் இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட புதிய நாணயத்தாள்கள் அடுத்த மாதம் முதல் யாழ்ப்பாணத்தில் புழக்கத்தில் விடப்படும்.

இந்தத் தகவலை இலங்கை வங்கியின் யாழ்.மேற்றரக்கிளையின் பிரதம முகாமையாளர் ஏ.மகாதேவா தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு -

இலங்கையின் 63 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு புதிய நாணயத் தாள்கள் மத்திய வங்கியினால் வெளியிடப்பட்டுள்ளன.

குடாநாட்டுக்குத் தேவையான நாணயத் தாள்களை இலங்கை மத்திய வங்கியில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு எடுத்துவந்து ஏனைய வங்கிகளுக்கு வழங்கப்படும் பணியை யாழ். ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள இலங்கை வங்கியின் மேற்றரக்கிளையே மேற்கொண்டு வருகிறது. இந்த மாதத்துக்குரிய நாணயத் தாள்கள் சுதந்திர தினத்துக்கு முன்பாக எடுத்து வரப்பட்டுள்ளன.

இதன் காரணமாக இப்போது வெளியிடப்பட்ட புதிய நாணயங்களை உடனடியாகப் புழக்கத்தில் விடமுடியாது. அடுத்த மாதம் அந்தப் புதிய நாணயங்கள் யாழ்ப்பாணத்தில் புழக்கத்தில் விடப்படும் - என்றார். (த-7)

## பெரிய வெங்காயம் இம்முறை அராலியில் நல்ல விளைச்சல்

யாழ்ப்பாணம், பெப்.9

அராலிப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட பெரிய வெங்காயச் செய்கை இம்முறை நல்ல விளைச்சலைக் கொடுத்துள்ளதாக அந்தப் பகுதி விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இந்தப் பெரிய வெங்காயம் அறுவடைக்கு சில நாள்கள் இருக்கையில் அதற்கு முன்னரே விவசாயிகளால் சந்தைக்கு விற்பனைக்கு எடுத்து வரப்பட்டுள்ளது.

சின்ன வெங்காயத்துக்கு ஏற்பட்ட தட்டுப்பாட்டை அடுத்தே விவசாயிகள் இந்த பெரியவெங்காயத்தை அவசர அவசரமாகப் பிடுங்கிச் சந்தைப்படுத்துவதில் ஆர்வம் காட்டியுள்ளனர்.

இந்த வெங்காயம் சந்தைகளில் கிலோ 100 ரூபாவாக விற்பனை செய்யப்படுகின்றது.

இம்முறை அராலியில் வழமையை விடவும் பெரிய வெங்காயச் செய்கை நல்ல விளைச்சலைக் கொடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-26)

## வடமராட்சி கிழக்கு மீனவருக்கு கடற்றொழில் உபகரணங்கள்

யாழ்ப்பாணம், பெப்.9

வடமராட்சி கிழக்கைச் சேர்ந்த மீனவர்களுக்கு 'பாசிக்' நிறுவனத்தினால் கடற்றொழில் உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன.

இதற்கென பயனாளிகள் தெரிவு தற்போது இடம்பெற்று வருவதாக கடற்றொழில் நீரியல் வளத்திணைக்கள உதவிப் பணிப்பாளர் இ.ரவீந்திரன் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்-

53 பேருக்கு மீன்பிடிப் படகுகளும் அவற்றுக்கான இயந்திரங்களும் வழங்கப்படவுள்ளன. இதற்கு ஒவ்வொருவரிடமிருந்தும் 3 லட்சம் ரூபா அறவிடப்படவுள்ளது.

இந்தத் தொகையை மீனவர்கள் பகுதிபகுதியாக நான்கு வருட காலத்தினுள் வட்டியுடன் செலுத்தவேண்டும்.

50 பேருக்கு இலவசமாக கட்டு மரமும், மீன்பிடி வலையும் வழங்கப்படவுள்ளன - என்றார். (த-ரி)

# விவசாய வேலைத் திட்டங்களுக்கு நிதியுதவி பெற்றுத்தர நடவடிக்கை

யாழ்ப்பாணம், பெப்.9

விவசாயத் திணைக்களத்தால் முன்னெடுக்கப்படும் வேலைத் திட்டங்களுக்கு வேண்டிய நிதி உதவியை திணைக்களம் பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கையை தாம் மேற்கொள்வதாக வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி, பிரதி விவசாயப் பணிப்பாளர் எஸ்.சிவகுமாரிடம் தெரிவித்துள்ளார்

திருநெல்வேலியிலுள்ள விவசாயத்திணைக்களத்தினால் முன்னெடுக்கப்படும் விவசாய நடவடிக்கைகளை நேற்று பிற்பகல் அங்கு நேரில் சென்று பார்வையிட்டு அறிந்து கொண்டார் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி.

அங்கு சுமார் 12 ஏக்கர் நிலப்பரப்பில் முன்னெடுக்கப்பட்டுள்ள விவசாய செய்கையை நேரில் அவதானித்த ஆளுநர், அதன் பின்னர் பிரதி விவசாயப் பணிப்பாளர் எஸ். சிவகுமார் தலைமையிலான உயர் அதிகாரிகளுடன் கலந்துரையாடலை மேற்கொண்டார்.

அந்தக் கலந்துரையாடலின் போது விவசாயத் திணைக்களத்தின் செயற்பாடுகள், அதன் முன்னேற்றம் குறித்து ஆளுநர் கேட்டறிந்து கொண்டார்.

அது மட்டுமன்றி விவசாயத் திணைக்களம் முன்னெடுக்கும் வேலைத்திட்டங்களுக்கு வேண்டிய நிதியுதவியை வழங்க நடவடிக்கை எடுப்பதாகவும் ஆளுநர் அதன் போது பிரதிப் பணிப்பாளரிடம் உறுதியளித்தார். (ஒ-14)

# பரீட்சைக்கு 2ஆம் முறை விண்ணப்பிக்க மாணவரை அனுமதிக்காத பாடசாலைகள்

யாழ்ப்பாணம்,பெப்.9

இவ்வாண்டு ஜி.சீ.ஈ சாதாரணதரப் பரீட்சைக்கு இரண்டாவது தடவையாகத் தோற்றும் மாணவர்களின் பரீட்சைக்கான விண்ணப்பங்களை அனுப்பிவைப்பதற்குச் சில பாடசாலைகள் மறுத்து வருவதாக மாணவர்களும் பெற்றோர்களும் தெரிவிக்கின்றனர்.

யாழ்ப்பாணத்தில் உள்ள சில குறிப்பிட்ட பாடசாலைகள் இந்த மாணவர்கள் பரீட்சையில் சித்தியெய்தாவிட்டால் தமது பாடசாலையின் கல்வித்தர நிலையில் வீழ்ச்சி ஏற்படும் என்பதைக் காரணம் காட்டி இதற்கு மறுத்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த ஆண்டு சித்தியடையாத மாணவர்கள் இவ்வாண்டுப் பரீட்சைக்குத் தோற்றுவதற்காகப் பாடசாலைக்கு விண்ணப்பிக்கச் சென்றபோது அதற்கு மறுப்புத் தெரிவிக்கும் சில பாடசாலைகளின் அதிபர்கள் அந்த மாணவர்களைத் தனிப்பட்ட பரீட்சார்த்திகளாக விண்ணப்பிக்குமாறு கூறுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

இவ்வாறான செயற்பாட்டினால் தற்போது அதிகம் பாதிக்கப்பட்டுள்ளவர்கள் வன்னியில் இருந்து இடம்பெயர்ந்து வசிக்கும் மாணவர்களே எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

யாழ்.கல்வி வலயத்திலும் வலிகாமம் கல்வி வலயத்திலும் உள்ள சில பாடசாலைகளிலேயே இவ்வாறு இடம்பெறுவதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

சில பாடசாலைகளில் இவ்வாறான செயற்பாடுகள் காரணமாக மாணவர்களின் எதிர்காலம் பாதிக்கப்படக்கூடிய நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றன. (த-86)

# நயினாதீவு தெற்குப் பகுதிக்கு ஒரு வாரமாக மின்சாரம் தடை

யாழ்ப்பாணம், பெப்.9

நயினாதீவில் தென்பகுதிக்கான மின்விநியோகம் கடந்த ஒருவாரமாகத் தடைப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தினமும் காலை 6.30 மணியில் இருந்து நள்ளிரவு 12 மணி வரை நயினாதீவின் தெற்கு, வடக்கு பகுதிகளுக்கு மின் விநியோகம் இடம் பெறுகின்றது.

இரு பகுதிக்குமான சேவைகளில் தெற்குப் பகுதிக்கான் விநியோகம் அடிக்கடி சீர்குலைவதாகவும் இதனால் மாணவர்களின் கல்வி பாதிக்கப்படுவதாகவும் இந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இங்கு மின் விநியோகச் சேவைக்கென இரண்டு மின் பிறப்பாக்கி இயந்திரங்கள் இருந்த போதும் ஒரு இயந்திரம் தற்போது பழுதடைந்துள்ளதாகவும் அதனாலேயே தென்பகுதிக்கான மின்விநியோகம் தடைப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

தென்பகுதிக்கான விநியோகச் சேவைகள் மட்டுமே இவ்வாறு தடைப்படுவது குறித்து மக்கள் அதிருப்தி தெரிவிக்கின்றனர். (த-7)

# கீரிமலை வைரவர் ஆலயத்துள் திருப்பணிகள்

சண்டிலிப்பாய், பெப்.9


கீரிமலை, கருகம்பனை வைரவர் ஆலயம் பாலஸ்தாபனம் செய்யப்பட்டு திருப்பணி வேலைகள் ஆரம்பமாகித் துரிதமாக நடை பெற்று வருகின்றன.

குடாநாட்டில் வேள்விக்குப் பிரசித்தி பெற்ற, வலி. வடக்கின் கீரிமலைப் பிரதேசத்தில் அமைந்துள்ள இந்த ஆலயம் போர்க்காலச் சூழ்நிலை காரணமாகப் பல வருடங்களாக வேள்வி நடைபெறா மல் மூடப்பட்டிருந்தது.

பாதுகாப்புப் படையினர் அனுமதி வழங்கியதைத் தொடர்ந்து, கடந்த இருவருடங்களாக அங்கு வேள்வி நடைபெற்று வருகின்றது.

பராமரிப்பின்றி சேதமான நிலையிலிருந்த இந்த ஆலயம் கடந்த இரு மாதங்களுக்கு முன்பு பாலஸ் தாபனம் செய்யப்பட்டு தற்பொழுது திருப்பணி வேலைகள் துரிதமாக இடம் பெற்று வருகின்றன. (த-115)

ஒன்றிப்பு...



எல்லா மதமும்: யாழ்.கிறிஸ்தவ ஒன்றியம், கத்தோலிக்க ஒன்றியத்துக்கான மறை மாவட்ட ஆணைக்குழு ஆகியன இணைந்து திருநெல்வேலியில் நடத்திய ஐக்கிய சபைகள் வழிபாட்டில் யாழ்.மறைமாவட்ட ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை, யாழ்.தென்னிந்திய திருச்சபைப் பேராயர் கலாநிதி டானியல் தியாகராசா, ஒன்றியத் தலைவர் அருட்பணி இ.ராஜ்குமார், யாழ். திருச்சபையின் குருமுதல்வர் வணபிதா எஸ்.பி. நேசகுமார் ஆகியோர் கலந்து கொண்டனர். (த-7)

# குளத்திலிருந்து வயோதிபரின் சடலம் மீட்பு

தென்மராட்சி, பெப்.9

குளத்தில் குளிக்கச் சென்ற வயோதிபர் சடலமாக மீட்கப்பட்டார். இந்தச் சம்பவம் கடந்த 6 ஆம் திகதி வரணி நாவற்காட்டில் இடம்பெற்றது.இதே இடத்தைச் சேர்ந்த கதிர வேலு சிவபாதசுந்தரம் (வயது-63) என்னும் வயோதிபரே பலியானவராவார்.

பிரிவுக் கிராம அலுவலர் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததையடுத்து பொலிஸார் ஸ்தலத்திற்குச் சென்று சடலத்தைமீட்டு சாவகச்சேரி ஆதார வைத்திய சாலை சவச்சாலையில் ஒப்படைத்தனர்.

பொலிஸார் நீதவான் முன்னிலையில் அறிக்கை சமர்ப்பித்ததையடுத்து சாவகச்சேரி வைத்தியசாலையில் பிரேத பரிசோதனை நடத்தி சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைத்து நீதிமன்றுக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு நீதிவான் பொலிஸாரைப் பணித்தார். (த-207-122)

# பளையில் குடியமர்ந்தவர்களுக்கு இலவசமாக மின் இணைப்பு வசதி

தென்மராட்சி, பெப். 9

பளைப் பிரதேசத்தில் மீளக் குடியமர்ந்த குடியிருப்பாளர்களுக்கு இலவசமாக மின் இணைப்பு விநியோகிக்கப்படவுள்ளது.

வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட நிதியில் புனர் நிர்மாணிக்கப்பட்டு ஏற்கனவே மின் இணைப்பு பெற்றிருந்த குடியிருப்புகளுக்கு இலவசமாக மின் இணைப்பு வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

முதற்கட்டமாக பளை நகர்ப் பகுதிக் குடியிருப்பாளர்களுக்கு மின் இணைப்பு வழங்கப்படவுள்ளதாகவும் கூறப்பட்டது.

உயர் அழுத்த மின்விநியோகம் பளை வரை மேற்கொள்ளப்பட்டு நகர்ப்பகுதியில் மின் மாற்றி பொருத்தப்பட்டு அப்பகுதிக்கு மின் விநியோகம் வழங்கப்பட்டு வருகின்றது. (த-207)

# நல்லெண்ணெய் விலை உயர்வு

நவாலி, பெப். 9

நல்லெண்ணெயின் விலை கடந்த முதலாம் திகதியிலிருந்து திடீரென 30 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய 350 ரூபாவாக விற்பனை செய்யப்பட்டு வந்த ஒருபோத்தல் நல்லெண்ணை தற்போது 380 ரூபாவாக விற்பனை செய்யப்படுகின்றது.

தென்பகுதியிலும் ஏனைய இடங்களிலும் தொடர்ந்து பெய்து வரும் மழையினால் எள்ளுச் செடிகள் அழிந்தும் பாதிப்பும் அடைந்துள்ளன. இதன் காரணமாக இங்கு எடுத்துவரப்படும் எள்ளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இதனால் இங்கு எள்ளை வைத்திருப்போர் அதன் விலையை அதிகரித்துள்ளனர். இதன் காரணமாகவே எண்ணையின் விலை அதிகரிப்புச் செய்யப்பட்டுள்ளது.

தொடர்ந்து இந்தநிலை நீடிக்குமேயானால் எண்ணையின் விலை மேலும் அதிகரிப்பதுடன் உற்பத்தியாளர்களும் பெரிதும் பாதிக்கப்படும் துர்ப்பாகிய நிலை ஏற்படுமென்று கவலையுடன் தெரிவிக்கப்படுகிறது. (ம-100)

# ஆஸ்பத்திரி வீதி திருத்தப்படவில்லை

யாழ்ப்பாணம், பெப்.9

யாழ்.போதனா வைத்தியசாலையின் வெளிநோயாளர் சிகிச்சைப் பிரிவின் முன்புறம் உள்ள யாழ். ஆஸ்பத்திரி வீதி புனரமைப்புப் பணிகள் இடம் பெற்ற போதும் இந்த வீதியின் முலவைச் சந்தியில் இருந்து கே.கே.எஸ். வீதிச் சந்திவரையான பகுதிகளில் திருத்த வேலைகள் இடம்பெறவில்லை.

இந்தப் பகுதியில் பெரிய குழிகள் உள்ளதால் வாகனப் போக்குவரத்தில் பெரும் சிரமப்படுவதாக வாகனச் சாரதிகள் தெரிவிக்கின்றனர். (த-7)

# மாநகர வீதிகளைப் புனரமைக்க போதிய இயந்திரங்கள் இல்லை

யாழ்ப்பாணம், பெப்.9

மாநகர சபைக்கு நவீனரக இயந்திரங்கள் இல்லாமையால் வீதிப்புனரமைப்புக்களை உரிய முறையில்செய்யமுடியாதுள்ளதாக யாழ்.மாநகர சபை ஆணையாளர் மு.செ.சரவணபவ தெரிவித்தார்.

கடந்தமாதம் இடம்பெற்ற மாதாந்தக் கூட்டத்தில் சபை உறுப்பினர்கள் யாழ்.நகர வீதிகள் மிகவும் மோசமான நிலையில் உள்ளதைச் சுட்டிக் காட்டினார்கள்.

இதற்குப் பதிலளித்த மாநகரச சபை ஆணையாளர் மாநகர சபை எல்லைக்குள் உள்ள வீதிகளைப் புனரமைப்புச் செய்ய வேண்டிய நிலை உள்ளபோதும் அதனைச் சிறந்த முறையில் செய்யக்கூடியதான கனரக இயந்திரங்கள் மாநகர சபையிடம் இல்லை. இதனால் சிறந்த முறையில் வீதிகளைப் புனரமைக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

சபைக்கென பெரிய கனரக இயந்திரங்களைப் பெற்றுக் கொள்ளவேண்டியுள்ளது. அவ்வாறு பெறுவதன் மூலமே எதிர்காலத்தில் வீதி அபிவிருத்திப் பணிகளைச் சிறப்பாக மேற்கொள்ளமுடியும்-என்றார். (த-7)

# கிராமிய வங்கிகளின் சமாசமும் சீனி,சிமெந்து விற்பனையில்

## கூட்டுறவுச் சங்கங்கள் கடனுக்குப் பெறலாம்

யாழ்ப்பாணம், பெப்.9

யாழ்.மாவட்ட கூட்டுறவுக் கிராமிய வங்கிகளின் சமாசம், கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரின் அனுமதியுடன் சீனி, சிமெந்து என்பனவற்றை மொத்தமாக விற்பனை செய்யவுள்ளது.

இதன்படி பொருள்கள் தேவைப்படும் சங்கங்கள் சமாசத்துடன் தொடர்பு கொண்டு கடனாகவும் பணம் செலுத்தியும் பெற்றுக் கெள்ளலாம் என்று சம்பந்தப்பட்ட நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர்.

கிராமிய வங்கிகளின் சமாசம் தனது சேவையை மேலும் விரிவுபடுத்தும் நோக்குடன் இந்த நடவடிக்கையில் ஈடுபடவுள்ளது. (ஒ-10)

# நவீன முறையில் சிறுவர் பூங்கா அமைத்துத்தர கோரிக்கை

கிளிநொச்சி, பெப்.9

கிளிநொச்சி மாவட்டத்தில் தற்பொழுது சிறுவர் பூங்கா எதுவும் இல்லாத நிலையில் நவீன வசதிகளுடன் கூடிய சிறுவர் பூங்கா ஒன்றினை அமைக்க வேண்டுமெனப் பல்வேறு புத்திஜீவிகளும் பொதுமக்களும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நடந்து முடிந்த யுத்தம் காரணமாக ஏராளமான சிறுவர்கள் தாய் தந்தையரை இழந்தும் உறவினர்களை இழந்தும் உளநலன் பாதிக்கப்பட்ட நிலையிலும் காணப்படுவதால் இவ்வாறு பாதிக்கப்பட்ட சிறுவர்கள் விளையாடக் கூடிய வகையில் கிளிநொச்சி நகரினை அண்டிய பகுதிகளிலோ அல்லது கிராமங்களிலோ சிறுவர் பூங்கா, சிறுவர் நூலகம் என எதுவும் இல்லாத நிலையில் பாதிக்கப்பட்ட சிறார்கள் மேலும் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

இச்சிறுவர்களின் எதிர்கால நலனைக் கருத்தில் கொண்டு நவீன வசதிகளுடன் கூடிய சிறுவர் பூங்கா ஒன்றினை நகரினை அண்டிய பகுதியில் அமைக்க வேண்டும் எனப் புத்தியீவிகளும் பொதுமக்களும் தொண்டு நிறுவனங்களிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதனைக் கருத்தில் கொண்டு கரைச்சிப் பிரதேச சபையினரும் மாவட்ட அரச அதிபர், கரைச்சிப் பிரதேச செயலர் ஆகியோர் இதனை இவ்வாண்டுக்குரிய ஒரு தீர்மானமாக எடுத்து கிளிநொச்சிப் பொது விளையாட்டு மைதானத்துக்கு பின்புறமாக உள்ள குமாரசூரியர் சந்தைப்பகுதியில் அமைப்பதற்கு நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

இது தொடர்பாக அண்மையில் மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற மாவட்ட திட்டமிடல் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டதனால் கிளிநொச்சி நகர் குளத்தினை அண்டிய பகுதியில் நீச்சல் தடாகம் மற்றும் இலத்திரனியல் பூங்கா அமைக்கப்பட வேண்டும் எனப் பல்வேறு சமூகத்தினரும் கோரிக்கை விடுத்துள்ளனர். இதனால் யுத்தம் காரணமாகப் பாதிப்படைந்த சிறார்கள் அந்தப் பாதிப்பில் இருந்து மீள வழிகிடைக்கும். (க-6)

மாணவரின் புத்தெழுச்சி...



நல்ல ஒற்றுமை : கிளிநொச்சி கறுக்காய்த்தீவு மகாவித்தியாலயத்தில் கடந்த முதலாம் திகதி நடைபெற்ற வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டியின் போது மாணவர்களது அணிநடை நிகழ்வினைக் காணலாம். (405)

# வன்னியில் சீரற்ற கால நிலையால் நெல் அறுவடை தொடர்ந்து பாதிப்பு

கிளிநொச்சி, பெப்.9

வன்னியில் சீரற்ற காலநிலை தொடர்வதினால் அறுவடைக்குத் தயாரான நிலையில் இருந்த நெற்செய்கை பாதிக்கப்பட்டு வருவதாக விவசாயிகள் கவலை தெரிவித்துவருகின்றனர்.

இவ்வாண்டுக்கான காலபோக நெற்செய்கை என்றுமில்லாதவாறு அதிகளவான நிலப்பரப்பில் பயிரிடப்பட்ட நிலையில் தொடர் வெள்ளப் பெருக்கு, அதனைத் தொடர்ந்து சீரற்ற காலநிலை என்பவற்றால் பல்வேறு நோய்த்தாக்கங்களுக்குள்ளாகிக் கூடுதலான நெற்செய்கைகள் அழிவடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது எஞ்சியுள்ள நிலையில் உள்ள நெற்செய்கையினை அறுவடை செய்ய முடியாத நிலை காணப்படுவதாகவும் தங்களிடம் இருந்த நகை, பணம் என்பனவற்றைக் கொண்டு வங்கிகளில் கடன்களைப் பெற்று இவ்வாண்டு காலபோக நெற்செய்கையினைத் தாங்கள் மேற்கொண்டதாகவும் ஆனால் எதிர்பார்த்த விளைச்சலையோ அல்லது அறுவடையையோ பெற்றுக்கொள்ள முடியாதுள்ளதாகவும் விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர். (க-6)

# கிளி. டிப்போவில் இருந்து கனகபுரம் வீதி சேதம்

கிளிநொச்சி, பெப்.9

கிளிநொச்சி டிப்போச் சந்தியில் இருந்து கனகபுரம் செல்லும் வீதி தொடர் மழையினால் பெரும் சேதம் அடைந்துள்ளது.

இவ்வீதியில் வர்த்தக நிறுவனங்களும் பஸ்தரிப்பிடமும் பொதுச்சந்தையும் அமைந்துள்ளதால் நாளாந்தம் நெருக்கடி மிக்க இவ் வீதியில் மக்களின் போக்குவரத்து அதிகரித்துக் காணப்படுவதால் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாக பயணிகள் தெரிவிக்கின்றனர்.

குண்டும் குழியுமாக இருக்கின்ற இவ்வீதியில் தேங்கி நிற்கின்ற நீர், வாகனங்களின் போக்குவரத்தால் நடந்து செல்பவர்களையும் மோட்டார் சைக்கிளில் செல்பவர்களையும் நனைத்து விடுவதால் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

கூடுதலாக பாடசாலை மாணவர்களும் அலுவலர்களும் பாதிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறன.

இதனால் இப்பிரதான வீதியைப் புனரமைத்து பயணிகளுக்கு உதவ வேண்டும் என பொதுமக்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு கோரிக்கை விடுக்கின்றனர். (405)

## கண்ணீர் அஞ்சலி

வட மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் ஜோன்சன் அவர்களின் அன்புத் தந்தை **கப்றியேல் ஜோசவ்**

அவர்கள் கடந்த 03.02.2011 அன்று இறைபதம் அடைந்த செய்திகேட்டு ஆழ்ந்த துயர் அடைவதுடன் அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

செயலாளர்,
உத்தியோகத்தர்கள்,
ஊழியர், நலன்புரிசங்கம்.

சாவகச்சேரி பிரதேசசபை,
கொடிகாமம்.

## 31ஆம் நாள் நினைவு

அமரர் ஆறுமுகம் யோகராஜ்

தோற்றம் : 28.07.1970
மறைவு : 11.01.2011

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தராகக் கடமையாற்றும் ஆறுமுகம் யோகராணியின் அன்புத் தம்பி ஆ.யோகராஜ் அவர்களின் 31ஆம் நாளான இன்று அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அரசாங்க குடும்ப சுகாதார சேவை
உத்தியோகத்தர் சங்கம், யாழ்ப்பாணம்.

# சமைத்த உணவு விநியோகம்

கிளிநொச்சி, பெப்.9

கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் இயங்கும் அனர்த்த முகாமைத்துவ திணைக்களத்தின் நிதியுதவியுடனும் கரைச்சி வடக்கு ப.நோ.கூட்டுறவு சங்கத்தின் நிதியுதவியுடனும் மழையினால் பாதிக்கப்பட்ட மக்களுக்குச் சமைத்த உணவு கடந்த மூன்று நாள்களாக வழங்கப்பட்டு வருகின்றதாகத் தெரிவிக்கப்படுகிறது. தாழ்வான பிரதேசங்களான பரந்தன், முரசுமோட்டை, கண்டாவளை, கட்டைக்காடு, தட்டுவன்கொட்டி போன்ற பகுதிகளில் வசித்து இடம்பெயர்ந்து பாடசாலைகளில் தங்க வைக்கப்பட்டுள்ள மக்களுக்கே இந்த சமைத்த உணவு வழங்கப்பட்டு வருவதாக மேலும் தெரிவிக்கப்படுகிறது.

## வடமராட்சி வடக்கு ஆயுள்வேத பாதுகாப்புச்சபை
## விசேட பொதுக்கூட்ட ஒன்றுகூடல்

வடமராட்சி வடக்கு ஆயுள்வேத பாதுகாப்புச் சபையின் விசேட பொதுக்கூட்ட ஒன்றுகூடல் 11.02.2011 வெள்ளிக்கிழமை பி.ப. 2.30 மணி தொடக்கம் 4 மணி வரை வடமராட்சி வடக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவிருப்பதனால் வடமராட்சி வடக்கு பிரதேச சபைக்கு உட்பட்ட அனைத்து ஆயுள்வேத மற்றும் மாற்று மருத்துவ வைத்தியர்களையும் தவறாது சமுகம் தந்து ஒத்துழைப்பு நல்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

Dr.பா.சசீந்திரன்
செயலாளர்,
வடமராட்சி வடக்கு ஆயுள்வேத பாதுகாப்புச் சபை

## அழைப்பு

இன்று [2011.02.09] புதன்கிழமை, காலை 11.00 மணிக்கு
திரு. பி.எம். தர்மபிரிய
(உதவிப் பொது முகாமையாளர், வட மத்திய வலயம் - மக்கள் வங்கி)
அவர்களால்
மக்கள் வங்கியின் பளை சேவை நிலையம்
யாழ். வீதி, பளையில்
வைபவரீதியாகத் திறந்துவைக்கப்படவுள்ளது.
இவ்விழாவில் தாங்களும் கலந்து சிறப்பிக்குமாறு
அன்புடன் அழைக்கின்றோம்.

பிராந்திய முகாமையாளர்,
மக்கள் வங்கி,
பிராந்திய தலைமைக்காரியாலயம் (வன்னி),
வவுனியா.

முகாமையாளர்,
மக்கள் வங்கி,
பளை சேவைநிலையம்.

PEOPLE'S BANK
THE PULSE OF THE PEOPLE

# மரதன் ஓட்டப் போட்டி

ஒட்டுசுட்டான் மகாவித்தியாலய மாணவர்களுக்கிடையிலான மரதன் ஓட்டப்போட்டி கொட்டும் மழையிலும் நடைபெற்றது. கற்சிலைமடுவிலிருந்து 3 கிலோ மீற்றர் தூரத்தைக் கடந்து ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயத்தைச் சென்றடைவதற்கான மரதன் ஓட்டப்போட்டியில் அனேகமான மாணவர்கள் கலந்து கொண்டனர். (500)

## 22ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
செல்லப்பா ஆறுமுகம்
(சட்டத்தரணி, கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலய முன்னாள் தர்மகர்த்தா)



தோற்றம்
26.10.1910

மறைவு
11.12.1989

திதி: ஷஷ்டி (09.02.2011

நீ இன்பத்தில் வாழுகின்றாய்
பிறருக்கு துன்பத்தைக் கொடுக்காதே
நல்லதையே நீ நினை உனக்கு
நல்லபலன் கிடைக்கும்
அன்பும் பாசமுமாய் வளர்த்த தந்தையே!
நான்துன்பத்தில் வாழுகின்றேன்
எனக்கு யார் ஆறுதல் கூறுவார் தந்தையே!

அன்னாரின் நினைவாக இன்று (09.02.2011) புதன்கிழமை கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலயத்தில் அன்னதானம் நடைபெறும். அனைவரையும் பங்குகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றேன்.

பிரம்படி ஒழுங்கை,
கொக்குவில்.

திருமதி ஆறுமுகராசா
சறோஜினிதேவி (மகள்)

# நோயாளிகளின் சேவைகளை இலகுவாக்க நடவடிக்கை

## டாக்டர் சத்தியமூர்த்தி தெரிவிப்பு

கிளிநொச்சி,பெப்.9

வவுனியா வைத்தியசாலையில் நோயாளிக்கு இலகுவாக சகல சேவைகளையும் தேவைக்கேற்ப வழங்கும் பொருட்டு பல்வேறு மாற்றங்களை செய்து வருவதாக வைத்தியசாலையின் அத்தியட்சகர் டாக்டர் எஸ்.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

கடந்தவாரம் உத்தியோகத்தர்களுக்கென அமைக்கப்பட்ட புதிய உணவுச்சாலை ஒன்றையும் மற்றும் பால்நிலை வன்முறைக்கு எதிரான முகாமைத்துவ நிலையத்தையும் வைத்தியசாலையில் புதிதாக ஆரம்பிக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரை நிகழ்த்தும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். மேலும் அவர் தெரிவிக்கையில்:

இன்று எமது நாட்டில் இலவச மருத்துவ சேவை நவீன முறையில் வழங்கப்பட்டு வருகின்றது. மருத்துவசேவை நோய் வருமுன் காத்தலும் நோய் வந்த பின் சிகிச்சை என இரு நிலைகளில் வழங்கப்படுகிறது.

ஆனால் எமது பகுதிகளில் நோய் வந்த பின்னர் தான் சிகிச்சைக்கு வருவோர் அதிகரித்துக் காணப்படுகின்றனர். எனவே விரைவானதும் தரமானதுமான சேவை அனைத்து நோயாளிகளிற்கும் இலகுவில் கிடைக்கக்கூடிய அளவுக்கு பல்வேறு பிரிவுகளை எமது வைத்தியசாலையில் அமைத்துள்ளோம்.

வைத்தியர்களினதும் மற்றைய உத்தியோகத்தர்களினதும் அர்ப்பணிப்பான சேவையைக் கொண்டும் இக்கட்டடம் அமைத்துள்ளதாகவும் இன்னும் பல கட்டட வேலைகள் நடைபெற்று வருவதாகவும் அவை பூரணப்படுத்தப்பட்ட பின்பு விடுதிகளின் அளவைக் கூட்ட முடியும் எனவும் தெரிவித்தார்.

தற்போது புற்றுநோய்க்கான சிகிச்சை, நீரிழிவு மற்றும் இதய நோய்களிற்கான சிகிச்சை என்பனவும் வழங்கப்பட்டு வருவதாகவும் இவ் வைத்தியசாலையில் வவுனியா மக்கள் மட்டுமன்றி கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், மதவாச்சி போன்ற மாவட்டங்களில் இருந்தும் நோயாளிகள் வந்து சிகிச்சை பெற்றுவருவதும் விசேட அம்சம் எனவும் மேலும் தெரிவித்தார். (501)

# நானாட்டான் பிரதேச செயலகம் 24 மணி நேரமும் கடமையில்

நானாட்டான், பெப். 9

மன்னார் மாவட்டத்தில் நானாட்டான் பிரதேச மக்களின் வெள்ள நிலைமையைக் கருத்தில் கொண்டு இப்பிரதேச செயலகம் 24 மணிநேரமும் தமது கடமைகளை மேற்கொண்டு வருகின்றது.

பிரதேச செயலாளர் சந்திரஐயர், கணக்காளர் ரூவகரன், நிர்வாகக் கிராம அலுவலர் சந்திரசேகரம், சமூகசேவை அலுவலர் சந்திரபோஸ் ஆகியோர் தலைமையிலான குழுக்கள் 24 மணிநேரமும் கடமையில் ஈடுபட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட அனைத்துக் கிராம அலுவலர்களும் தமது அலுவலகங்களில் கடமையில் ஈடுபட்டுள்ளதுடன் காலை மாலையெனத்தமது பகுதியின்நிலைமை சம்பந்தமான அறிக்கைகளையும் பிரதேச செயலாளருக்கு அனுப்பிவைத்து வருவதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது. (86)

## பேருந்து தரிப்பிடம் இல்லாமையால் பயணிகள் பாதிப்பு

கிளிநொச்சி, பெப். 9

கிளிநொச்சி திரேசா கல்லூரிக்கு முன்பாக பேருந்துத் தரிப்பிடம் இல்லாமையால் பயணிகள் பாதிப்புக்குள்ளாகின்றனர். வணிக நிலையங்களுக்கு முன்னாலும் வீதியோரத்திலும் ஏராளமான பாடசாலை மாணவர்களும் ஆசிரியர்களும் பொதுமக்களும் பேருந்துகளுக்காகக் காத்து நிற்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (க-6)

# சன சமூக நிலையத்தை மீள ஆரம்பிக்குக

கிளிநொச்சி,பெப்.9

கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட கணேசபுரம் கிராமத்தில் இறுதிக் கட்டப் போருக்கு முன்னர் இயங்கி வந்த சன சமூக நிலையம் இதுவரை மீள ஆரம்பிக்கப்படவில்லை.

மக்கள் மீளக் குடியேறி ஒரு வருடமாகும் நிலையிலும் இச் சனசமூக நிலையம் மீள ஆரம்பிக்கப்படாமையால் சனசமூக நிலையச் சேவைகளை மக்கள் பெறமுடியாதுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதுபோன்றே கிளிநொச்சி கந்தசுவாமி கோவிலுக்கு முன்புறமாக இயங்கிய சனசமூக நிலையம் உட்பட கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள பெரும்பாலான சனசமூக நிலையங்கள் மீள ஆரம்பிக்கப்படவில்லை எனவும் இவ்விடயத்தை கவனத்தில் கொண்டு சம்பந்தப்பட்டவர்கள் சனசமூக நிலையங்களை மீள ஆரம்பிக்க நடவடிக்கைகளை எடுப்பதன் ஊடாக அவற்றின் சேவைகளை மக்கள் பெற ஆவன செய்ய வேண்டும் எனப் பொது மக்கள் கோருகின்றனர். (405)

## ஆரம்பம்...



அன்பளிப்பு : கற்சிலைமடு அ.த.க. பாடசாலைக்கு அவுஸ்திரேலிய புலம் பெயர்ந்த மக்களால் ஒரு லட்சத்து 26 ஆயிரம் ரூபா பெறுமதியான நூல்களையும், ஒரு லட்சத்து 40 ஆயிரம் ரூபா பெறுமதியான புகைப்பட பிரதி இயந்திரத்தினையும் பாடசாலை முதல்வர் சி.நாகேந்திரராசாவிடம், கனகபுரம் ஓய்வு பெற்ற கிராம அலுவலரும், வெளிநாட்டு தொடர்பாளருமான மு.சிவனேசன் வழங்கினார். (500)

## வீதி விபத்து அபாயம்

கிளிநொச்சி, பெப். 9

கிளிநொச்சி மத்திய கல்லூரி புனித பெண்கள் திரேசா கல்லூரி, கிளிநொச்சி மகாவித்தியாலயம், பொதுமருத்தவமனை உள்ளிட்ட இடங்களில் ஏ - 9 வீதியினை பயணிகள் கடப்பதற்கு இடப்பட்டிருந்த மஞ்சள் கோடுகள் அழிவடைந்து காணப்படுவதால் பயணிகள் விபத்துக்களை எதிர்கொள்ள வேண்டிய அபாய நிலை காணப்படுகின்றது.

இதனால் வாகனங்கள் நெரிசலாகப் பயணிக்கும்போது வீதியைக் கடக்க முற்படுகின்ற பாடசாலை மாணவர்களும் ஏனைய பாதசாரிகளும் நோயாளிகளும் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (க-6)

# ஆசிரியர்களுக்கான பஸ் சேவையை மீள ஆரம்பிக்குக

## இலங்கை ஆசிரியர் சங்கம் கோரிக்கை

கிளிநொச்சி, பெப். 9

வன்னிப் பகுதியில் கடமையாற்றும் ஆசிரியர்களுக்கான இலவச பஸ் சேவையினை மீள ஆரம்பிக்க வேண்டும் என இலங்கை ஆசிரியர் சங்கச் செயலாளர் ஜோசப் ஸ்ராலின் கோரிக்கை விடுத்துள்ளார்.

கடந்த வருடம் வன்னியில் பாடசாலைகள் மீள ஆரம்பிக்கப்பட்ட போது வவுனியாவில் இருந்தும் யாழ்ப்பாணத்தில் இருந்தும் ஆசிரியர்கள் சென்று வருவதற்கு வடமாகாண ஆளுநரின் ஏற்பாட்டில் இலவச பஸ்சேவை நடத்தப்பட்டது.

அந்தச்சேவை கடந்த டிசெம்பர் 31 இல் முடிவுக்குக் கொண்டு வரப்படுவதாக அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து இலவச பஸ்சேவையை மீளவும் தொடர்ந்து நடத்த வேண்டும் எனக் கோரி கடிதம் ஒன்றினை வடமாகாண ஆளுநருக்கு அனுப்பி வைத்ததாகவும் எனினும் இதுவரை அச்சேவை மீள ஆரம்பிக்கப்படவில்லை எனத் தெரிவித்தார்.

வன்னிப்பகுதிப் பாடசாலைகளில் ஆசிரியர்கள் தங்கி நின்று வேலை செய்வதற்கு விடுதி வசதிகள் எதுவும் இல்லாமை அந்தந்த இடங்களில் வாடகைக்கு வீடுகளைக் கூடப் பெறமுடியாத நிலை என்பன உள்ளதாகவும் அந்நிலையில் இலவச பஸ் சேவை நிறுத்தப்பட்டமை பெரும் பாதிப்பை ஏற்படுத்தியிருக்கிறது.

ஆசிரியர் சேவை தவிர்ந்த வேறு சில சேவையினருக்குத் தொடர்ந்து பஸ்சேவை நடைபெற்று வருவதால் அரச சேவையில் உள்ள ஒரு பகுதியினரைப் புறக்கணிப்பதுவும் 2009 ஆம் ஆண்டின் இறுதியில் சுசில் பிறேம் ஜெயந்த கல்வி அமைச்சராக இருந்தபோது அமைச்சரவையில் தூர இடங்களில் இருந்து பாடசாலை செல்லும் ஆசிரியர்களுக்கு 2500 ரூபா போக்குவரத்துக் கொடுப்பனவு வழங்குவதாகப் பிரேரணை முன்வைக்கப்பட்டது. அதுவும் நடைமுறைப்படுத்தப்படாமையால் பெரும் இன்னல்களுக்கு முகம் கொடுத்து வருவதாகத் தெரிவித்தார்.

எனவே உடனடியாக பஸ் சேவை ஆரம்பிக்கப்படாவிட்டால் எமது அங்கத்தவர்களுடன் கலந்துரையாடி மேலதிக நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டி இருக்கும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (405)

## வதந்திகளை நம்பாதீர்கள்

முல்லைத்தீவு,பெப்.9

முத்துஐயன்கட்டுக்குளம் மழை வெள்ளத்தினால் அபாய நிலையில் உள்ளதாக சில தவறான செய்திகள் பரவி வருவதாக நீர்ப்பாசனத் திணைக்களத்தினர் தெரிவித்தனர். 24 மணிநேரமும் குளம் திணைக்களத்தின் நேரடிக் கண்காணிப்பில் இருந்து வருவதாகவும் மக்கள் அச்சம் கொள்ளத் தேவையில்லையெனவும் குளத்தில் எவ்வித இடையூறும் ஏற்படவில்லை எனவும் தெரிவித்தனர். ஆபத்தான சூழ்நிலை ஏற்படுமேயானால் தாம் ஒலிபெருக்கி மூலம் அறிவிப்பதாகவும் திணைக்களம் தெரிவித்துள்ளது. (500)

# மாணவர்களை ஏற்றாமல் செல்லும் தனியார் பஸ்கள்

கிளிநொச்சி, பெப். 9

கிளிநொச்சி மாவட்டத்தில் பரந்தன் - முல்லைத்தீவு வீதியில் செல்லும் தனியார் பஸ்கள் பாடசாலை மாணவர்களை ஏற்றிச் செல்வதில் புறக்கணிப்புக்களை காட்டி வருகின்றன.

இவ்வீதியில் தருமபுரம் மகா வித்தியாலயம், முரசுமோட்டை முருகானந்தா மகாவித்தியாலயம் போன்ற பெரிய பாடசாலைகளும் சில சிறிய பாடசாலைகளும் உள்ளன.

இப்பாடசாலைகளுக்கு வரும் மாணவர்கள் தனியார் பஸ்களை மறிக்கும் போது ஏற்றாமல் பஸ்கள் செல்கின்றன.

இதனால் இம் மாணவர்கள் பாடசாலைகளுக்குத் தாமதமாகவே வருவதாகப் பாடசாலை அதிபர்கள் தெரிவிக்கின்றனர்.

இவ்வீதியால் வரும் பஸ்களால் கிளிநொச்சி நகரப் பகுதி பாடசாலைகளான கிளிநொச்சி மத்திய கல்லூரி, கிளிநொச்சி புனித திரேசா பெண்கள் கல்லூரி, கிளிநொச்சி மகா வித்தியாலயம் போன்ற பாடசாலைகளுக்கு செல்லும் மாணவர்களே இவ்வாறு புறக்கணிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பாடசாலை முடிவடையும் மாலை வேளைகளிலும் இவ்வாறான நிலையே தொடர்வதாகவும் மாலை 4-5 மணிவரை மாணவர்கள் வீதியோரங்களில் பஸ்சுக்காகக் காத்து நிற்பதாகவும் இலங்கைப் போக்குவரத்துச் சபை பஸ்களும் இந்நேரங்களில் போக்குவரத்தில் ஈடுபடுவதில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதுதவிர தனியார் பஸ்கள் சில உரிய நேரங்களில் உரிய இடங்களிற்கு வராமையால் அலுவலகங்களுக்குச் செல்லும் உத்தியோகத்தர்களும் உரிய நேரங்களில் அலுவலகங்களுக்குச் செல்ல முடியாது பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாகவும் இவ்விடயம் தொடர்பாகச் சம்பந்தப்பட்டவர்களுக்கு பல முறை முறையிட்டும் பயன் எதுவும் கிடைக்கவில்லை எனவும் மாணவர்களும் அலுவலர்களும் தெரிவிக்கின்றனர்.

எனவே இவ்விடயங்களை கவனத்தில் எடுத்து மாணவர்களின் கல்விக்கான போக்குவரத்துக்கு உரிய முறையில் உதவ தனியார் பஸ் உரிமையாளர், சாரதிகளும் இலங்கை போக்குவரத்துச் சபையினரும் முன்வர வேண்டும் எனவும் இலங்கைப் போக்குவரத்துச் சபையினர் பாடசாலை சேவையினை வழங்க முன்வரவேண்டும் எனவும் கோரப்படுகின்றது. (405)

## புயங்கரத்தின் மத்தியில்...



கம்பளைக்கும் நுவரெலியாவுக்கும் இடையிலான பிரதான வீதியில் மண்சரிவு ஏற்பட்டுள்ளது. இந்த வீதியால் நுவரெலியாவுக்குச் செல்லும் வாகனங்கள் தவலந்தன்னையிலிருந்து நவநகர ஊடாக றம்பொடை சென்று நுவரெலியாவுக்குப் பயணிக்கின்றன. (204)

# மாத்தளை அபாய வலயமாகப் பிரகடனம்; மண்சரிவால் 1,175 குடும்பங்கள் நிர்க்கதி

மாத்தளை, பெப்.9

சீரற்ற காலநிலை காரணமாக ஏற்பட்டுள்ள மண்சரிவு, நிலவெடிப்பு, வெள்ளம் ஆகியவற்றால் மாத்தளை மாவட்டம் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இதையடுத்து மாவட்டம் அபாய வலயமாகப் பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.

இரத்தோட்டை, உக்குவளை, யட்டவத்த பிரதேச செயலாளர் பிரிவில் வெள்ளம், கற் குன்றுகள் சரிவு, மண்சரிவு போன்ற ஆபத்துகள் உள்ளதால் அவை அபாய வலயங்களாகப் பிரகடனம் செய்யப்பட்டுள்ளன.

மேலும் தம்புள்ள, கலேவெல, நாவுல பிரதேச செயலாளர் பிரிவுகள் வெள்ள அபாயமுள்ள பகுதிகளாகப் பிரகடனம் செய்யப்பட்டுள்ளன என மாவட்ட அனர்த்த நிவாரண முகாமைத்துவப் பிரிவின் முகாமையாளர் இந்திக ரணவீர தெரிவித்துள்ளார்.

இயற்கை அனர்த்தங்கள் காரணமாக மாவட்டத்தில் இதுவரை 1,175 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

மாத்தளை மாவட்டச் செயலாளர் திருமதி கே.எச்.ஏ. மீகன் முல்லவின் தலைமையில் அவரது பணிமனையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த அவசரக் கூட்டமொன்றின் போதே மேற்கூறிய தகவல்கள் வெளியிடப்பட்டன.

மாவட்டத்தின் பிரதேச செயலாளர்களும் அரசியல்வாதிகளும் ஒன்றிணைந்து பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரண உதவிகளைப் பெற்றுக் கொடுக்கவும் அபாயங்களை எதிர்நோக்கும் பகுதிகளில் உள்ள மக்களுக்கு உரிய அறிவுறுத்தல்களை வழங்கவும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென இந்தக் கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டது.

# சாப்பாடு பரிமாற மறுத்த மனைவியை வெட்டிக் கொன்றவர் பொலிஸில் சரண்

போதையில் வந்த நபரொருவர் தனக்கு உணவு பரிமாற மறுத்த மனைவியை வெட்டிக் கொலை செய்தார் எனக் கூறப்படும் சம்பவம் கடந்த சனிக்கிழமை இரவு தலவாக்கலை சென்கூம்ஸ் தோட்டத்தில் இடம்பெற்றுள்ளது.

லிந்துலை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட தலவாக்கலை சென் கூம்ஸ் தோட்டத்தில் வசிக்கும் நான்கு பிள்ளைகளின் தாயான கிருஷ்ணன் சரோஜா (வயது-30) என்பவரே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார். சந்தேகநபரான கணவர் லிந்துலை பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் தெரிவிக்கப்பட்டவை வருமாறு:-

சம்பவதினம் இரவு போதையுடன் வீட்டுக்கு வந்த சந்தேக நபர் உறங்கிக் கொண்டிருந்த மனைவியை எழுப்பி உணவு பரிமாறும்படி கூறியுள்ளார். அப்போது தூக்கத்திலிருந்த மனைவி உணவை எடுத்து உண்ணுமாறு கூறியுள்ளார்.

இதனால் கோபமடைந்த சந்தேகநபர் கவ்வாத்து கத்தியை எடுத்து உறங்கிக் கொண்டிருந்த மனைவியின் வயிற்றுப் பகுதியில் வெட்டினார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

பெண்ணின் கதறல் கேட்டு குழுமிய அயலவர்கள் அவரை உடனடியாக வைத்தியசாலைக்கு எடுத்துச்சென்றனர். எனினும் வழியிலேயே அவர் உயிரிழந்து விட்டார் எனத் தெரிவிக்கப்பட்டது. சடலம் தற்போது லிந்துலை மாவட்ட வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பாக லிந்துலை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி செல்வகுமார் தலைமையிலான பொலிஸார் விசாரணைகளில் ஈடுபட்டு வருகின்றனர். (எி)

# நிவாரணம் கையளிப்பு

கிழக்கு மாகாணத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக கண்டி, மடவளை கிராமத்தில் சேகரிக்கப்பட்ட நிவாரணப் பொருள்களை மனித உரிமைகள் பொதுச்சேவை ஸ்தாபனத்தின் கண்டிக்கிளை கடந்த சனிக்கிழமை கையளித்தது.

மடவளைக் கிராமத்தை மையமாகக் கொண்டு நிவாரணப் பொருள்கள் சேகரிக்கப்பட்டன என அமைப்பின் கண்டி மாவட்ட அமைப்பாளர் ஏ.ஹனீப் தெரிவித்துள்ளார். இதன் கையளிப்பு வைபவத்தில் மனித உரிமைகள் பொதுசேவைஸ்தாபனத்தின்பணிப்பாளர் நாயகம் டாக்டர் எம்.அஸீம் மற்றும் பலரும் கலந்து கொண்டனர்.

# பல பாதைகள் சேதமடைந்தன

சீரற்ற காலநிலையால் மத்திய மாகாணத்திற்கு உட்பட்ட சுமார் 300 கிலோமீற்றர் தூரமான வீதிகள் சேதமடைந்துள்ளன என மாகாண நெடுஞ்சாலைகள் போக்குவரத்து அமைச்சர் பந்துல யாலேகம தெரிவித்தார்.

மண்சரிவு, வெள்ளப்பெருக்கு காரணமாக மாகாணத்திலுள்ள பிரதான பாதைகள் பல சேதத்துக்குள்ளாகியுள்ளன. குறிப்பாக நுவரெலியா மாவட்டத்திலேயே அதிகளவான வீதிகள் சேதமடைந்துள்ளன. இதனால் சுமார் 16 கோடி 20 இலட்சம் ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளது என அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## திருமண சேவை

சகல இன, மத, குலத்தினருக்கும் விரைவாகவும் துல்லியமாகவும் திருமணம் பொருத்துபவர்கள்

எக்ஸ்பிரஸ் திருமண சேவையினர்

2011 இல் விரிந்து பரந்து செயற்படவுள்ளனர். நீங்கள் செய்யவேண்டியது கீழ்கண்ட முகவரிக்கோ அல்லது தொலைபேசி/ E.mail உங்கள் குறிப்பு, சுயவிவரத்தினை அனுப்பி வைத்தால் உடன் பொருத்திக் கொடுக்கப்படும்.

முகாமையாளர்,
எக்ஸ்பிரஸ் திருமண சேவை, www.expressthirumanam@gmail.com
63, கிளாக்கர் வீதி, பத்தமேனி, அச்சுவேலி. 021 3737399

## கோழிக்குஞ்சு விநியோகம்

தடுப்பு மருந்து போடப்பட்ட தரமான பிறிமா No.1 புறொயிலர் கோழிக்குஞ்சுகள் நியாயமான விலையில் (100/-) 10.02.2011 காலை விநியோகிக்கப்படும். முன்பதிவு செய்யவும்.

| | |
|---|---|
| கட்டிபாம் சென்ரர், வட்டுக்கோட்டை | 0778996085 |
| சன்னதி பாம் சென்ரர், தொண்டமானாறு | 0776904590 |
| நெல்லியடி பல்பொருள் விற்பனை நிலையம், நெல்லியடி | 0774656377 |
| முகுந்தன், பருத்தித்துறை | 0771392593 |
| துர்க்கா பாம், சுன்னாகம் | 0779346599 |

நல்லூர் பாம் சென்ரர், 19, முருகேசர் லேன், நல்லூர். தொ.பே.இல. 021 2226944

## வீடு, காணி விற்பனைக்கு

1. தொண்டமானாறு நடுத்தெரு வீதியில் வீட்டுடன் கூடிய 2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
2. தொண்டமானாறு சுடுகாட்டுப் புலத்தில் (வீரகத்தி மகா வித்தியாலயத்திற்குப் பின்புறமாக) 2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 0770200432

## Computer Express
Institute of Information Technology
No.15 ,Sirampiyady lane, off Stanly Road, (Cosy Hotel 2nd floor) Jaffna.
021 222 8250, 0777222422

### விசேட கட்டணக்கழிவுடன் புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன

- Diploma in Microsoft Office 1000/= 3 Months
- Diploma in Desktop Publishing 1000/= 4 Months
- Diploma in Web Page Designing 1000/= 3 Months
- Diploma in Graphic Designing 1000/= 4 Months
- Diploma in Hardware Engineering 1000/= 3 Months
- Diploma in Auto CAD 1000/= 3 Months
- Diploma in Computer Science 1000/= 4 Months
- Honors Diploma in Computer Science 1000/= 3 Months
- Diploma in Computerized Accounting 1000/= 3 Months

Advances Courses
Diploma in Video Editing 4Months 1000/=
Diploma in Multimedia 4Months 1000/=

சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்.
வரையறுக்கப்படாத கணனிப் பயிற்சி கொழும்பில் இருந்து வருகை தரும் பிரபல விரிவுரையாளர்களினால் வகுப்புகள் நடாத்தப்படும்.

Batch i -09/02/2011 9am or 3pm
Batch ii -11/02/2011 9am or 3pm
Batch iii -12/02/2011 9am or 4pm
Batch iv -13/02/2011 9am or 4pm

15/02/2011க்கு முன் பதிவுகளை மேற்கொள்ளுங்கள்.

மேலும் எமது நிறுவனத்தில்...
Fast track Courses ஆக
1Week course / 1 Month Course
Monday to Friday 9Am to 3.30Pm
Diploma in Graphic Designing
Diploma in Video Editing
Diploma in Hardware Engineering
Diploma in Acc.Package.
Course Fee 1000/=

மேலதிக விபரங்களுக்கு எமது நிறுவனத்துடன் தொடர்புகொள்ளுங்கள்...

கணக்கியல் ஆர்வலர்கள்; பல்கலைகழக மாணவர்கள்;
உயர்தொழினுட்பக்கல்லூரி மாணவர்கள்; மற்றும்
கணனிக்கணக்கியல்துறையில் வேலைவாய்ப்பை எதிர்பார்த்திருப்போருக்கான.........

Diploma in Computerized Accounting
ACCPAC + Quick Book + MYOB
Accounting புதிய பிரிவுகள் ஆரம்பம்
12/02/2011 13/02/2011 02PM
C.Fee -1000/=

## தவறிவிட்டது

ஏழாலை மேற்கு, ஏழாலையைச் சேர்ந்த கமலநாதன் ரவிக்குமார் என்பவரது தே.அ.அ. (710684359V) யாழ்ப்பாணத்தில் இருந்து ஏழாலைக்கு செல்லும் வழியில் பஸ்ஸில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தந்துதவவும்.

தொடர்பு: ஜேரட்ணம் ரவீந்திரன், ஏழாலை மேற்கு, ஏழாலை.
T.P. 0774397242, 0776696188

## மணமகள் தேவை

76 இல் பிறந்த, 12 இல் சூரியனும் செவ்வாயும் 20 ¾ பாவமுடைய கனடா பிரஜா உரிமைபெற்று வந்துள்ள மணமகனுக்கு படித்த, அழகான மணமகள் தேவை.

தொடர்பு: கமலக்கண்ணன் திருமணசேவை, இல.171/7, மனோன்மணி அம்மன் கோயிலடி, நல்லூர். T.P. 0776070862

## கோழிக்குஞ்சு விநியோகம்

35 நாளில் 2Kgக்கு மேல் வளர்ச்சியடையக் கூடிய No.1 பிராய்லர் குஞ்சுகள் 09.02.2011இல் விநியோகிக்கப்படும். பதிவுகளை முன்கூட்டியே மேற்கொள்ளவும்.

ராஜீவ்
நவாலி வீதி, ஆனைக்கோட்டை,
தொ.பே: 0776090926,
021222 2867

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 1952.03.03
மறைவு: 2009.02.01

திதி: 09.02.2011

அமரர்
சடையர் சுப்பிரமணியம்
(பனை அபிவிருத்திச் சபை உத்தியோகத்தர்)



மனிதரில் மாணிக்கமாய் மாந்தருள் திலகமாய் புனிதவாழ்வு வாழ்ந்த எங்கள் அன்புத் தெய்வமே!
காத்திருந்து அரவணைத்த கைகள்
காலமெல்லாம் எம்மைவிட்டுப் பிரிந்ததேனோ
மலர்ந்த வதனச் சிரிப்பை வாழ்நாளில்
காணக் கிடைக்குமா?

வைத்தியசாலை அருகில்,
பிரதான வீதி, அச்சுவேலி தெற்கு,
அச்சுவேலி.

குடும்பத்தினர்

# கிழக்கு மாகாணத்தின் வெள்ளத்தினால் ஊர் மனைகளுக்குள் புகுந்த முதலைகள்

மட்டக்களப்பு, பெப்.9

கிழக்கு மாகாணத்தில் பெய்து வரும் மழை காரணமாக வாவிகளிலும் ஆறுகளிலும் நீர்மட்டம் உயர்ந்து மக்கள் குடியிருப்புப் பகுதிகளில் வெள்ளம் புகுந்துள்ள நிலையில் அங்கு முதலைகள் மற்றும் பாம்புகளின் நடமாட்டமும் அதிகரித்துள்ளது.

வெள்ளம் காரணமாகத் தமது இருப்பிடங்களை விட்டு வெளியேறியுள்ள மக்கள் வீடுகளைப் பார்வையிடச் சென்றிருந்தபோது முதலைகளின் நடமாட்டத்தை அங்கு காணமுடிவதாகக் கூறுகின்றார்கள்.

வாவி மற்றும் ஆறுகளை அண்மித்த பகுதிகளில் முதலைகளின் நடமாட்டம் அதிகரித்துள்ள நிலையில் தங்கள் கால்நடைகளும் வளர்ப்புப் பிராணிகளும் முதலைகளினால் இழுத்துச் செல்லப்பட்டுள்ளன என நலன்புரி முகாம்களில் தங்கியுள்ள மக்கள் கூறுகின்றார்கள்.

கடந்த சனிக்கிழமை இரவு கொக்கட்டிச்சோலை பிரதேசத்திலுள்ள அம்பிளாந்துறை கிராமத்தில் இரு பிள்ளைகளின் தந்தையான விவசாயி நாகப்பன் பரமானந்தம் முதலைக்கடிக்கு இலக்காகி களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

தனது வீடு வெள்ளத்தால் சூழப்பட்டுள்ள நிலையில் வீட்டிற்கு வெளியேயுள்ள மலசல கூடத்திற்குச் சென்று சுத்தம் செய்வதற்காக பாத்திரமொன்றில் வெள்ள நீரை அள்ளியபோது முதலையொன்று தனது கையைக் கவ்வியது என அவர் கூறியுள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் பெய்து வரும் மழை மற்றும் வெள்ளம் காரணமாக பாம்புகளின் நடமாட்டமும் அதிகரித்துள்ளன. இந்தநிலையில் சிறுவன் ஒருவன் பாம்புக் கடிக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார். மேலும் இரண்டு சிறுவர்கள் காயமடைந்துள்ளார்கள்.

கிழக்கு மாகாணத்தில் வெள்ள நீர் வடிந்து ஓடுவதற்கான அறிகுறிகள் தென்பட்டாலும் தொடரும் சீரற்ற காலநிலையால் மக்கள் தமது வீடுகளுக்குத் திரும்பத் தயங்குகின்றனர்.

# கிழக்கில் அடைமழை; செங்கல் உற்பத்தி பாதிப்பு

மட்டக்களப்பு, பெப்.9

கிழக்கு மாகாணத்தில் பெய்து வரும் அடைமழையின் காரணமாக செங்கல் உற்பத்தித் தொழிலில் ஈடுபட்டுள்ள பல்லாயிரக் கணக்கான தொழிலாளிகள் தொழில் ரீதியாகப் பாதிக்கப்பட்டுள்ளதாகக் கவலை தெரிவிக்கின்றனர்.

செங்கல் உற்பத்தித்துறையில் பிரசித்திபெற்று விளங்கும் சம்மாந்துறை, நெயினாகாடு, மல்கம்பட்டி, கல்லரிச்சல், செந்நெல்கிராமம், மல்வத்தை, வளத்தாப்பட்டி ஆகிய பிரதேசங்களில் காணப்படும் 700 செங்கல்வாடிகள் அனைத்தும் நீரில் மூழ்கிக் காணப்படுகின்றன.

இதனால் களத்தில் செங்கற்களை வெட்ட முடியாதிருப்பதாகவும் அவ்வாறு வெட்டப்படும் கற்களை உலர வைப்பதற்கான வெயில் இல்லாதிருப்பதாகவும் செங்கல் உற்பத்தித் தொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

ஏற்கனவே வெட்டி உலர வைக்கப்பட்ட கற்களைக் கூட பற்ற வைக்க முடியாதுள்ளது. முக்கிய மூலப் பொருளான உமி மழையில் நனைந்து ஈரப்பதத்தில் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

3 ஆயிரம் செங்கற்கள் 1,300 ரூபாய் தொடக்கம் 1,500ரூபாய் வரை விலை உயர்ந்து காணப்படுகின்றன.

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட செங்கல் வாடிகளை புனரமைக்க அரசு நிவாரணங்களை வழங்க வேண்டுமென செங்கல் உற்பத்தியாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (204)

# நிவாரணம் வழங்க உத்தரவு

திருகோணமலை,பெப்.9

மூன்று நாள்களுக்கு வழங்கப்படும் உலர் உணவு நிவாரணங்களை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஐந்து நாள்களுக்குத் தொடர்ச்சியாக வழங்குமாறு அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சர் மஹிந்த அமரவீர பிரதேச செயலாளர்களுக்கு கடந்த ஞாயிற்றுக்கிழமை உத்தரவிட்டுள்ளார்.

திருகோணமலை மாவட்ட செயலகத்தில் வெள்ள அனர்த்தம் தொடர்பான உயர் மட்டக் கூட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் இடம்பெற்றபோதே அவர் மேற்கண்டவாறு உத்தரவிட்டுள்ளார்.

மாவட்ட அரசாங்க அதிபர் மேஜர் ஜெனரல் ரஞ்சித் சில்வா தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில், கிழக்கு மாகாண ஆளுநர் ரியர் அட்மிரல் மொஹான் விஜய விக்ரம, அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சர் மஹிந்த அமரவீர, நீதியமைச்சர் ரவூப் ஹக்கீம், பிரதி அமைச்சர்களான சுசந்த புஞ்சிநிலமே, எம்.கே.டி.எஸ்.குணவர்த்தன, நாடாளுமன்ற உறுப்பினர்களான நாமல் ராஜபக்ஷ, எம்.எஸ்.தௌபீக் மற்றும் பொலிஸ் மா அதிபர் மஹிந்த பாலசூரிய ஆகியோர் கலந்துகொண்டனர். (204)

## மூழ்கும் நிலையில்...



அம்பாறை மாவட்டத்தில் சாய்ந்தமருது ஆழிப்பேரலை வீடமைப்புத் தொகுதியும் அதன் சூழலும் பெரு வெள்ளத்தில் அமிழ்ந்து காணப்படுகின்றன.

# தடம்புரண்டு வயலில் வீழ்ந்த லொறி

மட்டக்களப்பு,பெப்.9

நிந்தவூரிலிருந்து அட்டாளைச்சேனை நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த லொறியொன்று நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நண்பகல் வீதியிலிருந்து தடம்புரண்டு வயற் காணியில் வீழ்ந்து விபத்துக்குள்ளானது.

ஒலுவில் தென்கிழக்குப் பல்கலைக் கழகத்திலிருந்து சில நூறு மீற்றர் தூரத்திலுள்ள கல்முனை அக்கரைப்பற்று பிரதான வீதியிலேயே இந்த விபத்து இடம் பெற்றுள்ளது.

அரிசி மூடைகளை ஏற்றிச் சென்ற இந்த லொறியின் பாகமொன்று திடீரென உடைந்ததையடுத்தே குறித்த வாகனம் தடம்புரண்டுள்ளது. எனினும் அதிஷ்டவசமாக குறித்த வாகனத்தில் பயணித்த சாரதியும் மற்றொருவரும் ஆபத்துக்கள் எதுவுமின்றி உயிர்தப்பியுள்ளனர்.

இந்த விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை சம்மாந்துறைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (204)

# மஹிந்த சிந்தனை வேலைத்திட்டத்தில் இளைஞர்களுக்கு வீடுகள்

மஹிந்த சிந்தனை வேலைத் திட்டத்தின் கீழ், இளைஞர் விவகார திறன் அபிவிருத்தி அமைச்சின் அனுசரணையுடன் தேசிய இளைஞர் சேவை மன்றம் ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவுகளிலும் ஓர் இளைஞருக்கு ஒரு வீடு அமைக்கும் வேலைத்திட்டத்தை அமுல்படுத்தவுள்ளது.

இந்த ஆண்டை இலங்கையின் இளைஞர்கள் ஆண்டாகக் கொண்டு இலங்கையிலுள்ள 332 பிரதேச செயலகப் பிரிவுகளிலும் 332 வீடமைக்கும் வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. இளைஞர் சேவை மன்றத்தில் இளைஞராகப் பதிவு செய்யப்பட்ட அங்கத்தவர் ஒருவருக்கு ஒரு வீட்டை அமைப்பதற்காக ஒரு லட்சம் ரூபா வீதம் ஒவ்வொரு பிரதேச செயலகத்திற்கும் வழங்கப்படவுள்ளது.

இந்த வீடமைப்பானது எதிர்வரும் மார்ச் மாதம் ஆரம்பிக்கப்பட்டு ஜூன் மாதம் முடிவடைய வேண்டும் என்பது தொடர்பான சுற்றுநிருபம் அனைத்துப் பிரதேச செயலகங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இதற்கமைவாக அம்பாறை மாவட்டத்திலுள்ள 20 பிரதேச செயலகங்களிலும் 20 வீடுகள் அமைக்கப்படவுள்ளன. (204)

# மோட்டார் சைக்கிள் விபத்தில் நால்வர் படுகாயம்

திருகோணமலை, பெப்.9

கிண்ணியாப் பிரதேசத்தில் இரு மோட்டார் சைக்கிள்கள் ஒன்றுடன் ஒன்று மோதிக்கொண்டதில் படுகாயமடைந்த நால்வர் கிண்ணியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்துச் சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை கிண்ணியா பிரதான வீதியில் இடம்பெற்றுள்ளது.

படுகாயமடைந்த நால்வரில் மூவர் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை காலை மேலதிக சிகிச்சைக்காக திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர் என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ளி)

# மழை குறைந்தது; மக்கள் தொடர்ந்து அவலத்தில்

அம்பாறை,பெப்.9

அம்பாறை மாவட்டத்தில் நேற்று மழை ஓரளவு குறைந்துள்ள போதிலும் சில இடங்களில் இன்னும் வெள்ளம் வடியாத நிலையே உள்ளது. அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களின் எல்லைக் கிராமமான துறைநீலாவணையைச் சுற்றியுள்ள நீர்நிலைகள் பெருக்கெடுத்துள்ளன. இதனால் இப் பிரதேசத்திலுள்ள கண்ணகியம்மன் ஆலயம் முற்றாக வெள்ளத்தினால் சூழப்பட்டுள்ளதோடு, அதன் சுற்றுமதில்களும் இடிந்து விழுந்துள்ளன.

மருதமுனைப் பகுதியின் சில இடங்களில் வெள்ளம் வடியாமலுள்ளதால் மக்கள் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர். சுனாமி வீட்டுத் திட்டங்கள் அமைந்துள்ள மேட்டுவட்டைப் பகுதியில் வெள்ளம் இன்னும் வடியாத நிலையிலேயே உள்ளது.

இந்த நிலையில், அம்பாறை மாவட்டத்தின் பல இடங்களில் கடலுக்கும் - நிலத்துக்கும் இடையிலான பகுதிகள் உடைப்பெடுத்துள்ளன. நிலப்பகுதியிலிருந்து கடலினை நோக்கி வெள்ள நீர் வேகமாக நகர்ந்து வருகின்றமையினையடுத்தே இந்தநிலை ஏற்பட்டுள்ளதாக அந்தப் பகுதி மக்கள் கூறுகின்றனர்.

வெள்ளம் ஓரளவு வடிந்து வரும் நிலையில் - தமது குடியிருப்புக்களுக்கான அடிப்படை வசதிகள் இல்லாத காரணத்தினாலேயே தாம் தொடர்ந்தும் நலன்புரி முகாம்களில் தங்கியிருக்க வேண்டியுள்ளதாக, பாண்டிருப்பு மேட்டு வட்டைப் பகுதி ஆழிப்பேரலை வீட்டுத்திட்டக் குடியிருப்பாளர்கள் தெரிவிக்கின்றனர்.

அம்பாறை மாவட்டத்தின் கல்முனைப் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பாண்டிருப்பு மேட்டுவட்டைப் பகுதியில் குடியிருக்கும் பொதுமக்கள் - வெள்ளத்தினால் இடம்பெயர்ந்து தற்போது பாண்டிருப்பு ஹிந்து மகாவித்தியாலயத்தில் தங்கியுள்ளனர்.

வெள்ளத்தினால் மூழ்கியிருந்த இவர்களின் குடியிருப்புப் பகுதியில் தற்போது நீர் ஓரளவு வடிந்து வருகின்ற போதிலும், குடிதண்ணீர் வசதியின்மை மற்றும் பாம்புகளின் அச்சம் காரணமாகவே தாம் இன்னும் நலன்புரி நிலையத்தில் தங்கியிருப்பதாக இவர்கள் தெரிவிக்கின்றனர்.

வீடுகளுக்குள் இருந்து கொண்டேனும் தமது உணவினைச் சமைத்துக் கொள்வதற்கு குடிதண்ணீர் வசதிகள் இல்லையென்றும் இதனால் - நீண்ட தூரம் பயணித்தே தமக்கான குடிதண்ணீரைப் பெற வேண்டியுள்ளதாகவும் இவர்கள் கூறுகின்றனர்.

வெள்ளத்தின் காரணமாக இந்தப் பகுதியில் பாம்புகளின் அச்சுறுத்தல் அதிகரித்துள்ளது. கடந்த சில நாள்களாக இந்தப் பகுதியிலுள்ள பொதுமக்கள் சிலர் பாம்புக்கடிக்கு உள்ளாகியமை குறிப்பிடத்தக்கது. (204)

# வங்கியில் நகைகளை அடகுவைத்து ரூ.82 லட்சம் மோசடி; மூவர் கைது

கொழும்பு, பெப்.9

இளம் வர்த்தகர் ஒருவர் தனது மனைவி, மாமி, பணிப்பெண் மூலமாக அரச வங்கிகளில் போலி நகைகளை அடகு வைத்து 82 லட்சத்து 45 ஆயிரத்து 500 ரூபாவை மோசடி செய்துள்ளார் எனக் கிடைத்த முறைப்பாட்டையடுத்து சம்பந்தப்பட்ட வர்த்தகர் உட்பட மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என குளியாப்பிட்டி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கட்டுபொத்த பிரதேசத்திலுள்ள வங்கி யொன்றில் மாத்திரம் இவர்கள் 50 தடவைகளுக்கு மேல் போலி நகைகளை அடகு வைத்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

வர்த்தகரின் மாமியார் ஒரே நாளில் ஐந்து தடவைகள் இவ்வாறு அடகு வைக்க வந்ததால் சந்தேகம் கொண்ட வங்கி முகாமையாளர் அந்த நகைகளை விசேட பரிசோதனைக்கு உட்படுத்தியபோது அவை போலி நகைகள் எனத் தெரியவந்தது.

சந்தேகநபர்கள் மூவரும் குளியாப்பிட்டிய நீதிவான் கிஹான் பிலபிட்டியவின் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

குளியாப்பிட்டிப் பொலிஸார் மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டு வருகின்றனர். (சி)

# மீண்டும் டெங்கு பரவும் அபாயம்

நாட்டில் மீண்டும் டெங்கு நோய் பரவும் அபாயம் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. கடந்த ஜனவரி மாதம் மட்டும் 831 பேர் டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டனர். 11 பேர் மரணமடைந்தனர்.

கொழும்பு மாவட்டத்தில் 292 பேர் இனங் காணப்பட்டுள்ளனர். அதில் ஐவர் மரணமடைந்துள்ளனர். கம்பஹா மாவட்டத்தில் 197 பேர் இனங் காணப்பட்டுள்ளனர். களுத்துறை, அம்பாந்தோட்டை, முல்லைத்தீவு, அம்பாறை, இரத்தினபுரி, திருகோணமலை மாவட்டங்களில் ஜனவரியில் தலா ஒருவர் வீதம் மரணமடைந்துள்ளனர்.

தொடர்ந்து பெய்துவரும் மழையாலும் கடுங்குளிராலும் வைரஸ் காய்ச்சல் பரவும் அபாயம் தோன்றியுள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்றுநோய்த் தடுப்புப்பிரிவு எச்சரிக்கை விடுத்துள்ளது.

விசேடமாக சிறு பிள்ளைகளிடையே இந்தநோய் தீவிரமாகப் பரவி வருவதாகவும் வைத்திய சாலைகளில் நீண்ட வரிசைகளில் மக்கள் சிகிச்சைக்காகத் தரித்து நிற்கின்றனர் என்றும் அந்தப் பிரிவு தெரிவித்துள்ளது.

காய்ச்சல் குணங்குறிகளுடன் ஆரம்பிக்கும் இந்தநோய், ஒரு மாத வயதுடைய குழந்தைகளை இலகுவில் தாக்கக்கூடியது என்றும் தொற்று நோய்த் தடுப்புப் பிரிவு மேலும் தெரிவித்தது. (சி)

# பியசேனவை கட்சியிலிருந்து நீக்கிய நடவடிக்கை சட்ட விரோதமானது

கொழும்பு,பெப்.9

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பி.எச்.பியசேனவை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து விலக்க எடுக்கப்பட்ட தீர்மானம் ஏற்புடையதல்லை என உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

கடந்த வரவு செலவுத் திட்டத்தின் போது பியசேன அரசாங்கத்துக்கு ஆதரவை வெளியிட்டார்.

இதன் காரணமாக அவர் மீது ஒழுக்காற்று நடவடிக்கையை எடுக்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தீர்மானித்தது.

இதனை ஆட்சேபித்தே அவர், உயர் நீதிமன்றத்தில் மனுவை தாக்கல் செய்தார். உயர்நீதிமன்ற தீர்ப்புக்குப் பின்னர் அதுதொடர்பில் கருத்துரைத்த நாடாளுமன்ற உறுப்பினர் பியசேன இது கடவுளின் செயல் எனக்குறிப்பிட்டுள்ளார்.

உயர்நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட தீர்ப்பினைக் கருத்தில் கொண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒன்றுகூடி கலந்தாலோசித்து பியசேன தொடர்பில் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கை குறித்து தீர்மானம் எடுக்குமெனத் தெரிவிக்கப்படுகின்றது. (204)

# கைக்குண்டைக் காட்டி மிரட்டி பெற்றோரிடம் பணம் பறிப்பு

கைக்குண்டைக் காட்டி பெற்றோரை மிரட்டி பணம் பறித்து வந்தார் எனக் கருதப்படும் இளைஞர் ஒருவரை அளுத்கம பொலிஸார் கைது செய்துள்ளனர். அவரிடமிருந்த கைக்குண்டும் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது. தர்காநகரைச் சேர்ந்த 28 வயதுடைய இளைஞர் ஒருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இவர் வசமிருந்த குண்டு இலங்கை இராணுவத்தினரின் பாவனையில் உள்ள வெளிநாட்டுத் தயாரிப்பெனத் தெரிவிக்கப்படுகின்றது.

இவர், கைக்குண்டைக் காட்டித் தனது பெற்றோரை மிரட்டிப் பல தடவைகள் பணம் பறித்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (சி)

# பெண்களுக்கு மயக்க மருந்து கொடுத்து நகைகளைச் சூறையாடி வந்தோர் கைது

கொழும்பு, பெப்.9

குளிர்பானத்தில் மயக்க மருந்தைக் கலந்து பெண்களுக்குக் கொடுத்து அவர்கள் மயங்கிய பின்னர் பணம், நகை மற்றும் ஏனைய பொருள்களைச் சூறையாடி வந்த மூவரை இறத்தோட்டைப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

புசல்லாவையைச் சேர்ந்த வேல்குரு வள்ளியம்மா (வயது - 40) என்பவர் கடந்த வெள்ளிக்கிழமை இறத்தோட்டை பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டையடுத்தே சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இக்கோஷ்டியினர் பஸ்களில் பிரயாணம் செய்யும் இளம் பெண்களின் அருகில் அமர்ந்து அவர்களுடன் உரையாடி, மத்திய கிழக்கு நாடுகளில் தொழில் வாய்ப்புப் பெற்றுத் தருவதாகக் கூறி ஆசை காட்டி ஹோட்டல்களுக்கு அழைத்துச் சென்றுள்ளனர்.

அங்கு போதைதரும் குளிர்பானத்தை அருந்தக் கொடுத்து மயக்கமடையச் செய்து விட்டு அந்தப் பெண்களிடமிருக்கும் உடைமைகளைக் அபகரித்து வந்தனர்.

இவர்கள் பொலிஸில் முறைப்பாடு செய்த பெண்ணிடமிருந்து ஒரு லட்சத்து 26 ஆயிரம் ரூபா பெறுமதியான தங்க நகைகளையும் ரொக்கப் பணத்தையும் கொள்ளையிட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் குழுவினர் மலையகப் பெண்களையே பெருமளவில் ஏமாற்றியுள்ளனர். இந்தக் குழுவினரைச் சேர்ந்த மேலும் பலர் இருக்கலாம் என்றும் பெண்கள் அவதானமாக இருக்க வேண்டும் என்றும் இறத்தோட்டைப் பொலிஸார் கேட்டுக்கொண்டுள்ளனர். (சி)

## புதிய வெளியீடு...



அபிவிருத்தி, சுபீட்சம், மற்றும் இலங்கை நடனக் கலைஞர்கள் என்ற தொனிப்பொருளில் புதிய நாணயத் தாள்களை இலங்கை மத்திய வங்கி அண்மையில் வெளியிட்டது. இந்நிகழ்வில் அமைச்சர் சரத் அமுனுகமவிடம் மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் புதிய நாணயத்தாளைக் கையளிக்கின்றார். (204)

# குடிதண்ணீர் திட்டம்

நீர்ப்பாசன நீர் முகாமைத்துவ அமைச்சும் திணைக்களமும் ஒன்றிணைந்து மேற்கொண்டுள்ள திட்டத்தின் கீழ் புத்தல பிரதேசத்தில் சுமார் எட்டாயிரம் குடும்பங்களுக்கு குடிதண்ணீர் வசதி வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது.

இதன்மூலம் பிரதேசத்தின் யுதகனாவ, மஹாகொடயாய, புத்தல, பெல்வத்த, குக்குரும் பொல உள்ளிட்ட பல பகுதிகளில் வாழும் குடும்பங்கள் நன்மையடையும்.

இதற்கு முன்னர் அமைக்கப்பட்டிருந்த நீர்த்தாங்கி மூலம் புத்தல நகரசபைக்கு உட்பட்ட பகுதிகளுக்கு மாத்திரமே குடிதண்ணீர் விநியோகிக்கப்பட்டு வந்தது. அதற்குப் பதிலாக தலா 80 ஆயிரம் லீற்றர் கொள்ளவைக் கொண்ட நான்கு நீர்த்தாங்கிகள் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு விநியோகம் இடம்பெறும். தாங்கிகளுக்குத் தேவையான தண்ணீர் மாணிக்க கங்கையிலிருந்து பெறப் படும். (சி)

# வேட்புமனுவில் பெயர்கள் நீக்கம்; உறுப்பினர்கள் சத்தியாக்கிரகம்

கொழும்பு, பெப்.9

ஐக்கியமக்கள்கூட்டமைப்பின் முன்னாள் பிரதேசசபை உறுப்பினர்கள் நால்வர் கடந்த மூன்று தினங்களாக எம்பிலிபிட்டிய நகர மணிக்கூண்டுக் கோபுர மேடையில் அமர்ந்து சத்தியாக்கிரகப் போராட்டத்தை மேற்கொண்டுள்ளனர்.

இந்தமுறை உள்ளூராட்சிச் சபைத் தேர்தலுக்காகத் தாம் தாக்கல் செய்த வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டதை ஆட்சேபித்தே இவர்கள் சத்தியாக்கிரகப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

எம்பிலிபிட்டிய மற்றும் கொலொன்ன பிரதேசசபைகளைச் சேர்ந்த நான்கு முன்னாள் உறுப்பினர்களே இந்த சத்தியாக்கிரகத்தை மேற்கொண்டுள்ளனர்.

இவர்களில் இருவர் ஐக்கிய மக்கள் கூட்டமைப்பின் நீண்ட நாள் உறுப்பினர்களாவர். மற்றைய இருவரும் கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது ஜனாதிபதி மஹிந்தராஜபக்ஷவுக்கு ஆதரவு வழங்குவதற்காக ஐக்கிய தேசியக் கட்சியை விட்டு விலகி வந்தவர்கள் - எனத் தெரிவிக்கப்படுகிறது.

தங்களுக்கு நியாயமான தீர்வொன்று பெற்றுத்தரப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தே இந்த நால்வரும் சத்தியாக்கிரகப் போராட்டம் செய்து வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (சி)

# சித்திபெறத் தவறிய மாணவர்களுக்கு உயர்தரம் கற்பதற்கு வாய்ப்பு

கொழும்பு,பெப்.9

ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சையில் கணித பாடத்தில் சித்திபெறத்தவறிய மாணவர்களுக்குத் தொடர்ந்து உயர்தரம் கற்பதற்கான வாய்ப்புக் கிட்டியுள்ளது.

அடுத்த இரு பரீட்சைகளில் அந்தப் பாடத்தில் சித்தி பெற்றுத் தருவோம் என்ற உடன்பாட்டின்பேரில் குறித்த மாணவர்களை உயர்தர வகுப்புக்கு அனுமதிப்பதற்கான அங்கீகாரத்தை அமைச்சரவை வழங்கியுள்ளது.

இந்த வரப்பிரசாதத்தால் அதிக எண்ணிக்கையான மாணவர்கள் உயர்தரம் கற்பதற்கான தகுதியைப் பெறுவதுடன், கால விரயத்தையும் தவிர்த்துக் கொள்ள முடியும் - என்று கல்வியமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

# காவத்தை பொதுமருத்துவமனையில் வைத்தியர்கள், தாதியர் வேலை நிறுத்தம்

கொழும்பு, பெப்.9

காவத்தை பொது வைத்திய சாலையில் கடமைபுரியும் வைத்தியர்கள், தாதியர்கள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினரும் கடந்த சனிக்கிழமை நள்ளிரவு முதல் திடீர் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

வைத்தியசாலையில் கடமை புரியும் அனைத்துத் தரப்பினருக்கும் உரிய பாதுகாப்பு இல்லையெனக் கூறியே இவர்கள் இந்த வேலை நிறுத்தத்தை மேற்கொண்டு வருகின்றனர்.

கடந்த வெள்ளிக்கிழமை மாலை இங்கு கடமையிலீடுபட்டுக் கொண்டிருந்த பொலிஸார் மீது இனந்தெரியாத சிலர் தாக்கியதில் சார்ஜன்ட் ஒருவர் காயமடைந்தநிலையில் இரத்தினபுரி பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

இதனை ஆட்சேபித்தும் அனைத்துத் தரப்பினருக்கும் உரிய பாதுகாப்பு வழங்கப்பட வேண்டுமெனக் கோரியுமே வேலைநிறுத்தப் போராட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (சி)

# குளிருடன் கூடிய காலநிலை தொடரும்

உலக காலநிலை மாற்றங்கள் காரணமாக நாட்டில் முற்றிலும் வெயிலான காலநிலை ஏற்படுவதற்கு சில மாத காலம் செல்லும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. தற்போதைய காலநிலையானது எதிர்வரும் ஏப்ரல் மாத இறுதி அல்லது மே முற்பகுதி வரை நீடிக்கும் எனத் தெரிவித்துள்ளது.

நாட்டின் வானிலையில் தாக்கத்தை ஏற்படுத்தும் தாழமுக்கம் இன்னும் சிலநாள்களுக்கு நீடிக்கும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (204)



கொழும்பு விவேகானந்தாக் கல்லூரியில் நடைபெற்ற கால்கோள் விழாவில் இலங்கை வங்கி சேமிப்புக் கணக்குகளை ஆரம்பித்து வைத்தது. புதிதாக இணைந்து கொண்ட சிறார்களை வங்கியின் பாடசாலைகள் சேமிப்பு பிரிவு தலைமை அலுவலக இணைப்பதிகாரி ஆர். சுதாகரன் வாழ்த்தி உரையாற்றுகிறார்.

# துன்பங்களைக் கண்டு துவண்டு போகாது கொள்கையுடன் தமிழ்ச் சமூகம் வளரவேண்டும்

யாழ்ப்பாணம், பெப்.09

துன்பங்களைக் கண்டு துவண்டு போகாமல் கொண்ட இலட்சியத்தில் கொள்கையுடையவர்களாக எமது தமிழ்ச் சமுதாயம் வளரவேண்டும்.

நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் இவ்வாறு தெரிவித்தார்.

மண்டைதீவு மகாவித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி பாடசாலை முதல்வர் சு.கனகரத்தினம் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு வெற்றியீட்டிய இல்லங்களுக்கு நினைவுக்கேடயங்களை வழங்கி சிறப்புரையாற்றும் போது நாடாளுமன்ற உறுப்பினர் இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்து உரையாற்றுகையில்:

சிலரது வருகையால் சில இடங்கள் பெருமைப்படுவதுண்டு. சில இடங்களால் சிலர் பெருமைப்படுவதுண்டு. மண்டைதீவு மண்ணுக்கு நான் இன்று வருகை தந்தமையால் நான் பெருமைப்பட்டதாகவே உணர்கின்றேன்.

மாணவச் செல்வங்களே உங்களுக்கான பாதையை ஆசிரியர்களும் பெற்றோர்களும் காட்டியிருக்கிறார்கள்.

அதன் மூலம் நீங்கள் உங்களின் இலட்சியங்களை நிறைவேற்றுங்கள்.

கடந்தகால நிகழ்வுகளையெல்லாம் மறந்து ஓர் இலட்சிய பாதையில் நீங்கள் பயணிக்க வேண்டும்.

தடைகளை எல்லாம் ஓர் நொடியில் உடைத்து நான் தமிழன் என்பதை உணரச் செய்வதற்கு எங்களிடம் இருக்கின்ற ஆயுதம் கல்விதான்.

இதன் மூலம் தான் எமது இலட்சியக் கதவுகளைத் திறக்க வேண்டும்.

தமிழன் அழிந்ததானதொரு வரலாறு இருக்கவே கூடாது.

தமிழன் வாழ்ந்தான், வரலாறுகளை படைத்தான், சாதனைகளைப் புரிந்தான் என்று வரலாறு கூறும் முகமாக நாங்கள் கல்வி, விளையாட்டு என்பனவற்றில் சிறப்புடைவர்களாக திகழவேண்டும்.- என்றார். (ம)

# நிர்வாகிகள் தெரிவு

யாழ்ப்பாணம், பெப்.09

யாழ். கொட்டடி சனசமூக நிலையத்தின் 2011ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாக சபைத் தெரிவு அண்மையில் நிலையக் கலையரங்கில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் இடம் பெற்றது.

பின்வருவோர் புதிய நிர்வாகிகளாகத் தெரிவாகினர்.

தலைவர்-தெ.நிஷாகரன், உபதலைவர்-நா.தனேந்திரன், செயலாளர்- க.சபேஷன், உப செயலாளர்-த.பிரபாசங்கர், பொருளாளர்- அ.ஜெயகாந், நிர்வாக உறுப்பினர்கள் - ந.பிரபாகரன், ச.ரஜீவ்குமார், சீ.ஞானகாந், வே.கிருஷ்ணானந்தன், கு.இந்திரகுமார், ச.தேவமலர், பொ.சிறீராஜபுலேந்திரன், சி.மகிதரன், ச.குணலட்சுமி, க.தர்மலிங்கம், ச.கேதீஸ்வரன், சமாசப் பிரதிநிதி- இ.சற்குருநாதன், கலாசார பொறுப்பாளர்- பெ.செல்வராசா.

(ஒ)

* * *

வல்வை முத்துமாரி அம்மன் ஆலய தர்ம கர்த்தா சபைக்குப் புதிய நிர்வாகிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவர்- கா. குலசிங்கம், உப தலைவர்- தி. ஜெயராஜ், செயலாளர்- க.விமலதாஸ், உப செயலாளர்- சி. குலசேகரம், பொருளாளர்- ந. குணராஜ், கணக்காய்வாளர்கள்- தி. கனகசபாபதி, சு. ஸ்ரீஸ்கந்தராஜா.

10 பேர் உறுப்பினர் களாகத் தெரிவு செய்யப்பட்ட னர்.

(253)

# வகுப்பறைக்கு வெளியேயும் அறிவுவிருத்தி

அச்சுவேலி, பெப்.09

மாணவர்கள் தமது அறிவு விருத்தியில் பெரும்பகுதியை வகுப்பறைக்கு வெளியே நடைபெறும் கற்றல் செயற்பாடுகள் மூலமும் இணைப்பாட விதானச் செயற்பாடுகள் மூலமும் பெற்றுக் கொள்கின்றனர்.

இந்த வகையில் விளையாட்டுக்களில் கலந்து கொள்வதன் மூலம் உடலும் உள்ளமும் வளர்ச்சி பெறுவதோடு வெற்றியையும் தோல்வியையும் சமமாக மதிக்கின்ற உயர் பண்பினையும் பெற்றுக் கொள்கின்றனர்.

இவ்வாறு தெரிவித்தார் யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி சாரதா தேவி அனந்தசயனன்.

அச்சுவேலி மத்திய கல்லூரியின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்து உரையாற்றும் போது:

பாடசாலைகளில் விளையாட்டுப் போட்டிகளை நடத்துவதன் மூலம் மாணவர்கள் பல்வேறு விதமான கற்றல் தேர்ச்சிகளைப் பெறுகின்றனர்.

எதிர்கால வாழ்க்கையில் உயர்வான நிலையில் வாழ்வதற்கான பண்புகளையும் கற்றுக் கொள்கின்றனர்.

அதுமட்டுமல்ல சமநிலையான உடல், உள வளர்ச்சி யையும் பெறுவதற்கு வாய்ப்புக் கிடைக்கின்றது.

விளையாட்டுப் போட்டிகள் மூலம் மாணவர்களுடன் ஆசிரியர்களும் மகிழ்ச்சியான சூழ்நிலையில் பழகுவதற்கு உரிய சூழல் ஏற்படுகின்றது.

மாணவர்கள் தமது அறிவு வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க வீத அளவை வகுப்பறையில் பெற்றுக் கொள்கின்றனர்.

ஏனைய பெரும் பகுதியை இணைப்பாட விதானச் செயற்பாடுகள் ஊடாகவும் வெளிக் கற்றல் மூலமுமே பெற்றுக் கொள்கின்றனர்.

விளையாட்டில் ஈடுபடுவதன் மூலம் உடல் அழகும் பேணப்படுவதோடு சமநிலை ஆளுமை வளர்ச்சியும் ஏற்படுகின்றது.

வாழ்க்கையில் வெற்றியையும் தோல்வியையும் சமமாக மதித்து தோல்வியை வெற்றியின் முதற்படியாகக் கொண்டு முன்னேறுவதற்கான மனோதிடத்தை விளையாட்டு மூலமே பெற்றுக் கொள்ள முடியும்.

வாழ்க்கையில் வெற்றி பெற்று உயர்நிலை பெறுவதற்கு விட்டுக்கொடுப்பு, தலைமை வகிக்கும் பண்பு, உடல் ஆரோக்கியம், சமநிலை ஆளுமை வளர்ச்சி என்பன அவசியமாகும். இந்த வகையான அனைத்து கூறுகளையும் பெற்றுக்கொள்ளக்கூடிய ஒரே களமாக விளையாட்டுப் போட்டி அமைகின்றது. - எனக் கூறினார். (ம-11)

# இறுதிப் பரீட்சையில் சித்தியடைந்தோர்

யாழ்ப்பாணம், பெப்.09

லங்கா சித்த ஆயுர்வேத மருத்துவக் கல்லூரி இறுதி ஆண்டு பரீட்சையில் சித்தி அடைந்தவர்களின் விவரம் வெளியாகியுள்ளது.

ஜெயப்பிரவீனா ஜெயசிங்கம், எட்வெட் ஸ்ரீவாசன், ஜெயசோதி ஜெயலன், ஸ்ரீ நாககௌரி பாலரஞ்சிதன், ஸ்ரீவிக்னேஸ்வர அரவிந்தன், சிவானந்தையர் செல்வலிங்கம், கல்யாணி ராஜரட்ணம், ரிஸானா சுலைமாலெப்பை, சுஜிதா அனுராஜ், ஜோசப் கிஷோர் ஜூெட் அனுராஜ், வாசுகி அருளானந்தன், பவதா ரிணி பத்மநாதன். (ம)

# உளநல செயற்பாடுகள் விரிவுபட வேண்டும்

வலி.வடக்கு,பெப்.9

உளநலச் சங்கம் வெறுமனே மாவட்ட மட்டத்தில் மட்டும் செயல்படும் தன்மையை விடுத்து மாகாண, தேசிய மட்டத்தில் தனது செயல்பாடுகளை மேற்கொள்ள வேண்டிய தேவையும் அவசியமும் காணப்படுகின்றது.

மேற்கண்டவாறு உளநல வைத்திய நிபுணர் எஸ்.சிவயோகன் குறிப்பிட்டார்.

தெல்லிப்பழை மாவட்ட வைத்தியசாலையில் இங்கும் உளநல சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் இ.கிருஷ்ண பிள்ளை தலைமையில் உள நல சங்க அலுவலகத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய உளநல வைத்திய நிபுணர் எஸ்.சிவயோகன் மேலும் தெரிவித்ததாவது:

யாழ்.மாவட்டத்தைப் பொறுத்தவரையில் உளநல வைத்தியத்துறை மக்களுக்கு சேவையாற்ற உளநல சங்கத்தினரும் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரும் காரணமாக இருக்கின்றனர்.

இந்த வகையில் எமது சங்கம் ஏனைய அரசு மட்ட சுகாதார அமைப்புகளுடனும் எதிர் காலத்தில் இணைந்து செயல்பட வேண்டும்.

இதற்கான முன் செயல்பாட்டு நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டியது அவசியமாகும்.

இன்று உளநல சங்கம் வெறுமனே வைத்தியசாலை ஊழியர்களை மட்டும் கொண்டு செயல்படவில்லை.

குறிப்பாக இந்தச் சங்கம் சமூகமட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட பல்வேறு தரப்பினர்களையும் உறுப்பினர்களாக கொண்டு இயங்குகின்றது.

இதே போன்று பெண்களுடைய பங்களிப்பும் செயல்பாடுகளும் காணப்படுகின்றமையும் வரவேற்கத்தக்கது.

ஆரம்பத்தில் சிறியதொரு சங்கமாக இருந்து செயற்பட்ட நாம் இன்று பரந்துபட்ட சேவைகளையும் வழங்கி வருகிறோம் -எனவும் குறிப்பிட்டார். (ம-86)

# வாழ்வை வளப்படுத்துவதே நோக்கம்

யாழ்ப்பாணம், பெப்.09

போர்ச்சூழலினால் உள ரீதியாகப் பாதிக்கப்பட்ட, பாதிப்படைந்துள்ள மக்களின் வாழ்வினை வளப்படுத்துவதே யாழ்ப்பாணத்தில் ஆன்மீகச் சொற்பொழிவுகளை நிகழ்த்துவதன் நோக்கம் என இந்தியா சின்மயா நிறுவனத்தின் தேசிய முகாமையாளர் கலாநிதி மேத்ரா தெரிவித்தார்.

புனர் வாழ்வும் வலுவூட்டலும் எனும் தலைப்பில் நாவலர் கலாசார மண்ட பத்தில் இடம்பெற்ற நிகழ்வில் உரை நிகழ்த்தும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்:

வன்னி மாவட்டத்தில் போரினால் பெரும் எண்ணிக்கையான மக்கள் உறவுகளை இழந்துள்ளனர். அது மட்டுமன்றி உளத்தால் பாதிப் படைந்து இருப்பவர்களே அதிகமாகக் காணப்படுகின்றனர்.

இவ்வாறு இந்து மதம் சார்ந்த ஆன்மீகச் சொற்பொழிவுகளை நிகழ்த்தும் போது அவர்களது மனங்களில் மாற்றங்கள் ஏற்படும் என எதிர்பார்க்கின்றோம்.

வவுனியா நலன்புரி முகாம்களிலும் மக்கள் அடிப்படை வசதிகள் இன்றி அவதிப்படுவதையும் அவதானித்தோம்.

யாழ்ப்பாணத்தில் ஆன்மீகச் சொற்பொழிவுகளை நடத்துவது மட்டுமல்லாது பெண்களுக்கான சுயதொழில் முயற்சிக்கான பயிற்சிகளை வழங்கி தொழில் வாய்ப்புக்களையும் பெற்றுக் கொடுக்கவுள்ளோம்.- என்றார்.

(ம-313)

தருவது வித்தியா

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?




**மேடம்:**
செலவுகளில் சிக்கனம் காட்ட வேண்டிய நாள். சில வேலைகள் எதிர்பார்த்த வேகத்திற்கு நடக்காமல் மந்தமாக நடக்கலாம். குடும்ப உறுப்பினர்களிடம் கடுமையாக நடந்து கொள்ளலாம். புதியவர்கள் சிலரின் சந்திப்பு நிகழும். நீங்கள் ஆசைப்பட்டு சில பொருள்களை வாங்கிக் கொடுத்தும் அதைக் குடும்பத்தினர் உதாசீனம் செய்யலாம்.



**இடபம்:**
திட்டமிட்ட வெளியூர் பயணங்கள் செல்லலாம். உறவினர்கள் சிலர் உங்களைப் பாராட்டிப் பேசிக் காரியம் சாதிப்பர். மனதில் நல்ல சிந்தனைகள் குடிகொள்ளும். நண்பர்களுக்காக சிலரிடம் பரிந்து பேசுவீர்கள். குடும்பத்தினருடன் சந்தோசமாகப் பொழுது போக்குவதில் நாட்டம் செல்லும். விருப்பமான உணவு வகைகளைச் சாப்பிடுவீர்கள்.



**மிதுனம்:**
வழக்கத்திற்கு மாறாகக் கூடுதல் வேலைப்பளுவைச் சந்திக்கலாம். சக ஊழியர்கள் அனுசரணையாக நடந்து கொள்வர். உறவினர் ஒருவருக்காக சிறிய தொகையைச் செலவிடலாம். கடந்த காலத்தில் உதவி செய்த ஒருவருக்குப் பதில் உதவி செய்வீர்கள். தொழில் ரீதியாகச் சிலர் உங்களை விமர்சித்தாலும் அதை அறிவுரையாக ஏற்பீர்கள்.



**கடகம்:**
கடந்த இரண்டு நாள்களாகக் கணவன் - மனைவிக்குள் இருந்த மோதல்கள் விலகும். வியாபாரத்தில் தள்ளிப் போன வாய்ப்புகள் தேடி வரும். உத்யோகத்தில் மேலதிகாரி ஆதரிப்பார். தடைப்பட்ட வேலை கள் முடியும் நாள்.



**சிங்கம்:**
குடும்பத்தினரிடம் கோபத்தைக் காட்டி அவர்களின் அதிருப்திக்கு ஆளாவீர்கள். சிக்கலான வேலை ஒன்றைச் சிலர் உங்கள் தலையில் சுமத்தலாம். சக ஊழியர்கள் விடுமுறையால் கூடுதல் வேலைப் பளுவைச் சந்திக்கலாம். பணிபுரிவோர் நிர்வாகத்தினரின் கண்டிப்புக்கு ஆளாகலாம். மறதியால் அவதிகளுக்கு ஆளாகலாம்.



**கன்னி:**
தேக ஆரோக்கியம் தெம்பு, உற்சாகம் தரும். வெளியூர் பயணங்கள் செல்லும் சிலருக்கு உதவிகரமாக இருப்பீர்கள். சந்தோஷமான அனுபவங்களைப் பெறலாம். நண்பர்களுடன் வெளியிடங்களுக்கு செல்லலாம். பணவரவுகளை எதிர்பார்த்துச் சில செலவுகளைச் செய்வீர்கள். நட்பு வட்டம் விரிவடையும் நாள்.



**துலாம்:**
சிலரிடம் கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்றிப் பெருமை சேர்ப்பீர்கள். தொழில் ரீதியாகப் புதிய அனுபவ பாடம் ஒன்றைக் கற்றுக் கொள்வீர்கள். சக ஊழியர்கள் சிலருடன் மனம் விட்டுப் பேசுவீர்கள். எதிர்பார்த்த நல்ல செய்திகள் வந்து சேரும். நீண்ட நாள்களாகச் சந்திக்க நினைத்த ஒருவரைத் திடீரெனச் சந்திக்கலாம்.



**விருச்சிகம்:**
சிலரிடம் திடீரெனக் கடனுதவி பெறலாம். கடும் பிரயத்தனம் செய்தும் சில வேலைகள் முடிவடையாமல் போகலாம். அதிருப்தி, ஆதங்கம் ஆள் கொள்ளும். பிள்ளைகளின் செயற்பாடுகளை நினைத்துப் பெருமை அடைவீர்கள். பழுதடைந்த வீட்டுப் பொருள் ஒன்றைச் சீர் செய்யலாம். திடீர் வெளியூர் பயணங்கள் செல்லும் சூழல் உருவாகலாம்.



**தனுசு:**
அடுக்கடுக்காக பல வேலைகளைத் திட்டமிட்டுச் செய்வீர்கள். உங்களுக்குத் தெரிந்த ஒருவரை மற்றொருவருக்கு அறிமுகப்படுத்தி வைப்பீர்கள். பெரிய அளவில் ஆதாயத்தை எதிர்பார்த்துச் செய்த காரியம் ஒன்றில் எதுவும் கிடைக்காமல் போகலாம். நண்பர்களின் ஏட்டிக்குப் போட்டியான செயற்பாட்டால் எரிச்சல் அடைவீர்கள்.



**மகரம்:**
கலகலப்பான அனுபவங்களால் கவலைகளை மறப்பீர்கள். மற்றவர்களின் மனம் கோணாமல் நடந்து கொள்ள முற்படுவீர்கள். பல நாள் எண்ணங்கள் நிறைவேறும் வாய்ப்பு உருவாகும். வழக்கமான பணி களைத் தங்கு தடையின்றி முடிப்பீர்கள். நண்பர்கள் சிலர் உங்க ளுக்காகச் செலவு செய்யலாம். புதிய முயற்சிகளில் வெற்றி உண்டு.



**கும்பம்:**
பணப்பற்றாக்குறை காரணமாகச் சில வேலைகளைச் செய்ய முடியாமல் போகலாம். வீட்டுக்குத் தேவையான உணவுப்பொருள்களை வாங்கிக் கொடுப்பீர்கள். நீங்கள் செய்த தவறு ஒன்றை மற்றவர்கள் தலையில் சுமத்தித் தப்பித்துக் கொள்வீர்கள். உங்களின் வேலைகளை மற்றவர்கள் குறை சொல்லலாம். இறை வழிபாடு அமைதி தரும்.



**மீனம்:**
சுயநலமாக செயற்படும் சிலரைப் பார்த்து எரிச்சல் அடைவீர்கள். நாளை வரும் என நினைத்த பணவரவு ஒன்று இன்றே வந்து விடலாம். நண்பர்களுக்குத் தெரிந்த ஒருவர் உங்களுக்கும் அறிமுகமாகலாம். வியாபாரிகளுக்குக் கடன் மிகுதிகள் வசூலாகும். கலைஞர்கள் புதிய வாய்ப்புகளைப் பெறுவதில் இழுபறி உண்டு.

# தமிழ்ச் சமூகத்தின் நிலைப்பாடு என்ன...?

**தமிழ்ச் சமூகம் எவருக்கும் அடிமைப்பட்டதாக இருந்ததுமில்லை, இருக்கப் போவதுமில்லை. பல்லாயிரக் கணக்கான தமிழர்கள் அழித்தொழிக்கப்பட்டமை தமிழ் இளைஞரை ஆயுதம் ஏந்தும் நிலைக்கு இட்டுச் சென்றிருந்தது. தனித்துவம் மிக்க இனமாக வாழ நினைத்த தமிழினத்தை ஒடுக்க முற்பட்டமையே போர் அழிவுகள் இடம்பெற்றமைக்குக் காரணமாயிருந்தன.**

**ஜீ.ஜீ.பொன்னம்பலத்தின் 34ஆவது சிரார்த்த தினம் இன்றாகும்.**

**1901** ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 8ஆம் திகதி கணபதிப்பிள்ளை காங்கேயர் தம்பதிகளுக்கு அருந்தவப் பேறாகத் தோன்றிய பொன்னம்பலம் இளமையில் யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரியிலும் பின்னர் கொழும்பு சென். ஜோசப்ஸ் கல்லூரியிலும் கல்வி கற்றார். அவருடைய கல்லூரிக் காலத்திலே பேச்சுத் திறமைக்காகத் தங்கப்பதக்கம் பெற்றதோடு விஞ்ஞானத்துறையில் பல்கலைக்கழகப் படிப்புக்காக இலங்கை அரசாங்கம் வழங்கிய உபகாரச் சம்பளத்தைப் பெறும் அதிர்ஷ்டசாலியுமாகி, இங்கிலாந்து சென்று அங்குள்ள கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் கற்று, எம். ஏ. பட்டதாரியாக வெளியேறினார். இவர் இங்கிலாந்தில் இருந்த காலத்தில் லிங்கன்ஸ் இன் என்னும் சட்டப்பள்ளியில் சட்டம் கற்று, பரிஸ்டரானார்.

1929ஆம் ஆண்டில், இலங்கை திரும்பிய இவர். இலங்கை உச்ச நீதிமன்ற அப்புக்காத்தாகத் தன்னைப் பதிவு செய்து சட்டத் தொழில் புரிந்துவரும் போது அரசியலிலும் பிரவேசித்தார். அக்காலத்தில், இலங்கையின் அரசியல் அமைப்பில் சிறுபான்மை மக்களின் நிலையைப் புரட்சிகரமாக மாற்றவல்ல டொனமூர் கமிஷன் சிபார்சுகள் நாட்டுமக்களின் முன் வைக்கப்பட்டிருந்தன. இக்கமிஷன் சிபார்சுகளை ஏற்பது சிறுபான்மை மக்கள் மரணத்தை ஏற்பதற்குச் சமானம் என்று முன்னெச்சரிக்கை செய்த எங்கள் முதுபெருந்தலைவர் சேர்.பொன். இராமநாதன் அவர்கள் இந்தச் சிபார்சுகளை ஆட்சேபிப்பதற்காக இங்கிலாந்து சென்றிருந்தார். சேர். பொன். இராமநாதன் இல்லாத சமயத்தில், இலங்கையில் ஆங்காங்கிருந்த தமிழ்ப்பிரமுகர்கள் இச் சிபார்சுகள் விடயமாக ஒரே முகமாக யாதொன்றும் செய்யமுடியாதிருந்தனர். அவர்களுள் சிலர் சிபார்சுகளை ஏற்பதுதான் சரி என்றும் அபிப்பிராயம் கொண்டிருந்தனர். உதாரணமாக, 1929ஆம் ஆண்டில் கொழும்பில் சில தமிழர்கள் கூடி, சிபாரிசுகளை ஏற்பதென்று ஒரு தீர்மானத்தையும் கூட்டத்தில் கொண்டு வந்தனர். அந்தக் கூட்டத்துக்கு இளம் பொன்னம்பலமும் வந்திருந்தார். அத் தீர்மானத்தின் மீது ஒரு திருத்தத்தைப் பிரேரிப்பதாக எழுந்து நின்று டொனமூர் கமிஷன் சிபார்சுகளை ஏற்கக்கூடாது என்று அவர் பிரேரித்த திருத்தம் அதிகப்படியான வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது. சிபார்சுகளை ஏற்பதற்கென்று கூடிய கூட்டம் அவற்றை நிராகரிப்பது என்ற தீர்மான துடன் நிறைவேறியது.அவர் இலங்கை முழுவதுமுள் தமிழ் பேசும் மக்க ளின் நலன்களைப் பாதுகாக்கு பொருட்டும் அவற்றில் கவனஞ்செலுத்தும் பொருட்டு 1944 ஆகஸ்ட் 29 ஆம் திகதியன்று அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் கட்சி யைத் தொடக்கி வைத்தார்.

1930களின் ஆரம்பத்தில் நாடாளுமன்றத்தினுள் அ யெடுத்துவைத்த ஜீ. ஜீ.பொன்னம்பலம் 1930 ஆ ஆண்டிலிருந்து நாடாளுமன்றத்திற்கு உள்ளேயும் வெ யேயும் இந்தியத் தமிழர்கள் உட்பட இலங்கைத் தமிழ களின் பேச்சாளராக விளங்கினார். இலங்கைத் தமி பேசும் சிறுபான்மையினருக்கு எதிர்காலத்தில் நேர ருந்த நெருக்கடியை அவர் முன்னரே கண்டுணர்ந்ததனா 1945 இல் சோல்பரி ஆணையாளர்களிடம் சரிசமநிலை யான பிரதிநிதித்துவத்திற்கான கருத்துரைகளை மு வைத்தார்.

காலஞ்சென்ற பேராசிரியர் ஜயரட்ணம் வில்ச இலங்கைத் தேசியவாதம் ( Sri Lankan Nationalism என்ற தமது நூலில் காலஞ்சென்ற ஜீ. ஜீ.பொன்ன பலத்தைப்பின்வரும் முறையில் விவரிக்கின்றார்.

''.......(இராமநாதன், அருணாசலம்) சகோதரர்க னால் விடப்பட்ட இந்த அளப்பரிய வெற்றிடத்தை நிரப் வேண்டி இருந்த காலத்தில் ஜீ. ஜீ.பொன்னம்பல அதனை நிரப்பினார். எனினும் அவர்களிடமிருந்து அவ தமது அரசியல் கோட்பாட்டை உருவாக்கவில்லை மாறாக, மேலாதிக்கம் இருக்கக்கூடாதென்ற சேர் வில்ல யம் மனிங்கின் எச்சரிக்கையிலிருந்தே அதனை உ வாக்கினார். அதன் விளைவு தான் ஐம்பதுக்கு ஐம்ப சமநிலையான பிரதிநிதித்துவம்.

காலஞ்சென்ற ஜீ. ஜீ. பொன்னம்பலம் 1939 இ அரச சபையில் சரிசம நிலையான பிரதிநிதித்துவம் ப றிய தமது மரதன் உரையில்:

''தமிழ்ச் சமூகத்தின் நிலைப்பாடு என்ன? எம நிலைப்பாடு இதுதான் என்று நான் மீண்டும் வலியுறுத் விரும்புகிறேன். நாம் இந்த நாட்டின் பூர்வீகக் குடிகள். நா இங்கு வாழ்ந்து வந்திருக்கின்றோம். தமிழ்ச் சமூகத்தி ஒரு கிளையினர் எமது சிங்களச் சகோதரர்களை வி நீண்ட காலம் இங்கு வாழ்ந்திருக்கின்றனர். இதுவே எமது தாயகம். அரசியல் ரீதியாகவும் வேறுவகையிலு நிரந்தர உரித்துக்களைக் கோருவதற்கு சிங்கள மக்களு குள்ள அதேயுரிமை தமிழர்களாகிய எமக்குமுண்டு. நா வேண்டப்படாத அந்நியர்களாக நடத்தப்படுவதை ஒ போதும் ஏற்றுக்கொள்ள முடியாது. நாம் மத்திய ஐரோ பாவின் நாஸிஸ நாடுகளில் யூதர்களைப் போன்று 'கெட்டே க்களில் பிரித்து வைக்கப்படுவதையும் நடத்தப்படு தையும் சகித்துக்கொள்ள முடியாது.

சோல்பரி ஆணையாளர்களினால் சரிசமநிலையா பிரதிநிதித்துவக்கோட்பாடு ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தா பின்னர் 1956, 1958, 1977 மற்றும் 1983 ஆம் ஆண்டு ளின் திட்டமிட்ட இனப்படுகொலைகளைத் தவிர் திருக்கலாமென்பதுடன், தமிழர்களை இரண்டாந்தர பிரஜைகளாக்கி அவமானப்படுத்திய தூஷிக்கப்ப வேண்டிய சிங்களம் மட்டும் சட்டத்தையும் நாடாளு மன்றத்தில் நிறைவேற்றியிருக்க முடியாது.

சரிசமநிலையான பிரதிநிதித்துவத்தை வழங் வதன் மூலம் மட்டும்தான் சனநாயக நாடொன்றி



உரிமைகளை நசுக்குவதைத் தடுக்க முடியும். சரிசமநிலையான பிரதிநிதித்துவமென்ற இந்தக் கோட்பாடு ஐக்கிய அமெரிக்காவில் செனற்றர்களைத் தெரிவு செய்வதில் பின்பற்றப்படுகின்றது.

இலங்கை சுதந்திரம் பெறுவதற்கு முன்னர் நடைபெற்ற 1947ஆம் ஆண்டுப் பொதுத்தேர்தலில் அகில இலங்கைத் தமிழக் காங்கிரஸ் கட்சியும் போட்டியிட்டது. பொதுத்தேர்தலின் பின்னர் உருவாக்கக்கூடிய எந்தவோர் அரசாங்கமும் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் அடிப்படைக் கொள்கைகளுக்கு ஆதரவு அளிக்குமாயின் அந்த அரசாங்கத்திற்கு எதிர்வினை ஒத்துழைப்பை வழங்குமென அதன் தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெளிவாகக் கூறியது. 1947ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி 42 ஆசனங்களை மட்டும் பெற்றதனால் அறுதிப்பெரும்பான்மை அதற்குக் கிடைக்கவில்லை. அந்த வேளையில் ஐ.தே. கட்சிக்கு எதிராயிருந்த எல்லாக்கட்சிகளும் ஐ. தே. கட்சிக்கு எதிரான மாற்று அரசொன்றை உருவாக்குகின்ற சாத்தியங்கள் பற்றி ஆராயும் பொருட்டு கொழும்பில் காலஞ்சென்ற ஸ்ரீ நிஸங்க அவர்களின் வீட்டில் 'யமுனா மாநாடு' என்று அழைக்கப்பட்ட ஒரு மாநாட்டை ஒழுங்கு செய்தன. இந்த மாநாட்டுக்குக் காலஞ்சென்ற ஜீ. ஜீ.பொன்னம்பலம் தலைமை வகித்தார். எனினும் இடதுசாரிகள் மத்தியில் காணப்பட்ட ஒற்றுமையின்மையின் நிமித்தம் பயனுள்ள எதனையும் இந்த மாநாட்டினால் சாதிக்க முடியவில்லை. காலஞ்சென்ற பீட்டர் கெனமன் சில ஆண்டுகளுக்கு முன்னர் எழுதியதும் "சற்றடே றிவியு" பத்திரிகையில் வெளியிடப்பட்டதுமான ஒரு கட்டுரையில், யமுனா மாநாட்டில் இடதுசாரிகள் மத்தியில் ஒற்றுமை நிலவியி ருக்குமாயின் இலங்கையின் சரித்திரமே வேறுபட்டதாயிருக்குமென்ற கருத்தைத் தெரிவித்திருந்தார்.

அமரர் ஜீ. ஜீ.பொன்னம்பலம் தான் 1930 ஆம் ஆண்டிலிருந்து இந்திய வம்சாவளியினரின் உரிமைகளுக்காப் போராடி அவர்களின் சுயமரியாதை

அப்பாத்துரை விநாயகமூர்த்தி
சிரேஷ்ட சட்டத்தரணி,
நாடாளுமன்ற உறுப்பினர், முன்னாள் தலைவர்,
அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ்.

யைப் பாதுகாத்தவர். கோவிந்தன் சுட்டுக்கொல்லப்பட்ட பிரபலமான மூலோயா தோட்டச் சம்பவம் தொடர்பிலும் சேர் ஜாக்சன் ஆணைக்குழு நிய மிக்கப்பட்டபோதும் நெவ்சுமோயர் தோட்டம் சுவீகரிக்கப்பட்டபோதும் இந்தியத் தமிழர்களின் சார்பாகப் பேசி அவர்களின் உரிமைகளுக்காகப் போராடியவர் ஜீ. ஜீ. பொன்னம்பலம். சோல்பரி ஆணைக்குழு முன் இந்தியத் தமிழர்களின் உரிமைகள் தொடர்பான விடயங்களை எடுத்துரைப்பதற்கு அமரர் ஜீ. ஜீ. பொன்னம்பலம் ஒருநாள் முழுவதையும் ஒதுக்கினார். அதன் விளைவாகத் தான் இந்தியப்பிரசைகளுக்கு நாடாளுமன்றத்தில் 14 வீதமான ஆசனங்கள் ஒதுக்கப்படவேண்டுமென சோல்பரி ஆணைக்குழு சிபாரிசு செய்தது.

1976ஆம் ஆண்டு வட்டுக்கோட்டை மாநாட்டில் பிரிவினையைக் கோருவதென்று தமிழர் விடுதலைக்கூட்டணித் தலைவர்கள் தீர்மானித்த போதிலும் பிரிவினைவாதக் கோஷம் அத்தலைவர்களின் மூளையில் உதித்ததொன்றல்ல. காலஞ்சென்ற எஸ். டபிள்யு. ஆர்.டி.பண்டாரநாயக்கா தான் 1956 இல் தூஷிக்கப்படவேண்டிய சிங்களம் மட்டும் சட்டத்தைப் நாடாளுமன்றத்தில் கொண்டு வந்ததன் மூலம் இந்த நாட்டில் தமிழ்ப் பிரிவினை வாதக் கோஷத்துக்கு அடிக்கல் நட்டார். எமது தலைவர் காலஞ்சென்ற ஜீ. ஜீ.பொன்னம்பலம் அதனை எதிர்த்துப் பேசியதுடன் சிங்களம் மட்டும் சட்டம் எமது பாதைகள் பிரிந்துபோவதற்கு வழி வகுக்குமென்றும் அரசையும் சிங்கள மக்களையும் அப்போதே எச்சரித்திருந்தார்.


தமிழர்கள் சமமாக நடத்தப்படாவிட்டால் பிரிவினையைக் கோருவதைத் தவிர அவர்களுக்கு

**தமிழ்ச் சமூகத்தின் ஒரு கிளையினர் எமது சிங்களச் சகோதரர்களை விட நீண்டகாலம் இங்கு வாழ்ந்திருக்கின்றனர். இதுவே எமது தாயகம். அரசியல் ரீதியாகவும் வேறுவகையிலும் நிரந்தர உரித்துக்களைக் கோருவதற்கு சிங்கள மக்களுக்குள்ள அதேயுரிமை தமிழர்களாகிய எமக்குமுண்டு. நாம் வேண்டப்படாத அந்நியர்களாக நடத்தப்படுவதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது.**

மாற்று வழி எதுவுமில்லையென்று எச்சரித்த முதலாவது தலைவர் அவரேயாவார். பல்லாயிரக் கணக்கான தமிழர்களை அழித்தொழித்த 1958, 1977, 1983 ஆம் ஆண்டுகளில் திட்டமிடப்பட்ட இனப் படுகொலைகள் தமிழ் இளைஞர்கள் தம்மையும் தமிழ்ச் சமூகத்தையும் பாதுகாப்பதற்கு ஆயுதந் தரிக்கும்படி அவர்களைத் தூண்டின. 1965, 66 இல் பிரதமர் டட்லி சேனநாயக்காவின் ஐ.தே.க.அரசாங்கத்துக்கு, ஐக்கிய நாடுகளுக்கான பேராளர் குழுவுக்குத் தலைமைவகித்துச் செல்லும் கௌரவம் அமரர் ஜீ.ஜீ.பொன்னம்பலம் கியு.சி.அவர்களுக்குக் கிடைத்தது. அங்கு அவர் உரையாற்றி முடித்தவுடன் அமெரிக்கப் பேராளரான பிரான்சிஸ் வில்லிஸ் அம்மையார் அவரைத் தேடிவந்து அவரின் கைகளைக் குலுக்கி, அபிவிருத்தியடையாத ஒரு தேசத்தின் குரல் இதுவென்றால் நாம் அனைவரும் அபிவிருத்தியடையாத நாடுகளாக இருக்கவே விரும்புகிறோம் என்று கூறுமளவுக்கு மாண்புமிக்க அப்பேரவை அவரின் சொல்வன்மைக்குக் கட்டுண்டது.

தமிழக முதல்வர் கருணாநிதியின் வழக்கு சம்பந்தமாக சில விடயங்களைத் தெளிவுபடுத்துவதற்காக மலேசியா சென்ற பொழுது 09.02.1977 அன்று மலேசியாவில் ஜீ.ஜீ. இறைபதமடைந்தார். ஏறக்குறைய அரைநூற்றாண்டு காலம் அரசியலில் அவர் ஆற்றிய பங்குகளுக்காக முழுத் தமிழ்ச் சமூகமும் உண்மையிலேயே அவருக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளது. ★

# தியாக மாலை



ஒரு துரும்பைக் கிள்ளிப் போட்டாலும் சில பேர் தம் நலத்திற்காகத் தான் அப்படிச் செய்வார்கள். மறந்தும் கூட மற்றவர்களுக்கு மனதால் கூட நன்மை நினைக்க மாட்டார்கள்! அவர்களது ஒவ்வோர் அசைவும் தமக்காகத் தம் நன்மைக்காக என்றே இருக்கும்.

அப்படிப்பட்டவர்களைப் பார்க்கும் போதே நமக்கு வெறுப்பு வரும். அவர்கள் பக்கத்தில் இருந்தாலேயே வெப்பமும் வேதனையும் அங்கே சுற்றும். இதற்கு நேர்மாறாக என்றும் எப்போதும் எது செய்தாலும் அது தமக்காக இல்லை; பிறருக்காகவே என்று வாழுகின்ற உத்தமர்களும் உலகில் உண்டு. அவர்கள் வணங்கத்தக்கவர்கள்; வரலாறு படைத்தவர்கள்.

"ஓங்கி உலகளந்த உத்தமன் பேர்பாடி." என்கிற திருப்பாவை வரிக்கு வியாக்கியானம் செய்யும் போது பிறர் பொருட்டு, மற்றவர் நன்மைக்காகத் தான் தாழ்ந்து போகிற நிலையே உத்தமன் என்று இலக்கணம் சொல்வது வழக்கம். அந்த உத்தமனுக்கே, திருமாலுக்கே உதவிய உத்தமன் ஸ்ரீ ஆஞ்சநேயன்.

அவரது எந்தச் செயலும் அவருக்கான நன்மை குறித்து செய்யப்பட்டது இல்லை. எல்லாமே பிறருக்காக....பிறர் நன்மைக்காக.

அதிக பலம் இருந்தாலும் அநீதிக்கு அஞ்சாத வாலியிடம் சேராதவர் அனுமன். பலவீனமான சுக்கிரீவனுக்குப் பக்கபலமாக அரிசய சுருங்க மலையில் வாழ்கிறவர் அனுமன். அவர் இராமனைக் கண்டதும் அன்பு கொண்டதும் சுக்கிரீவனைக் காப்பாற்றவே.

உயிராபத்தான இலங்கைப் பயணம் மேற்கொண்டதும் தடைகளை வென்றதும் சீதையைக் கண்டதும் சிந்தை மகிழ்ந்ததும் இராமனுக்காகவே. இராமன் பிரிவுத் துயர் நீக்கவே அவர் துன்பம் சுமந்தார்.

இராவணன் அரசவை ஏறியதும், இராமன் புகழ் பேசியதும் தனக்காகவா? இல்லை அங்கிருந்து தர்மாத்மா ஆகிய விபீசணன் இராமன் பரம்பொருள் என்று உணரவே..........உய்யவே இத்தனை துயரங்கள்.

இராமன் போருக்கு உதவியதும் மரணத்தின் வாயிலை ஓடி ஓடித் தொட்டதும் தனக்காகவா? இல்லை...... அசோக வனத்தில் அழுது அரற்றிய அன்னை ஜானகியின் அழுகையை நிறுத்தவே!

விபீசணனைக் கொல்ல இராவணன் எறிந்த வேலைத் தன் மார்பில் வாங்க ஓடியது இராமனது அடைக்கலப் பொருள் அழிந்தது என்ற பழி வரக்கூடாது என்ற நினைப்பிலேயே.......

போர்க்களத்தில் மயங்கிச் சாய்ந்த இளையபெருமானைக் கண்டு இராமன் அழுது சோர்ந்த சமயத்தில் மருந்து மலை கொணர்ந்தது இலக்குமணனைக் காத்தது இராமனை மீட்க அன்றித் தனக்காக அல்லவே!

இராமன் வனம் சென்று பதினான்கு ஆண்டுகள் ஆகின என்று அறிந்து நெருப்பு மூட்டி உயிர்விடத் துணிந்த பரதனை மீட்க இராமன் அனுப்பியது அனுமனையே! எங்கும் எப்போதும் பிறர்க்கென வாழும் வெற்றியாளனாகத் தனக்கென வாழாத் தகைமையாளனாக வாழும் வாழ்வே அனுமன் உலகிற்கு அளிக்கும் செய்தி.

சுக்ரீவனுக்காக, இராமனுக்காக, சீதைக்காக, இலட்சுமணனுக்காக, விபீசணனுக்காக, பரதனுக்காக என்றும் எப்போதும் மற்றவர்களுக்காக வாழ்ந்த மாபெரும் வாழ்வு அனுமனுடையது! மறந்தும் அவர் தனக்கென வாழ்ந்தாக ஒரு செய்தி கூட இராமாயணத்தில் இல்லை!

பெருவாரியான அறிவாளிகள் மிகப்பெரும் சுயநலவாதிகளாகிப் போனது சமூகத்தின் துரதிஷ்டம். தங்கள் அறிவைக் கொண்டு தாம் வளருவதும்; தாம் மட்டும் வளர்வதுமே அவர்கள் தலை நோக்கம் ஆகிவிட்டது.

அதற்கு அனுமன் விதிவிலக்கு! மிக அதிகமான பலம் உடையவர்கள் தீய வழிபாடுகளுக்கும் பெண் இன்பத்துக்கும் அநீதிகளுக்கு தங்கள் பலத்தைப் பிரயோகிப்பது இன்று உலகின் பேரவலம். இதற்கு மாமருந்து பிரம்மச்சாரி அனுமனின் தியாகமனம்; யோக பலம். அவர் தமது பலத்தைத் தகாது பிரயோகம் செய்தார் என்று எங்கும் ஒரு செய்தி கிடையாது.

ஒவ்வொருவருக்கும் அவர் அவர் மனைவிதான் அருமருந்து என்பது அனுமன் கொள்கை. பின்னாலே சுக்ரீவன் மனைவியாகிய உருமை என்பவளை வாலி கொண்டு போனார் என்று சொல்ல வந்த அனுமன் "உருமை என்று இவர்க்கு உரிய தாரமாம் அருமருந்தையும் அவன் விரும்பினான்" என்று கூறி, தாரமே அருமருந்து என்று பேசுகிறார்.

எனவே இராமனைப் பார்த்ததும் அருமருந்தைத் தொலைத்து விட்டுத் தேடுகிறார் என்று எண்ணி மனைவியைப் பிரிந்துள்ளார் என்று அனுமன் யூகித்தறிந்த திறனைக் கம்பர் விளக்கினார்.

இலங்கைக்கு வந்த பிறகு சீதையைத் தேடுகிறார் அனுமன். எங்கும் சீதையைக் காணவில்லை. இராவணன் மாளிகைக்கு வந்து பார்த்தால் அவன் முறையற்ற தூக்கத்தில் மஞ்சத்தில் கிடக்கிறான். இரணியனைக் கொன்ற பிறகு நரசிங்கப் பெருமான் தன் பிடரியைப் பரப்பிக் கொண்டு மேருமலையில் சாய்ந்த மாதிரி அவன் பெருமூச்சு விட்டுக்கொண்டு இருக்கிறான். அவன் பெருமூச்சு விடுவதை உற்றுப் பார்த்த அனுமன் துள்ளிக் குதித்தார். மகிழ்ச்சியால் திளைத்தார். ஏன்? விரகதாபத்தால் பெருமூச்சு விடுகிறான் இராவணன். அப்படியானால்.....அப்படியானால்.....இவன் விருப்பத்திற்கு சீதை இணங்கவில்லை என்ற உண்மையை உணர்ந்தாராம் அனுமன்.

என்ன நுட்பமான அறிவு பாருங்கள். சீதை, இராவணன் விருப்பத்திற்கு இணங்கி இருந்தால் பெரு மூச்சுக்கு அவசியம் இல்லை அல்லவா? எனவே இராவணன் பெருமூச்சைக் கொண்டு சீதையின் கற்பு நன்று என்று உணருகிறார் ஆஞ்சநேயர். இவ்வளவு நுட்பமான அறிவாளிகள் சுயநலம் இன்றி இருப்பதே சமூகத்தின் அதிர்ஷ்டம் தான்! அதனால் தான் புத்தி பலத்துக்கு அவரைப் பிரார்த்தனை செய்கிறார்கள் போலும்.

சு.கி.சிவம்.



# பிரிட்டன் அதிவேக உல்லாச ரயில்

15 வருடங்களில் மணித்தியாலத்திற்கு 225 மைல் (362 கிலோமீற்றர்) வேகத்தில் பயணம் செய்யக்கூடிய அதி உல்லாச ரயில் பிரிட்டனில் அறிமுகப்படுத்தப்படவுள்ளது. இந்த ரயிலின் வேகம் மாத்திரமல்ல, தோற்றமும் வசதிகளும்கூட வியக்க வைப்பதாக இருக்குமாம்.

விமானத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி இந்த ரயில் வடிவமைக்கப்படவுள்ளது. மிகவும் பளபளப்பாகவும் காண்போர் கண்களைக் கவரும் வகையிலும் உள்ள இந்த ரயில் தண்டவாளத்தில் ஓடும் 'கொன்கோர்ட்' என வர்ணிக்கப்படுகிறது. ஆடம்பர குடியிருப்புக்களில் உள்ளதைப் போன்ற வசதியான மென் பஞ்சு விசாலானமான சாய்விருக்கைகள், மிருதுவான மேசை மற்றும் நாற்காலிகள், காற்றோட்ட வசதிகளுடனும் கணினித் திரைகளுடனும் அமைக்கப்பட்டுள்ள தனியான கண்ணாடிக் கூண்டுகள் இந்த ரயிலில் உள்ளன.

திரைப்படம் பார்ப்பதற்கும் இசைகளைக் கேட்டு மகிழவும் மாத்திரமல்லாமல் பல்வேறு பொழுது போக்கு அம்சங்களும் இதில் உள்ளன. பிரான்ஸ், ஜப்பான் மற்றும் சீனாவிலும் தற்போது இது போன்ற ரயில்கள் புழக்கத்தில் உள்ளதாகவும் இந்த நாடுகளுடன் போட்டியிட வேண்டுமானால் பிரிட்டனும் இதுபோன்ற ரயில் சேவைகளை அதிகம் பயன்படுத்த முன்வரவேண்டும் எனவும் இந்த ரயிலின் வடிவமைப்பாளர் போல் பிரிஸ்ட்மன் கூறுகின்றார். விமானத்துறையில் கொன்கோர்ட் விமானங்கள் ஏற்படுத்திய தாக்கத்தைப் போன்று ரயில்வே துறையில் இந்த நவீன ரயில் புதிய திருப்பத்தை ஏற்படுத்தும் என மேலும் பிரீஸ்ட்மன் கூறுகிறார். லிவர்பூல் நகரில் நடைபெற்ற செய்தியாளர் மாநாடொன்றில் உரையாற்றிய பிரிட்டன் போக்குவரத்துச் செயலர் பிலிப் ஹம்மொந்த், தற்போதைய பிரித்தானிய கூட்டணி அரசாங்கத்தின் உறுதிமொழிகளில் ஒன்றான அதி நவீன விரைவு ரயில் சேவை நிச்சயம் ஏற்படுத்தப்படும் எனக் கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.


2017 ஆம் ஆண்டு இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டு 2025 ஆம் ஆண்டில் பூர்த்தியாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த ரயில் பாவனைக்கு வந்தால் லண்டன் எஸ்டனிலிருந்து பேர்மிங்ஹாம் நகரை 49 நிமிடங்களில் சென்றடைந்து விடலாமாம். தற்போது இந்தப்பயணத்திற்கு ஒரு மணித்தியாலமும் 24 நிமிடங்களும் தேவைப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# 17 வயதில் மரணக்கிணற்றில் மோட்டார் சைக்கிள் செலுத்தும் யுவதி

பிரிட்டனைச் சேர்ந்த 17 வயதான ஜெய்மி டைரெல் எனும் யுவதி உலகின் மிக இளமையான 'மரணக்கிணறு' சாகச மோட்டார் சைக்கிள் ஓட்டும் பெண்ணாக விளங்குகிறார்.இதற்காக அவர் தனது பாடசாலைக் கல்வியையும் இடைநிறுத்தியுள்ளார். அவர் இன்னும் மோட்டார் சைக்கிள் ஓட்டுநருக்கான அனுமதிப்பத்திரம்பெறவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

சாகசப் பிரியையான ஜெய்மி, 32 அடி அகலமான மரணக் கிணற்றில், மோட்டார் சைக்கிளை 20 அடி உயரத்தில் 45 கிலோமீற்றர் வேகத்தில் ஓட்டிச்சென்று வியக்கவைக்கிறார். 'ஜெய்மி ஸ்டார்' என்ற பெயரில் மோட்டார் சைக்கிளை செலுத்தும் அவர், எப்போதும் தலைக்கவசத்தை அணிந்ததில்லை.இழுவை விசையில் பாதிப்பை ஏற்படுத்தும் என்பதால் தலைக்கவசம் அணியாமலேயே அவர் மரணக்கிணற்றில் மோட் டார் சைக்கிளைச் செலுத்துகிறார். புவியீர்ப்புவிசையை விஞ்சுவதற்காக தொடர்ச்சியாகச் சீரான வேகத்தில் செல்ல வேண்டும். இல்லையென்றால் அவர் கீழே விழ நேரிடும் என்பது குறிப்பிடத்தக்கது. கேம்பிரிஜ் ஹாவெர்ஹில் பகுதியில் வளர்ந்தவர் ஜெய்மி. அவருக்கு இந்த சாகசத் தொழில்துறையைத் தெரிவுசெய்வதில் எந்தக் கவலையும் இல்லை. ஆபத்து நிறைந்த மரணக் கிணற்றில் பயணம் செய்யும் இந்த விளையாட்டில் தான் அதிகமாக ஈர்க்கப்பட்டதாக அவர் தெரிவிக்கிறார்.

'நான் கடந்த வருடமே மோட்டார் சைக்கிள் ஓட்டுவதற்கு பயிற்சியெடுத்தேன். ஒரு மாதத்திலேயே நான் மரணக் கிணற்றில் மோட்டார் சைக்கிளைச் செலுத்தினேன்'' என்று அவர் தெரிவித்துள்ளார். அவருக்கு இந்த மோட்டார் சைக்கிள் சாகசத்தை, அவரது குடும்ப நண்பரான கென் பொக்ஸ் என்பவரே அறிமுகப்படுத்தி வைத்தவர். ''எனக்கு 11 வயதாக இருக்கும்போது முதல்முதலாக இந்தச் சைக்கிள் சவாரி வாய்ப்புக் கிடைத்தது. கென், மோட்டார் சைக்கிள் கைப்பிடியைப் பிடிக்கச் செய்த வாறு என்னை வைத்திருந்து மரணக்கிணற்றில் மோட்டார் சைக்கிளைச் செலுத்துவார். நான் அதை ஆர்வத்துடன் தொடங்கினேன்''- என்கிறார் ஜெய்மி.



# பழங்களும் மருத்துவக் குணங்களும்

*(சென்றவாரத் தொடர்ச்சி)*

பழங்கள் உடலுக்கு ஆரோக்கியத்தைத் தருவதுடன் பல்வேறு உயிர்ச்சத்துகளையும் வழங்குகின்றன. தினமும் பழங்களைச் சாப்பிட்டால் உடல் அழகு அதிகமாவதுடன் புத்துணர்ச்சியும் ஏற்படும். பழங்கள் பல மருத்துவ குணங்கள் கொண்டதால் பல நோய்களையும் தீர்க்கின்றது.

* எலுமிச்சம் பழச்சாறு வாந்தி, மயக்கம், பித்தம், வயிற்றுப்புண், மூலக்குத்து, சிறுநீரக நோய், வாய்நாற்றம், பல்வலி, தூக்கமின்மை, கண்நோய் போன்றவற்றை போக்கும்.

* கொய்யாப்பழம் வயிற்றுப்புண், மலக்கட்டு, வயிற்றுக் கோளாறு இருதயப் படபடப்பு தோற்கோளாறு என்பவற்றை நீக்கும் தன்மையுடையது.

* தக்காளிப்பழத்தில் உடல் வரட்சி, வயிற்றுப்புண், மலச்சிக்கல், சிறுநீர்க் கோளாறுகளை நீக்கும் தன்மை காணப்படுகின்றது.

* தோடம்பழம் சூடு, குடல்வரட்சி, தாகம், மலக்கட்டு, கணச்சூடு, தலைச்சுற்று, சொறி, சிரங்கு, பற்கோளாறு போன்றவற்றை நீக்கும். தினம் ஒரு தோடம்பழம் சாப்பிட்டால் உடல் வனப்பு அதிகரிக்கும்.

* திராட்சைப் பழத்துக்குப் பித்தக் கோளாறு மலச்சிக்கல், வாதம், உடற்சூடு, உடம்பு வலி, தலைச்சுற்று, களைப்பு, மேகச்சூடு, வாய்நாற்றம், தொண்டைப்புண் போன்றவற்றை நீக்கும் மருத்துவ குணமுண்டு. இதைவிடத் திராட்சைப்பழம் சாப்பிட்டு வந்தால் கை, கால், மூளை போன்றவை வலுவடையும் முகம் அழகு பெறும்.

* நாவற்பழத்துக்கு நீரிழிவு, வயிற்றுப்புண், வாய்நாற்றம், இருமல், வாய்வு, சிறுநீரகக் கோளாறு போன்றவற்றைக் குணமாக்கும் தன்மையுண்டு.

* பப்பாளிப்பழம் மலக்கட்டு, கண்நோய், வாய்நாற்றம், தொண்டைப்புண், வயிற்றுப்புண், பற்கோளாறு, கர்ப்பம் தொடர்பான நோய்களைக் குணமாக்கும். யானைக்கால் நோயுள்ளவர்கள் பப்பாசிப்பழம் சாப்பிட்டு வந்தால் கால்வீக்கம் குறையும். ஆண்மை, பெண்மைக் குறைபாடு இருக்காது. கருக்கலைப்புக்குப் பப்பாசிப்பழம் சிறந்ததாகும். நோய் எதிர்ப்புச்சக்தி அதிகம் பப்பாளிப்பழத்துக்கே உண்டு.

* பலாப்பழம் சாப்பிடுவதால் மூளை வலுவடையும், அறிவு விருத்தியாகும்.இதை பசுநெய், தேன் என்பவற்றுடன் கலந்து உண்டாற் களைப்பு, இருமல் என்பன நீங்கும்.

* பாலைப்பழத்துக்கு கருங்கரப்பன், கிரந்தி ஆகியவற்றைப் போக்கும் சக்தியுண்டு. பாலைப்பழ விதைகளை எண்ணெய் காய்ச்சிப் பூசிவரத் தோற் சுருக்கம், கரடுமுரடு நீங்கும்.

* புளியம் பழத்துக்கு பித்தசுரமயக்கம், மூச்சு குணமாகும். நரை, சன்னி போன்றவற்றை நீக்கும் குணமுண்டு. வாதநோய், பைத்தியத்தையும் குணமாக்கும்.

* பேரீச்சம் பழத்துக்கு மலக்கட்டு, களைப்பு, தொண்டைக் கட்டு, பக்கவாதம் போன்றவற்றை உறுதிப்படுத்தும் இளைப்பு, மூட்டுவலி, உடம்புஅசதி ஏற்படாமல் தடுக்கும். ஆஸ்துமா நோயாளிகள் பேரீச்சம்பழம் சாப்பிடக்கூடாது.

* மங்குஸ்தான் பழம் குடற்புண், வயிற்றுவலி, வாய்நாற்றம், உடல்வரட்சி, மூலநோய், இரத்த மூலம் , மூலப்புண், சூதகவலி, கண்ணெரிவு, கணச்சூடு, பித்தம், குமட்டல், அன்னதோஷம், இருமல் போன்றவற்றைக் குணமாக்கும். சிறுநீர்ப்பையை சுத்தம் செய்யும் குணமும் மங்குஸ்தானுக்கு உண்டு.

க.[illegible]

*(வளரும்)*

# உலகின் மிகப் பெரிய கோன் ஐஸ்கிறீம்

உலகின் மிகப் பெரிய கோன் ஐஸ்கிறீமானது இத்தாலியில் தயாரிக்கப்பட்டுள்ளது.இந்த ஐஸ்கிறீமை உருவாக்குவதற்கு 160 இறாத்தல் சொக்லட் மற்றும் 2,000 வேபர்ஸ் பிஸ்கட்டுகளும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

இத்தாலியைச் சேர்ந்த ஐஸ்கிறீம் வல்லுநர்கள் 7 பேர் இணைந்து 30 மணித்தியாலங்களைச் செலவிட்டு இந்தமிகப் பெரிய ஐஸ்கிறீமை உருவாக்கியுள்ளனர்.10 அடி உயரமான இந்த ஐஸ்கிறீம் அண்மையில் இத்தாலியில் ரிமினி நகரில் காட்சிக்கு வைக்கப்பட்டது. அதன்போது இந்த ஐஸ்கிறீமானது உலகில் மிகப்பெரிய கோன் ஐஸ்கிரீம் என்று கின்னஸ் உலக சாதனை வெளியீட்டாளர்களால் சான்றிதழ் வழங்கப்பட்டது.



## மாற்றம்

தான் தேய்வதையே
அறியாமல் சிரிக்கும்- நிலவு
நாளை இந்த உலகத்துக்கும்
மறுபடி புரளக்கூடும்
காலம் தன் மாற்றங்களை
மறுபடி மறுபடி
திருப்பக்கூடும்
ஒரு கணப்பொழுது போதும்
எல்லாம் மாறிப் போவதற்கு
மனித வாழ்வும்
அவ்வாறே ஒரு நாளில்
முயற்சி இருந்தால்
எல்லாமே மாறிப்போகும்.

## விழித்திருப்பு

கனவு தீரும் வரைக்கும்
உறங்கிக் கொண்டிருக்கும்
கவிஞன் போல
உனது தரிசனம்
கிடைக்கும் வரை
நான் விழித்திருக்கவே
உத்தேசித்து இருக்கிறேன்
காரணம்
நீ என்னைப் படைத்தவன்
என்பதால்.

க.நிஸா.

# சுவாசிக்கக் கூடிய அதிசய எந்திர மனிதன்

அமெரிக்காவில் அதிசய ரோபோ ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. இந்த ரோபோவுக்கு மனிதனைப் போன்று வாய், மூக்கு உள்ளன.

இந்த ரோபோவானது சுவாசிக்கவும் செய்கிறது. அப்படி மூச்சு விடும்போது அதன் மார்பு விரிந்து சுருங்குகிறது. மேன்னி என்ற இந்த ரோபோவுக்கு மனிதனைப் போலவே தோல் இருக்கிறது. வியர்வை ஏற்படும் வகையிலும் அமைத்திருக்கிறார்கள். இதன் உடல் வெப்பநிலையைக் கண்டறிய முடியும். இந்த ரோபோ நடக்கிறது, குனிகிறது. கால் மேல் கால் போட்டுக்கொண்டு உட்காருகிறது.

இதனால் தரையில் உட்காரவும் முடியும், தரையில் தவழ்ந்து செல்லவும் முடியும். எந்திர மனிதன் என்ற சொல் இதற்கு முழுக்க முழுக்கப் பொருந்தும். அமெரிக்காவில் உள்ள பாட்டலே ஆய்வுக்கூடம் என்ற நிறுவனம் இதை உருவாக்கியுள்ளது.

மனிதனைப் போல இந்த ரோபோ உருவாக்கப்பட்டுள்ளதால் இதற்கு மேன்னி என்று பெயர் சூட்டியிருக்கிறார்கள். 20 லட்சம் டொலர் செலவில் உருவாக்கப்பட்டிருக்கும் மேன்னி ரோபோ, அமெரிக்க இராணுவத்தில் பயன்படுத்துவதற்காகத் தயாரிக்கப்பட்டதாகும். அமெரிக்காவின் யுடா மாநிலத்தில் உள்ள ஆயுதசோதனைக் களத்துக்கு மேன்னி கொண்டு செல்லப்பட்டுள்ளது.




இந்தச் சோதனைத் தளம் ஆபத்தான வேதியியல், உயிரியல் ஆயுதங்களைச் சோதிப்பதற்குப் பயன்படுத்தப்படுவது. அமெரிக்க இராணுவ வீரர்களுக்குத் தகுந்த பாதுகாப்பு உடையைத் தயாரிக்க அந்தநாட்டு இராணுவத் தலைமையகம் விரும்புகிறது. அதற்கான பரிசோதனைகளுக்கு இந்த ரோபோ பயன்படுத்தப்படும்.

# மண்கும்பான் ஜும்மாப் பள்ளிவாசல்

வேலணைப் பிரதேசத்தின் உல்லாசக்கடற்கரையாக விளங்கும் மண்கும்பான் சாட்டிப் பகுதி தொல்பொருள் ஆய்வுகளுக்கு உட்பட்ட இடம். இங்கு மிகவும் பழைமை வாய்ந்த முஸ்லிம் பள்ளிவாசலின் இடிபாடுகளையும் பின்னர் அமைக்கப்பட்ட பள்ளியையும் காணலாம். பழைய பள்ளியின் ஓரமாகக் கட்டப்பட்டுள்ள பள்ளியில் ஹிஜ்ரி ஆண்டு 1008 எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இது கி.பி.1598 ஆம் ஆண்டைக் குறிக்கும் பள்ளிவாசலில் உள்ள நடுப்பகுதியில் ''செய்கு சுல்தான் அப்துல் காதிர் வொலிய்யுல்லாஹ் றலி''யின் சமாதி உள்ளது. இவர் இங்கு வருகை தந்தபின்னர் மவுத்தாகி அடக்கம் செய்யப்பட்டதாகவும் இந்த இடம் மிகவும் புனிதம் பெற்ற தலம் என்றும் முஸ்லிம் மக்கள் கூறுகிறார்கள். தற்போது காணப்படும் பள்ளியின் காலம் 413 வருடங்கள் ஆகும். முழுமையாகச் சிதைந்து கிடக்கும் பழைய பள்ளிவாசல் 1400 ஆண்டுகளுக்குரியதுஎன்பதும் இவர்களது கூற்று.

சாட்டிப் பகுதியில் இந்திய முஸ்லிம்கள் மீன்பிடித்தல், கடலட்டை, சங்கு போன்றவற்றைப் பிடித்து விற்பனை செய்து வந்ததாகவும் அவர்களே தமது தொழுகைக்காக இந்தப் பள்ளியை அமைத்ததாகவும் கூறப்படுகின்றது. யுத்தத்திற்கு முன் இப்பகுதியில் கணிசமான முஸ்லிம் மக்கள் இருந்துள்ளனர். இங்கு ஐந்து முஸ்லிம் பாடசாலைகள் இருந்ததாகவும் எல்லாமே தரைமட்டமாகி விட்டதாகவும் கவலைப்படும் இந்த மக்கள் தமது உறவுகள் மீண்டும் இங்குவந்து குடியமர்வதன் மூலமே பள்ளியையும் தொழுகையையும் சிறப்படையச் செய்ய வாய்ப்பேற்படும். என்கின்றனர். இப்போது ஆறு முஸ்லிம் குடும்பங்கள் மட்டுமே உள்ளன.


தொகுப்பு:லக்ஸ்மன்

தீவுப்பகுதியில் இடம்பெற்ற அசம்பாவிதங்களை அடுத்து பள்ளிவாசல் பெரும் சேதத்திற்குட்பட்டிருந்தது. இப்பகுதி மக்கள் இடம்பெயர்ந்ததினால் பள்ளியின் மேற்குப் புறப்பகுதியில் உள்ள அதற்குரிய கட்டடங்களும் பாதிக்கப்பட்டன. மண்கும்பான் ஜும்மாப் பள்ளிவாசல் எனப்படும் இந்தப் பள்ளியில் ஆதிகாலத்தில் வெளிச்சம் வைப்பதற்காகக் கட்டப்பட்ட தூண்கள் நல்ல நிலையிலேயே உள்ளன.

பள்ளிக்கு மௌலவி இல்லாதது அவர்களுக்கு ஒரு மனக்குறை. மௌலவி ஒருவரை நியமித்து அவருக்கு ரூபா10ஆயிரம் சம்பளம் கொடுக்கக் கூடிய வசதி எங்களிடம் இல்லை. நாங்களே தொழுகையை நடத்துகின்றோம். மௌலவி ஒருவரைத்தர வேண்டும் என சம்பந்தப்பட்டவர்களிடம் விண்ணப்பித்துள்ளோம் எனக் கூறும் ஜும்மா பள்ளியின் நிர்வாகத்தில் தனாதிகாரியாகஉள்ள றியால் சலீம் இந்தப்பள்ளிக்கென ஒரு 'வக்பு' சபை உண்டு. அதன் மூலம் ஒரு மௌலவியைத் தந்துதவ வேண்டும் எனவும்சவுதிஅரேபியா வசதியில்லாதவர்களுக்கு உதவுகின்றது. அவர்கள் ஒரு மௌலவியைத் தெரிவு செய்து அனுப்பினால் நல்லது எனவும் தெரிவிக்கப்படுகின்றது.



லக்பு சபையின் தலைவராக உசெய்ன் நயினமுகம்மது, செயலாளராக செய்யது முகம்மது புகாரி ஆகியோருடன் ஐந்து பேர்கள் கொண்ட நிர்வாகம் உள்ளது. இந்த இருவரும் தற்சமயம் கொழும்புக்குச் சென்றுள்ளனர்.

பள்ளியின் வருமானம் மிகவும் குறைவு. இது பெரியவளவு. இதனைத் துப்புரவு செய்ய வருமானம் போதாது. 30 தென்னைகள் நிற்கின்றன. அதிலும் காய்கள் இல்லை. இம்முறை 67 காய்கள் மட்டுமே பிடுங்க முடிந்தது. எங்களிடமும் போதிய வருமானம் கிடையாது. தொழிலும் மிகக் குறைவாகவே நடக்கின்றது. அன்றாடச் செலவுகளுக்கே அல்லாடும் எங்களால் பள்ளியின் தேவைகளை எவ்வாறு நிறைவேற்ற முடியும் என்ற ஆதங்கம் அவர்களுக்கு. கஷ்டத்தின் மத்தியிலும் இரவில் ஜெனறேட்டர் வைத்து 6மணி முதல்9மணி வரைபள்ளிக்கு மின் வெளிச்சம் வழங்குகிறார்கள்.

யாழ்.மாநகர சபை உறுப்பினர் சுபியான் ஒரு சில உதவிகளையாவது பெற்றுத் தருவதாகக் கூறி எமது தேவைகள் குறித்துக் கேட்டுள்ளார். அவரைப் போன்று அரசில் செல்வாக்கு உள்ளவர்கள் எமது தேவைகளை நிறைவேற்றித் தர முன்வர வேண்டும். அல்ஹாவின் பெயரால் அவர்கள் இதனைக் கவனத்தில் எடுக்க வேண்டும் என்கிறார்கள்.

பாதிக்கப்பட்ட பள்ளிவாசலை சொற்ப அளவில் திருத்தியமைத்துள்ளோம். எனினும் உரிய முறையில் புனரமைக்கப்பட வேண்டும். மின்சார வசதிகள் ஏற்படுத்தித்தர வேண்டும். இங்குள்ள கிணறுகளில் ஒன்று மட்டுமே நல்ல நிலையில் உள்ளது. மிகவும் நல்ல தண்ணீராகவுள்ள ஏனைய கிணறுகளும் துப்புரவு செய்யப்பட வேண்டும்.

இது உல்லாசப் பயணிகள் வந்து கூடும் பகுதி. கடற்கரைக்கு வருபவர்கள் மதுபோதையுடன் சுற்றாடல்களையும் அசுத்தமாக்குகிறார்கள். ஒரு புனிதத் தலத்தை அதற்குரிய வகையில் பேணுவதற்கு மக்கள் உதவ வேண்டும். அழகான கடற்கரையில் அமைந்திருக்கும் ஒரு புனிதத்தலத்தை அதன் புனிதம் கெடாதவாறு பாதுகாப்பதில் மக்களும் மக்கள் நலனில் அக்கறையுள்ள மன்றங்களும் ஜாக்கிரதையுடன் இருப்பது அவசியம்தானே? ***

# நெடுந்தீவு மகா வித்தியாலயம்


*(சென்றவாரத் தொடர்ச்சி)*

நெடுந்தீவின் சிறப்புக்கு அங்குள்ள பாடசாலைகளின் பணிகளே முக்கியமானது. மாணவர்களைத் திறமையுள்ளவர்களாக வளர்ப்பதில் பாடசாலையின் பணி சிறப்பானது. அந்தவகையில் நெடுந்தீவு மக்களுக்குக் கல்வியைப் புகட்டுவதற்கு உருவான பாடசாலையே நெடுந்தீவு மகாவித்தியாலயமாகும்.

சங்கீதம், நாடகங்களில் மாணவர்களுக்கு மிகுந்த ஆர்வம் ஏற்பட சங்கீத ஆசிரியர்களாகப் பணியாற்றிய பாலசுந்தரம், சிவராஜா ஆகியோரும் நடனக் கலைக்கு ஏரம்பு சுப்பையாவும் தரமான பயிற்சிகளை வழங்கிவந்தனர். அதிபரான நவரத்தினசிங்கம் இதற்கான முழு ஒத்துழைப்பையும் வழங்கிவந்துள்ளார்.

நவோதயா பாடசாலையாக உள்ள இந்தப் பாடசாலையின் வளர்ச்சிக்காக இன்றைய அதிபர் திருமதி சாரதா கிருஷ்ணதாஸ் மற்றும் ஆசிரியர்கள் அயராது உழைத்து வருகின்றனர். பல்வேறு வசதியீனங்களால் ஆசிரியர் பற்றாக்குறை, போக்குவரத்துச் சீரின்மைகளால் ஆசிரியர்கள் உரிய நேரத்துக்குப் பாடசாலைக்குச் சமுகமளிக்க முடியாத நிலைமை, ஆசிரியர்கள் தங்கக் கூடியதாக விடுதி வசதிகளின்மை, யுத்த காரணமாகப் பாதிப்பை ஏற்படுத்திய சூழ்நிலைகள், இடைக் காலத்தில் ஏற்பட்ட ஆங்கிலக் கல்வியின் வீழ்ச்சி போன்ற பல்வேறு சவால்களுக்கு எதிர்நீச்சல் போட வேண்டிய நிலை இன்றைய அதிபர், ஆசிரியர்களுக்கு உள்ளது.

புதிய மாறுதல்களுக்கு ஏற்ப கல்விச் செயற்பாடுகள் அமைய வேண்டியுள்ளன. இப்போது கணினி பயிற்சி நெறிகளுக்கான




வசதி செய்யப்பட்டுள்ளதுடன் மாணவர்களுக்கு உகந்த முறையில் நூலகமும் அமைக்கப்பட்டுள்ளது. தற்போது 26 ஆசிரியர்கள் கடமையாற்றுகின்றனர். எனினும் சித்திரம், கணிதம் போன்ற பாடங்களுக்கு ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்களான காவலாளி, சுத்திகரிப்புத் தொழிலாளர் போன்றோர் தேவையாக உள்ளனர். வீழ்ச்சியடைந்த ஆங்கிலக் கல்வியை மீண்டும் முன்னெடுக்க ஆங்கில மொழி மூல வகுப்பு தரம் ஆறில் ஆரம்பிக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

பாடசாலைத் தேவைகளை நிறைவேற்றுவதில் அமைச்சர் கே. என். டக்ளஸ் தேவானந்தா, கல்வித்திணைக்கள அதிகாரிகள் ஆகியோர் முடிந்தவரை உதவுகிறார்கள். இவர்களுடன் மாணவர்களின் கல்விக்கான உபகரணங்களை வெளி நாடுகளில் உள்ள ஒன்றியங்களும் வழங்குகின்றது. வெளிநாட்டு ஒன்றியங்களின் உதவிகள் வெறும் கொப்பி, பென்சில்களுடன் நிற்காது நவீன தொழிநுட்ப அறிவுகளை மாணவர்கள் பெறக்கூடியதான கருவிகள், நூல்கள் என்பனவாக அமையவேண்டும் என்பதே பெற்றோர்கள், மாணவர்களது எதிர்பார்ப்பாக உள்ளது.

வசதிகுறைந்த சூழ்நிலையில் கணிசமான மாணவர்கள் வைத்தியர்களாகவும் பொறியியலாளர்களாகவும் ஏனைய அரச துறைகளிலும் சேர்ந்து கொள்ளக் கூடிய அறிவையும் ஆற்றலையும் வளர்த்த அதிபர்களுடன் ஆசிரியர்களான பண்டிதர் நா.கந்தையா, கே. செல்லையா, எம்.ஆறுமுகம், எஸ். சோமசுந்தரம், கே. இராசரத்தினம் ஐயம்பிள்ளை, தியாகராசா, நாகரத்தினம், இ.ஜெயசீலன், இ.ஜெயராஜா, எஸ். வேலாயுதம் பிள்ளை, செல்வி இ. நாகப்பர் போன்ற பலரின் அர்ப்பணிப்பான சேவைகள் அன்றைய கல்வி வளர்ச்சிக்கு உறுதுணையாக விளங்கியது போன்று இன்றைய அதிபர், ஆசிரியர்களின் பணியும் வித்தியாலயத்தின் உயர்வுக்கு உந்து சக்தியாக விளங்கும்.

வசதிகள் குறைந்த இன்றைய நிலையிலும் கூட வெளியிடங்களைச் சேர்ந்த ஆசிரியர்கள் இங்கு தங்கி முடிந்தவரை மேலதிக வகுப்புக்களையும் எடுத்துக் கொள்வது கல்வி வளர்ச்சிக்குப் பக்கபலமாகவே உள்ளது. கல்வியுடன் விளையாட்டுத் துறையிலும் கணிசமான வளர்ச்சி கண்டு வருகின்றது. கடந்த ஆண்டில் மதர் ஸ்ரீலங்கா நிகழ்வில் மாகாண மட்டத்தில் மூன்றாம் இடத்தைப் பெற்று தேசியமட்டப் போட்டியிலும் கலந்துகொண்டது. ஆங்கிலதினம் ஆரம்பப்பிரிவு மாணவர்களுக்கான நாடகம், கோலம், சுகாதாரம், நாட்டார்பாடல்போன்ற போட்டிகளில் மாவட்ட மட்டத்தில் சிறப்பான தேர்வுகளைப் பெற்றுள்ளது. உடற்பயிற்சி ஆசிரியர்கள் இல்லாத காலத்திலும்கூட போட்டிகளில் மாணவர்கள் சிறந்தே விளங்கினர். 1997 இல் தனது பொன் விழாவைக் கொண்டாடிய இந்தப் பாடசாலையின் முன்றலில் திருவள்ளுவரின் உருவச்சிலை இடம் பெற்றிருப்பது பெருமைக்குரியது.

நெடுந்தீவின் வளங்களில் முக்கியத்துவம் மிக்க கற்பகதருவும் மாடும் உள்ளடங்கிய பாடசாலையின் இலச்சினையில் முயற்சி திருவினையாக்கும் என்ற வாசகம் பொறிக்கப்பட்டுள்ளது. எல்லா வளங்களையும்பெற மகாவித்தியாலயம் நெடுந்தீவு மக்களுக்கு அவர்களின் முயற்சிக்குக் கைகொடுக்கும் என்பதே அதன் கருப்பொருளாகும்.

*(முற்றும்)*

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 1957 | | 2009 |
| 08 | | 02 |
| 17 | | 01 |



## அமரர் திருமதி கலாநந்தி சந்திரமோகன்

**Managing Director**

**SPANCKAA GENERAL MERCHANTS AND ENGINEERING CONSULTANTS (PVT) LTD.**

**திதி : வளர்பிறை சஷ்டி திதி (2011.02.09)**

" நிஜங்கள் எல்லாம் உங்கள் நினைவால் கானல் ஆவதன்றோ, சுகங்கள் எல்லாம் உங்கள் சுவாசத்தால் சுரக்கின்றதன்றோ,
எம் வாழ்க்கையை வளமாக்கி வசந்தத்தின் வழியில் வலம் வர வழிவகுத்தாய் எம் தாயே ! "

" பண்பென்ற உதிரத்தை பாலாக்கி ஊட்டி வளர்த்து எம்மை வாழ்வென்னும் அண்டத்தில் விட்டுச் சென்றாயே தாயே !
பிரிவென்னும் பெருந்துயரால் பரிதவிக்க விட்டாய் - இரண்டு ஆண்டுகள் என்ன ஓராயிரம் யுகங்களே கடந்தாலும் - மறையாது,
மாதாவே உங்கள் நினைவலைகள் "

அன்பின் திருவுருவாய் பாசத்தின் சிகரமாய், எம் வாழ்வின் ஒளியாய், எமக்கெல்லாம் சுமை தாங்கியாய் நின்று, எம் வளமான வாழ்விற்கு வழிகாட்டிய எம் குடும்ப குலவிளக்கு எம்மை விட்டுப் பிரிந்த துயர்தனை சுமந்த வண்ணம் இன்றைய தினம் உங்கள் இரண்டாம் ஆண்டு தனை நினைவு கூறுகின்றோம்.

**உங்கள் பெயரில் நிறுவப்பட்டுள்ள கலாநந்தி அறக்கட்டளை (Kalananthi Trust For Cancer Care) சார்பில் இரண்டாம் கட்டமாக தெல்லிப்பளை புற்றுநோய் தேசிய வைத்தியசாலையில் உள்ள பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு சத்துணவும் மருந்துப் பொருட்களும் உங்கள் நினைவாக வழங்கப்படும். இது உங்களுக்கு எமது சமர்ப்பணம்.**

**உங்கள் ஆத்மா சாந்தியடைய என்றும் இறைவனை பிரார்த்திக்கின்றோம்.**

**கணவர் : நா. சந்திரமோகன்**
**பிள்ளைகள் : ஐஸ்வரியா, ஐஸ்வரன்**
**தாய், தந்தை.**

No. 26 2/2, Peterson Lane,
Wellawatta, Colombo - 06.
Tel : 0094 77 3698798
Email : aisvaran93@gmail.com

(சி/575311)

# இருளின் கதவுகளைத் திறந்தவன்

22



**யூலியன் அசாஞ்சே பற்றிய ஒரு விறு விறு தொடர்**

தனிப்பட்ட - பாலியல் தொடர்பான அந்தரங்கத் தகவல்கள்- தவிர்க்கப்பட்டுள்ளன என்ற குறிப்போடு சாரா போலினின் மின்னஞ்சலின் ஒளிப்படக்காட்சிப் பிரதிகள் விக்கிலீக்ஸின் முகப்பை நிறைத்தன. கூடவே இலவச இணைப்பாக அந்த மின்னஞ்சல் எப்படித் திறக்கப்பட்டது என்ற விவரமும் வழங்கப்பட்டிருந்தது.

சாரா போலினின் மின்னஞ்சலில் சொல்லிக்கொள்ளும்படியான -கிளுகிளுப்பான விடயங்கள்- இல்லாவிட்டாலும் கூட ஒவ்வொரு மின்னஞ்சலும் சாராவை நெருப்பின் மீது நடப்பது போன்று கோபத்தில் எரியச்செய்துவிட்டது.

அமெரிக்காவில் அரசுசார் அலுவல்களுக்கு தனிப்பட்ட மின்னஞ்சலைப் பயன்படுத்தக்கூடாது என்பது கண்டிப்பான விதிகளில் ஒன்று.

ஏனெனில் சாராவைத் தொடர்ந்து வேறொருவர் ஆளுநராகப் பதவியேற்கும் போது அவர் முன்னைய ஆளுநர் விட்டுச் சென்ற பணிகளைச் சிரமமின்றித் தொடர்வதற்கு அலாஸ்கா ஆளுநருக்கென்று பிரத்தியேகமாக இருக்கும் மின்னஞ்சலையே பயன்படுத்த வேண்டும். அந்த விதிகளைப் பற்றியெல்லாம் அலட்டிக் கொள்ளாது தன்னுடைய தனிப்பட்ட மின்னஞ்சல் மூலம் ஏராளமான அரச உத்தரவுகளை சாரா தன்னுடைய அதிகாரிகளுக்குப் பிறப்பித்திருந்தார். அந்த உத்தரவுகளிஷ் சில சாராவின் தனிப்பட்ட நலன் சார்ந்தவை.

சாராவின் யாகூ முகவரியையுடைய மின்னஞ்சலை எல்லோரும் பார்க்கும்படி செய்ததன் மூலம் சாராவின் செல்வாக்கில் ஒரு சரிவை யூலியன் உண்டு பண்ணினான்.

அதிகாரிகளுக்கு சட்டத்தை இறுக்கமாகக் கடைப்பிடிக்குமாறு அறிவுறுத்தும் ஆளுநரே சட்டத்தைக் காற்றில் பறக்க விட்டதை அறிந்த ம்க்கள் சும்மாயிருப்பார்களா? அத்தோடு மிக முக்கிய பொறுப்பில் இருக்கும் ஒருவர் தன்னுடைய மின்னஞ்சல் மூலம் அதிகாரத் துஷ்பிரயோகத்தில் இறங்குவதை யார்தான் பொறுப்பார்கள். பொங்கியெழுந்த அமெரிக்காவின் ஊடகங்கள் பலவும் இந்தச் சாட்டில் சாராவை ஒரு பிடி பிடித்து விட்டன. எதிர்பாராத தாக்குதலால் வெலவெலத்துப் போன சாரா, யூலியன் மீது கண்டபடி வார்த்தைச் சாட்டையைச் சுழற்றினார்.

''யூலியனைச் சுட்டுத் தள்ள வேண்டும். ஒரு தனி மனிதனைக் கட்டுப்படுத்த முடியாத ஆண்மையற்ற அரசாங்கம் அமெரிக்காவில் ஆட்சியிலிருக்கிறது'' என்றெல்லாம் சாரா நெய்யூற்றி, ஏற்கனவே யூலியன் மீது புகைச்சலில் இருந்த அமெரிக்காவின் அதிகார வர்க்கத்தின் கோபத்தைக் கொழுந்து விட்டெரியச் செய்தார். அத்துடன் சாரா அமெரிக்காவின் குடியரசுக் கட்சியின் மிக முக்கியமான தூண் என்பதால் அவரது கோபத்தைத் தணிக்கவேண்டும் என்கிற கட்டாயமும் அமெரிக்காவுக்கு இருந்தது. ஆனாலும் சாராவின் மின்னஞ்சலின் பாதுகாப்புவேலியை உடைத்து உட்பு குந்தது யூலியன்தான் என்பது அப்பட்டமாகத் தெரிந்திருந்த போதும் எந்தச் சட்டத்தின் கீழ் வழக்குத் தொடர்வதெனத் தெரியாமல் தலையைப் பிய்த்துக்கொண்டது அமெரிக்கா.

ஏனெனில் யூலியனுக்கு எதிராக வழக்குத் தொடர்ந்தால் கடைசியில் சாரா போலின்தான் குற்றவாளியாகக் கூண்டில் ஏறவேண்டியிருக்கும். எதுவுமே நடக்காதது போல் இருப்பதே தனது கௌரவத்துக்கு அழகு என அமெரிக்கா அடக்கி வாசித்தது. எனினும் தன்னுடைய கண்ணில் இன்னும் எண்ணெயை விட்டுக் கொண்டு யூலியன் எங்காவது சறுக்குவானா என ஆவலோடு பார்க்கத்தொடங்கியது சி.ஐ.ஏ.

யூலியனை வீழ்த்த அமெரிக்கா காத்திருக்கத் தொடங்கிய அதேகணத்தில் அமெரிக்காவுக்கு மிகப் பெரிய ஆப்பை வைப்பதற்கு யூலியன் நாள் குறித்துக் கொண்டிருந்தான். இதுநாள் வரையும் யூலியன் மீது சில விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வந்தன.

யூலியன் அமெரிக்காவுக்கு எதிரானவன் போல காட்டிக் கொண்டாலும் அவன் அமெரிக்காவின் உளவு அமைப்பான சி.ஐ.ஏ யின் கையாள் எனவும் அமெரிக்காவின் நலனுக்கு எதிரானவர்களின் இரகசியங்களை அம்பலப்படுத்தவே விக்கிலீக்ஸ் உருவாக்கப்பட்டது எனவும் ஒரு கதை பரவலாக உலவியபடி இருந்தது. அத்துடன் விக்கிலீக்ஸில் வெளியான இரகசியங்கள் பலவற்றையும் யூலியன் தன்னுடைய ஹக்கிங் கெட்டித்தனத்தால் மட்டுமே உருவிவிட்டு, பின்னர் தனக்கு நிறையத் தகவல் வழங்கிகள் இருப்பது போல புலுடா

ஒளண்யன்

விடுவதாகவும் நம்பப்பட்டது. இந்த விமர்சனங்கள் எல்லாம் தவறானவை என வார்த்தைகளால் வாதிடுவதை விடவும் தன்னுடைய ஸ்டைலில் அந்தக் கருத்தை மாற்றியமைக்க யூலியன் விரும்பினான். அத்துடன் தன்னுடைய பரிசோதனை முயற்சிகள் எல்லாமே வெற்றிதான்.

என்ற இந்தத் துணிவுடன் அமெரிக்காவுக்கு எதிரான தன்னு டைய அதிரடியை ஆரம்பிப்பதற்காக தருணம் கனிந்து விட்டதாகவும் அவன் கருதினான்.

ஆனால் இதன்போது தன்னுடைய வழக்கமான சில நடைமுறைகளுக்கு குட்பை சொல்லிவிட்டு புதிய வகையில் தன்னுடைய போர்முனையை அவன் திறந்தான்: இதுவரையும் கெரில்லாமுறையிலான யூலியனின் ஊடகத் தாக்குதல்கள் மரபார்ந்த நிலைக்குச் சென்றன. தான் தகவல்களைப் பெற்றுக்கொள்ளும் விதம் பற்றியும் அவை எவ்வாறு பரிசீலிக்கப்பட்டு தரவேற்றம் செய்யப்படுகின்றன என்பது பற்றியும் ஒரு சாட்சியத்தைப் பக்கத்தில் வைத்துக் கொண்டே செய்து முடித்தான் யூலியன். அமெரிக்காவுக்கு யூலியன் வைத்த முதல் ஆப்பு என்ன?

*(திரைகள் இன்னும் திறக்கும்)*

---

# நடை பாதையில் நல விசாரிப்புகள்!

**கோணல் பக்கங்கள்**

**ஓடுகாலி**

அவசரம் மிகுந்துவிட்ட இந்தக் காலத்தில் சகமனிதர்களைப் பற்றி நம்மில் எத்தனைபேர் அக்கறைப்பட்டுக் கொள்கின்றோம்? இந்தக் கேள்வியைக் கேட்டால் பலரும் தலையைத் தொங்கப் போட்டுக் கொள்ளவேண்டியதுதான். ஆனால் நம்மை எவருமே நலம் விசாரிப்பதில்லையே என்று எவருமே கவலைப்படத் தேவையில்லை. அவ்வாறான மனக்குறை உங்களுக்கு இருக்குமானால் மோட்டார் சைக்கிளோ, காரோ, ஹை -ஏஸோ , பஸ்ஸோ ஏதோவொரு வாகனத்தில் ஏறிப்பயணம் செய்யுங்கள். அதன் பிறகு ஒவ்வொரு 500 மீற்றர் இடைவெளியிலும் உங்கள் பெயர், வயது, முகவரி என்பன கேட்கப்பட்டு, பின்னர் அதனை உறுதிசெய்ய அடையாள அட்டையும் பார்க்கப்பட்டு, நீங்கள் எங்கிருந்து வருகிறீர்கள்? எங்க போகிறீர்கள்? என்னும் கேள்விகளின் மூலம் அக்கறையோடு உங்கள் குசலம் விசாரிக்கப்படும்.அத்தோடு விட்டால் பரவாயில்லை.உங்கள் வாகனத்தின் சுகதுக்கங்களையும் அவர்கள் விசாரிக்காமல் விடமாட்டார்கள். அந்தளவுக்கு உங்கள் மீது கரிசனை கொண்ட படையினர் இருப்பதை எண்ணி நாமெல்லாம் ஆனந்தக் கூத்தாட வேண்டும்.

இராமாயணத்தில் வருகின்ற கும்பகர்ணன் என்பவன் ஒருவருடத்தில் ஆறு மாதம் தூங்கியே கழிப்பானாம். அவன் தூக்கத்திலிருந்து விழிக்கும்போது, தான் துயிலத் தொடங்கிய போது எதைக் கடைசியாக ஞாபகத்தில் வைத்திருந்தானோ அதையே தன் முதல் கேள்வியாகக் கேட்பானாம்.

உதாரணமாக அவன் தூங்கத் தொடங்கும் கணத்தில் யாராவது தவறுதலாகக் கீழே விழுவதை அவன் கண்டிருந்தால் விழிக்கும்போது யாரங்கே! கீழே விழுந்தவனைத் தூக்குங்கள்! என்று ஆணையிட்டபடியேதான் எழுவானாம். அதற்குள் விழுந்தவன் இறந்து ஆறு மாதங்களாகியிருக்கும். ஏனெனில் தூக்கத்தில் இருந்தபோது நடந்த மாற்றங்கள் எதுவுமே அவனுக்குத் தெரிந்திருக்க நியாயமில்லைத்தானே.

அதேபோலத்தான் இப்போது யாரோ தூக்கத்தில் இருந்து எழுந்து புதிய திட்டங்கள் என நினைத்து நிகழ்காலம் பற்றிய பிரக்ஞை எதுவுமேயில்லாது பழைமையான நடைமுறைகளைத் தூசு தட்டி எடுத்து வருகிறார்கள். அதன் ஒரு பகுதியே இப்போது வீதிகள் தோறும் நடந்தேறும் விசாரணைப்படலம்.

இங்கு படலம் என்று சொல்வதற்கும் காரணம் ஒன்றுண்டு. ஏழெட்டு பட்டங்களை ஒரே நூலில் தொடுத்து ஏற்றுவதைப் படலம் என்று சொல்வார்கள்.

அதேபோன்றே நீள்கின்ற பாதையெங்கும் தொடர்ச்சியாக விசாரிப்புகள் நிகழ்வதால் அதையும் படலம் என்றே சொல்லிவிடலாம்.

இப்போது அதுவும் போதாதென்று அடுத்த திட்டமும் சில கிராமசேவகர் பிரிவுகளில் அரங்கேற்றப்படத் தொடங்கியுள்ளது. அதுதான் ஃபமிலி போர்ம் என்கிற குடும்ப விவரப் பட்டியல்.

முன்னர் - அதாகப்பட்டது யுத்தம் நடந்து கொண்டிருந்தபோது- நடைமுறையில் இருந்ததைப் போன்று குடும்பத்தின் அங்கத்தவர்கள் அடங்கிய புகைப்படம் உள்ளடங்கலாக சகல விவரங்களும் அதில் பதியப்பட்டு, வீட்டின் முன்புறத்தில் தொங்கவிடப்பட வேண்டும். எல்லோரும் வேலை! வேலை என்று ஓடித்திரிவதால் பல குடும்பங்கள் ஒன்றாக இணைந்திருப்பதே அரிது. அதை மாற்றி எல்லோரும் ஒருநாளாவது ஒன்றாய்க் கூடிக் குலவுவதற்குத்தான் இந்தக் குடும்பப் புகைப்படம் எடுக்கும் திட்டத்தைப் படையினர் ஒழுங்கு செய்திருக்க வேண்டும்.

இல்லாவிட்டால் குற்றங்களின் சூத்திரதாரிகளைக் கண்டு பிடிப்பதற்கும் குடும்பப் புகைப்படங்களைச் சகல தரவுகளோடும் வீடுகளில் தொங்க விடுவதற்கும் என்ன சம்பந்தம் இருக்கப் போகின்றது? புலிகளை இனங் காண் பதற்கு வேண்டுமானால் இந்தக் குடும்பப் பதிவுமுறை, படம் என்பன உதவியிருக்கலாம். ஆனால் சமூகக் குற்றங்களைப் புரிந்தவர்களை இதனூடாகக் கண்டுபிடிக்க முடியுமா? என்பது கேள் விக்குரியது மட்டுமல்ல: கேலிக்குரி யதும்தான். ஏனெனில் இத்தகைய குற்றவாளிகள் சாதாரண நபர்களாகவே -குடும்பம், குழந்தைகள் என்போருடன் -வாழ்ந்து வருவர். தமக்குத் தேவைப்படும் போதுதான் இவர்கள் தம் கைவரிசையைக் காட்டுவர். அவர்களை எப்படி குடும்பப் பதிவு மூலம் கண்டுபிடிக்க முடியும். அத்துடன் இந்தக் குடும்பப் பதிவுகளைப் படையினர் பார்வையிட வருவர் என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறதாம்.

அப்படியானல் இனிமேல் வீதிகளில் மட்டுமல்லாது வீடுகளுக்கும் வந்து நம்மைக் குடும்பத்தோடு குசலம் விசாரிக்கவும் ரவுண்டப் என்ற பெயரில் படையினர் வரலாம்.

ஆஹா! என்ன அக்கறை! இதே போக்கில் போனால் வெகுவிரைவில் விசேட அடையாள அட்டை, கிளியரன்ஸ் போன்ற நடைமுறைகளும் மீள அறிமுகமாகலாம். இதுதானாம் சிவில் நிர்வாகம்.

எங்கே! எல்லோரும் ஒருதரம் மூச்சை உள்ளிழுத்துச் சுவாசியுங்கள். வடக்கின் வசந்தம் எங்காவது வீசுகிறதா? அதை அறிய வேண்டுமானால் எம்மைச் சுற்றி முளைக்கத் தொடங்கியுள்ள முள்வேலிகளைத் தாண்டித்தான் பார்க்க வேண்டியிருக்கும்.



எகிப்தில் ஏற்பட்டுள்ள அரசியல் குழப்பம் குறித்து துணை ஜனாதிபதி ஓமர் சுலைமான் (நடுவில்), முக்கிய எதிர்க்கட்சித் தலைவர்களுடன், தலைநகர் கெய்ரோவில் ஆலோசனை நடத்துகிறார்.

# உலகின் சிறந்த அரசியல் தலைவர்கள் வரிசையில் மகாத்மா, மன்னர் அக்பர்

நியூயோர்க், பெப். 09

உலகம் முழுவதும் உள்ள சிறந்த 25 அரசியல் தலைவர்களில் இந்தியாவின் மகாத்மா காந்தி, மொகலய மன்னர் அக்பர் ஆகியோரை சிறந்த அரசியல் தலைவர்கள் எனப் பாராட்டி அமெரிக்காவின் 'ரைம்' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

அமெரிக்காவிலிருந்து வெளிவரும் புகழ்பெற்ற பத்திரிகையான ரைம், உலக அளவில் சிறந்த 25அரசியல் தலைவர்களின் பெயர்களைப் பட்டியலிட்டுள்ளது. இதில் இந்தியாவின் சுதந்திரத்திற்காகப் பாடுபட்ட மகாத்மா காந்தி, 16ஆம் நூற் றாண்டில் மிகச்சிறந்த மொக லாய மன்னர் ஜலாலுதீன் முகமது அக்பர் ஆகிய இருவரும் அந்தப் பத்திரிகையால் பாராட்டப் பட்டுள்ளனர்.

தென்னாபிரிக்காவில் சட்டத்தரணியாகத் தொழில் செய்து வந்த மகாத்மா காந்தியடிகள் இந்தியாவில் இந்தியர்கள் அடிமைப்பட்டுக் கிடப்பதைப் பார்த்துக் கொதித்தெழுந்தார்.

1930 ஆம் ஆண்டு உப்புச் சத்தியாக்கிரகம்', வெள்ளையனே வெளியேறு இயக்கம் உள்ளிட்ட போராட்டங்களால் இந்தியாவுக்கு 1947ஆம் ஆண்டு சுதந்திரத்தைப் பெற்றுக்கொடுத்தார்.

இவரது போராட்டம், அமெரிக்க மக்கள் உரிமைக்காகப் போராடிய மார்டின் லூதர் கிங், இன வெறிக் கொள்கையைக் கடுமையாக எதிர்த்த நெல்சன் மண்டேலா ஆகியோரை நினைவூட்டுகிறது. இதனால் உலகம் போற்றும் அரசியல் தலைவராக உள்ளார்.

அதேபோன்று 16ஆம் நூற்றாண்டில் வடஇந்தியா முழுவதையும் ஆட்சி செய்த அக்பர், சிறந்த கவிஞர், தத்துவமேதை கலை, இலக்கியத்தில் இவர் கொண்டுள்ள ஆர்வம் ஆகியவற்றால் புகழப்படுகிறார். இவரது ஆட்சிக்காலம் ஐரோப்பியாவில் ஏற்பட்ட மறுமலர்ச்சியைப் போன்று அமைந்தது என்றும் அந்தப் பத்திரிகையில் புகழப்பட்டுள்ளது.

திபெத்திய புத்தமதத் தலைவர் தலாய்லாமா, அடோல்ப் ஹிட்லர், முசோலினி, மாஸோ சேதுங், மகாஅலெக்ஸாண்டர், முன்னாள் அமெரிக்க ஜனாதிபதிகள் ரொனால்ட் றீகன், ஆப்ரஹாம் லிங்கன் உள்ளிட்டோரும் ரைம் பத்திரிகையின் பாராட்டுப் பட்டியலில் உள்ளனர்.

# சுவிஸ் அகதிகளுக்கான கொள்கை நீதி அமைச்சர் அதிருப்தி

சுவிற்சர்லாந்தில் நடைமுறையில் உள்ள அகதிகள் தொடர்பான சட்டம் பலவீனமானது என்று அந்த நாட்டு நீதி அமைச்சர் சிமொனிட்டா சொமாருகா தெரிவித்துள்ளார்.

கடந்த 20 ஆண்டுகளாக அமுல்படுத்தப்பட்ட கொள்கைகள் எந்தவிதமான பயனையும் ஏற்படுத்தவில்லை எனக் குறிப்பிட்டுள்ளார்.

மக்கள் மத்தியில் நம்பிக்கையை ஏற்படுத்தாத அதே வேளை, அகதிகளின் எண்ணிக்கையில் குறைவில்லை என்று தெரிவித்துள்ளார்.

கடுமையான சட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டதாக வெளிப்படுத்தப்பட்ட போதிலும் உண்மையில் சட்டவிரோத குடியேறிகள் பலர் நாட்டிற்குள் பிரவேசிப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

வெளிநாட்டுப் பணியாளர்கள் சேவை அவசியம் எனவும் அது உள்நாட்டு ஊழியப்படையில் பாதிப்பை ஏற்படுத்தக் கூடாது எனவும் எகிப்து போன்ற நாடுகளில் ஏற்பட்டுள்ள அரசியல் பதற்ற நிலைமை அகதிகளின் எண்ணிக்கையை மேலும் உயர்த்தலாம் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

(ம)

# ஆப்கான் இராணுவத்திடம் நாட்டின் பொறுப்புகள்

முனிச் (ஜேர்மன்), பெப். 09

ஆப்கானிஸ்தானில் முகாமிட்டுள்ள நேட்டோ படைகள் எதிர்வரும் மார்ச் 21ஆம் திகதி முதல் கட்டமாக ஆப்கானிஸ்தான் இராணுவத்திடம் பொறுப்புகளை ஒப்படைக்கவுள்ளது என ஜனாதிபதி ஹமீத் கர்சாய் தெரிவித்துள்ளார். 47ஆவது சர்வதேச பாதுகாப்பு மாநாடு ஜேர்மனியின் முனிச் நகரில் நடக்கிறது. இதில் கலந்துகொண்டு ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி ஹமீத் கர்சாய் பேசியவை வருமாறு:-

கடந்த இரண்டு ஆண்டுகளில் ஆப்கானிஸ்தானின் பாதுகாப்பு நிலைவரம் முன்னேற்றம் அடைந்துள்ளது. ஆப்கானில் நல்லாட்சி நடக்க ஊழலை ஒழித்துக் கட்ட புதிய யுக்தியைக் கையாளத் திட்டமிட்டுள்ளோம். வளர்ச்சிப்பாதையில் ஆப்கானைக் கொண்டுசெல்ல உள்ளோம். தற்போது ஆப்கானிஸ்தானின் பாதுகாப்புக்காக ஒரு லட்சத்து 30 ஆயிரம் நேட்டோ படைகள் உள்ளன. முதல்கட்டமாக எதிர்வரும் மார்ச் மாதம் 21ஆம் திகதி நேட்டோ படைகள் ஆப்கானிஸ்தான் இராணுவத்திடம் பொறுப்புகளை ஒப்படைக்கும்.பின்னர் படிப்படியாக விலக்கிக் கொள்ளப்பட்டு, 2014ஆம் ஆண்டில் முழுமையாக ஆப்கான் இராணுவத்திடம் ஒப்படைக்கத் திட்டமிட்டுள்ளது. இவ்வாறு ஹமீத் கர்சாய் கூறினார். இதற்கிடையே நேட்டோ துருப்புக்களை விலக்கினால் ஆப்கானில் பயங்கரவாதம் பெருமளவு தலை தூக்கி விடும் என மாநாட்டில் கலந்துகொண்ட ரஷ்ய துணைப் பிரதமர் செர்ஜி இவானோவ் கருத்துத் தெரிவித்துள்ளார்.

**ஆள்கள் தேவை**

விற்பனைப் பிரதிநிதி 2 வருடம் அனுபவமுள்ளவர் மற்றும் காசாளர், விற்பனையாளர் ஆண், பெண் இருபாலாரும். சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

**பேப்பர் கவுஸ்**
300, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

**எவரெஸ்ட் தாளங்காய்த் தைலம்**



★ வாதம், மூட்டுவீக்கம், மூட்டு வேதனை என்பவற்றுக்குச் சிறந்த நிவாரணி
★ யாழ்ப்பாணத்துப் பாரம்பரிய சித்த மருத்துவர்களின் கையாட்சி முறைப்படி தயாரிக்கப்பட்டது.
★ யாழ்ப்பாணத்தில் உள்ள எல்லா மருந்தகங்களிலும் பெற்றுக்கொள்ளலாம்.

**எவரெஸ்ட் மருந்தகம்**
(பதிவு Ay/MF/JA/295)
உசன், மிருசுவில்.

**விற்பனைக்கு**

முல்லைத்தீவிலிருந்து கொண்டு வரப்பட்ட ஊர்த் தேங்காய்கள் மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு:- மஸ்ரி பாம் சென்ரர்,
0773001763 (61, இராமநாதன் வீதி, கல்வியங்காடு).

**காணி விற்பனை**

நீர்வேலி செம்பாட்டுப் பிள்ளையார் கோயிலுக்கு முன்பாக (150m தூரம்) உள்ள 8¾ பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்பு : 0779906042

**மணமகன் தேவை**

1980ஆம் ஆண்டு, உதயத்துச் செவ்வாய், 80 பாவம் உடைய உத்தரம் முதலாம் பாதம் உள்ள நடுத்தர குடும்பத்தைச் சேர்ந்த அரச உத்தியோகம் பார்க்கும் மணமகளுக்குப் பொருத்தமான மணமகனைப் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.
மேலதிக தொடர்பு:0777111349
கண்ணன் அழகு மாடம்
கண்டி வீதி, கொடிகாமம்.

**இறைச்சிக்கோழி விற்பனைக்கு**

உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட புறொயிலர் சுத்தம் செய்தது (1Kg 450/=). கல்பேட் சுத்தம் செய்து காலை 6 மணி தொடக்கம் இரவு 8 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.
**நல்லூர் பாம் சென்ரர்**
19, முருகேசர் லேன், நல்லூர்.
தொடர்பு : 0212226944

# நெஞ்சைவிட்டகலா நினைவலைகள்

2 ஆம் ஆண்டு | 11 ஆம் ஆண்டு

மலர்வு: 10.04.1979 | மலர்வு: 30.03.1975





உதிர்வு: 09.02.2009 | உதிர்வு: 16.02.2000

**நசரேனு றொபேட் வசந்தராஜ்    நசரேனு றொபேட் கெனடி**

ஆண்டுகள் பல ஓடி மறைந்திட்டாலும்
உங்கள் நினைவுகள் என்றென்றும் மறைந்திடுமோ?
புன்னகை சிந்தும் உங்கள் முகம்காண
தினமும் ஏங்கித் தவிக்கின்றோம்.

2 ஆம் கட்டை, புங்குடுதீவு.    உங்கள் பிரிவால் துயருறும்: குடும்பத்தினர்

# கொவிசெத

உத்தியோகப்பூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் **793**
சீட்டிழுப்பு திகதி **07.02.2011**

எழுத்து: **L**    வெற்றி இலக்கங்கள்: **02 43 48 65**

| | பொருத்தங்கள் | பரிசுத்தொகை | வெல்லப்பட்டோர் தொகை |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | ஆங்கில வழுத்துடன் 4 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 12,345,615.20 | - |
| 1ம் பரிசு | 4 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 1,000,000/= | 01 |
| 2ம் பரிசு | ஆங்கில வழுத்துடன் 3 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 20,000/= | 11 |
| 3ம் பரிசு | 3 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 2,000/= | 305 |
| 4ம் பரிசு | ஆங்கில வழுத்துடன் 2 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 1,000/= | 597 |
| 5ம் பரிசு | 2 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 100/= | 15281 |
| 6ம் பரிசு | ஆங்கில எழுத்துடன் ஒரு இலக்கம் சரியாயின் | ரூ. 40/= | 8647 |
| 7ம் பரிசு | 1 இலக்கம் சரியாயின் | ரூ. 20/= | 215945 |
| 8ம் பரிசு | ஆங்கில எழுத்து மாத்திரம் சரியாயின் | ரூ. 20/= | 34126 |

இம்முறை வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 9,302,400.00

அடுத்த வார சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூபா. 12,856,572.80

வெற்றிப் பெறும் சீட்டுகள் மோதங்களுக்குள் மட்டுமே செல்லுப்படியாகும். ஐந்து இலட்சமோ இதற்குக்கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரிச்சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது. பரிசைப் பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

**தேசிய லொத்தர் சபை**
234/2, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி: 2470662, 2470663 அவசர தேவைக்கு: 2473360
இணையதளம்: www.nlb.lk

# பெனாஸிர் கொலை வழக்கில் ஜெனரல் முஷாரப்பின் பெயர்

இஸ்லாமாபாத், பெப். 09

பெனாஸிர் கொலை வழக்கில், முன்னாள் ஜனாதிபதி முஷாரப் குற்றவாளியாகச் சேர்க்கப்பட்டுள்ளார். அவருக்கு எதிராக குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் பெனாஸிர், கடந்த 2007 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம், ராவல் பிண்டி நகரில் தேர்தல் பிரசாரம் செய்தபோது கொல்லப்பட்டார். அப்போது, ஜனாதிபதி பதவியில் முஷாரப் இருந்தார்.

பெனாஸிருக்குப் போதுமான பாதுகாப்பு அளிக்க முஷாரப் தவறி விட்டார் என ஐ.நா. விசாரணைக்குழு ஏற்கனவே குற்றஞ்சாட்டியது.

பெனாஸிர் கொலை தொடர்பாக, தலிபான் அமைப்பைச் சேர்ந்த 5 பேர் மீது, ராவல்பிண்டியில் உள்ள பயங்கரவாதத் தடுப்பு நீதிமன்றத்தில் வழக்கு விசாரணை நடைபெற்றுவருகிறது.

இவ்வழக்கு விசாரணைக்கு வந்தபோது, வழக்கை விசாரித்து வரும் தேசிய புலனாய்வுப் பிரிவினர் இடைக்கால குற்றப்பத்திரிகை தாக்கல் செய்தனர். அதில், முஷாரப் பெயர், குற்றவாளியாக சேர்க்கப்பட்டு உள்ளது.

பெனாஸிருக்குப் பாதுகாப்பு வழங்கியதில் மெத்தனமாக செயல்பட்ட பொலிஸ் அதிகாரிகள், முஷாரப்பின் உத்தரவுப்படியே அப்படி செயல்பட்டனர் என குற்றப்பத்திரிகையில் கூறப்பட்டுள்ளது.

பெனாஸிர் பயன்படுத்திய 2 கையடக்கத் தொலைபேசிகளின் தடயவியல் ஆய்வு அறிக்கையும் குற்றப்பத்திரிகையில் சேர்க்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து நீதிமன்றத்தில் அரசு சட்டத்தரணி சவுத்ரி சுல்பிகர் கூறியவை வருமாறு:-

பெனாஸிர் கொலை வழக்கு விசாரணைக்கு ஒத்துழைக்குமாறு விடுத்த வேண்டுகோளை முஷாரப் நிராகரித்துவிட்டார். அவர் ஒத்துழைக்காததால், குற்றவாளியாக சேர்க்கப்பட்டுள்ளார்.

அவரை 'தலைமறைவு குற்றவாளியாக' அறிவிக்க வேண்டும். அவர் தொடர்ந்து ஒத்துழைப்பு அளிக்க மறுத்தால், அவர் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு அவர் கூறினார்.

முஷாரப், கடந்த 2009ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் இருந்து பிரிட்டனில் வசித்து வருகிறார். 2013ஆம் ஆண்டு பொதுத்தேர்தல் சமயத்தில், பாகிஸ்தானுக்கு திரும்பப் போகிறார் என அவர் ஏற்கனவே அறிவித்து இருந்தார்.

தேர்தலில் போட்டியிடும் நோக்கத்தில், அவர் 'அனைத்து பாகிஸ்தான் முஸ்லிம் லீக்' என்ற அரசியல் கட்சியைத் தொடங்கியுள்ளார். அவர் மீது ஏற்கனவே பல்வேறு வழக்குகள் இருக்கும் நிலையில், பெனாஸிர் கொலை வழக்கும் சேர்க்கப்பட்டுள்ளதால், அவர் பாகிஸ்தான் திரும்பினால் கைது செய்யப்படும் அபாயம் நிலவுகிறது.

# சூரியனின் உருவத்தை படம்பிடித்த செய்மதிகள்

லண்டன், பெப். 09

அமெரிக்காவின் நாசா அனுப்பிய இரண்டு செயற்கைக் கோள்கள், சூரியனின் முழு உருவத்தையும் படம் பிடித்து அனுப்பியுள்ளன.

அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி மையமான நாசா, 2006இல் சூரியனைப் பற்றி ஆராய 'ஸ்டீரியோ' என்ற இரண்டு செயற்கைக் கோள்களை விண்ணில் செலுத்தியது. பூமியின் பக்கமாக ஒரு செயற்கைக் கோளும், சூரியனுக்குப் பின்புறமாக மற்றொரு செயற்கைக் கோளும் நகர்ந்து சென்று சூரியனின் முப்பரிமாணத்தை படம் பிடித்து அனுப்பியுள்ளன.

பிரிட்டனை சேர்ந்த பேராசிரியர் ரிச்சர்ட் ஹாரிசன் தான் இந்த திட்டத்தை வடிவமைத்தவர். இது குறித்து அவர் குறிப்பிடுகையில், "ஸ்டீரியோ செயற்கைக் கோள்கள் சூரியனின் 360 டிகிரியையும் படம் பிடித்துள்ளன. சூரியன் வெளியிடும் பிரமாண்ட துகள்கள், காந்த கதிர்கள் ஆகியவற்றையும் 'ஸ்டீரியோ' படங்கள் மூலம் தெரிவித்துள்ளன. இந்தப் படங்களை வைத்து, விண் வெளியின் தட்ப வெட்ப மாற்றங்களையும் அறிந்து கொள்ள முடியும். எல்லோரும் நினைப்பது போல சூரியன் அழகிய மஞ்சள் நிற அமைப்பைக் கொண்டதல்ல" என்றார்.

# பெஷாவரிலும் தாக்குதல்

பெஷாவர், பெப். 09

பாகிஸ்தானில் பெஷாவர் மாகாணத்தில் பொலிஸ் வாகனத்தை குறிவைத்து தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் பொலிஸ்காரர் ஒருவர் உயிரிழந்தார். 3 பேர் காயமடைந்தனர்.

மற்றொரு சம்பவத்தில் பெஷாவரின் புறநகர்ப் பகுதியில் இருக்கும் ஒரு சோதனைச் சாவடியை தீவிரவாதிகள் குண்டு வைத்து தகர்த்தனர்.

# சூடானை இரண்டாகப் பிரிக்க 99 சத வீதமானோர் ஆதரவு

கார்டோம், பெப். 09

ஆபிரிக்க நாடான சூடான், தெற்கு, வடக்கு என இரண்டாகப் பிரிக்கப்படவுள்ளது. இதற்கான மக்கள் வாக்கெடுப்பு கடந்த சில நாள்களுக்கு முன்னர் நடந்து முடிந்தது.

இதன்படி தெற்கு சூடான், வடக்கு சூடான் என இரண்டாகப் பிரிக்க நடந்த வாக்கெடுப்பில் 98.83 சதவீத மக்கள் நாடு இரண்டாகப் பிரிக்கப்படு வதை ஆதரித்து வாக்களித்தனர். 1.17 சதவீதம் பேர் நாடு பிரிக்கப்படுவதை எதிர்த்து வாக்களித்தனர்.

வாக்கெடுப்பை மக்கள் வாக்கெடுப்பு ஆணையாளர் இப்ராஹிம் வெற்றிகரமாக நடத்தினார்.

இறுதி முடிவுகள் அறிவிக்கப்பட்ட நிலையில், தெற்கு சூடான் தனி குடியரசாக ஜனாதிபதி ஒமர் அல்-பஷீர் ஒப்புதல் அளித்து இதற்கான வரையறை ஆவணத்தில் கையெழுத்திட்டார்.

சூடானின் துணை ஜனாதிபதி அலி ஒஸ்மான் கூறுகையில், தெற்கு சூடான் தனி நாடு உருவாக்கப்படுவதை மக்கள் தீர்மானித்துள்ளனர். இதனால் நாடு பிரிக்கப்படுவது தவிர்க்க முடியாதது என்றார்.

நாளை 10 ஆம் திகதி தெற்கு சூடான் எனும் தனி குடியரசு நாடு உதயமாகவுள்ளது. சூடான் பிரிக்கப்படுவதற்கு அமெரிக்கா வர வேற்பு அளித்துள்ளது.



ரஷ்யா- ஜப்பான் வடக்கு மாகாணத்தின் கடல் பகுதியில் உள்ள குரில் தீவுகள் மீதான ஆக்கிரமிப்பு குறித்து, பேச்சுவார்த்தை நடத்த வந்த ரஷ்ய பிரதிநிதிகளுடன், ஜப்பான் பிரதமர் நௌட்டோகான் தலைநகர் டோக்கியோவில் நடந்த செய்தியாளர்கள் கூட்டத்தில் பேசினார்.

# போராட்டத்தைக் கைவிட மறுத்து எகிப்தில் டாங்கிகள் முன் மறியல்

கெய்ரோ, பெப். 09

எகிப்தில் போராட்டத்தைக் கைவிட மறுத்து இராணுவ டாங்கிகள் முன் பொதுமக்கள் மறியல் செய்கின்றனர்.

கடந்த 30 ஆண்டுகளாக பதவியில் இருக்கும் ஜனாதிபதி ஹோஸ்னி முபாரக் பதவி விலக வலியுறுத்தி கடந்த 2 வாரங்களாகப் பொதுமக்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

இதுவரை சுமார் 200 பேர் பலியாகி உள்ளனர். இருந்தும் அவர் பதவி விலக மறுத்து வருகிறார். செப்டம்பர் மாதம் நடைபெற உள்ள ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னர் பதவி விலகுகிறார் எனத் தெரிவித்துள்ளார்.

தற்போதுள்ள தனது அமைச்சரவையை முபாரக் கலைத்து விட்டு மாற்றி அமைத்துள்ளார். இருந்தும் போராட்டம் ஓயவில்லை. எனவே போராட்டத்தை முடிவுக்குக் கொண்டுவரும் பொருட்டு இணை ஜனாதிபதி ஒமர் சுலைமான், எதிர்க்கட்சியினருடன் பேச்சு நடத்தினார்.

அப்போது அரசியல் சட்டத்தில் மறுசீரமைப்பு செய்வது என அரசு தரப்பில் ஒப்புக்கொள்ளப்பட்டது. இதனால் போராட்டம் தீவிரமடையாமல் மந்தமானது. இதற்கிடையே ஒப்பந்தத்தில் கூறப்பட்டபடி அரசு ஊழியர்களுக்கு எதிர்வரும் ஏப்ரல் மாதம் முதல் 15 சதவீதம் சம்பள உயர்வு அளிப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஓய்வூதியதாரர்களுக்கு 650 கோடி எகிப்து பவுண்ட் ஓய்வூதியம் வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. போராட்டத்தை கைவிட பொதுமக்கள் மறுத்துவிட்டனர். இன்னும் ஏராளமானவர்கள் போராட்டம் நடைபெறும் தஹ்ரீர் சதுக்கத்தை விட்டு வெளியேறாமல் அங்கேயே தங்கியுள்ளனர்.

இதுபோன்ற சலுகைகளை அறிவித்து ஜனாதிபதி முபாரக் மக்களை ஏமாற்றுகிறார். எனவே அவரது வாக்குறுதிகளை நம்ப முடியாது. உடனடியாக அவர் பதவி விலகுவதன் மூலம்தான் இப்பிரச்சினைக்கு தீர்வு காண முடியும் எனத் தெரிவிக்கின்றனர்.

தஹ்ரீர் சதுக்கத்தில் நிறுத்தப்பட்டிருக்கும் இராணுவ டாங்கிகள் முன்பு அமர்ந்து மறியல் போராட்டம் நடத்துகின்றனர். அவர்களை அங்கிருந்து அப்புறப்படுத்த இராணுவச் சிப்பாய்கள் முயற்சி செய்கின்றனர். ஆனால் அங்கிருந்து செல்ல மறுத்து தொடர்ந்து கோஷங்களை எழுப்பி வருகின்றனர்.

போராட்டத்தில் ஈடுபட வெளிநாடுகளில் வாழும் எகிப்தியர்கள் நாடு திரும்பியுள்ளனர். அவர்களும் போராட்டத்தில் களம் இறங்க ஆர்வமுடன் உள்ளனர்.

# பொலிஸ் வாகனம் மீது பாகிஸ்தானில் தாக்குதல்

வடமேற்குப் பாகிஸ்தானில் பொலிஸ் வான் மீது தலிபான் தீவிரவாதிகள் திங்கட்கிழமை நடத்திய தாக்குதலில் பொலிஸ்காரர் ஒருவர் உயிரிழந்தார். மேலும் 7 பொலிஸார் காயமடைந்தனர்.

கைபர் பக்தூன்வா மாகாணத்தில் உள்ள ஹங்கு மாவட்டத்தில் பல்யாமினா பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலிஸ் வான், வழக்கமான ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்தது. அப்போது தீவிரவாதிகள், ரொக்கெட்டுகள், தானியங்கி ஆயுதங்கள் ஆகியவற்றின் மூலம் வான் மீது தாக்குதல் நடத்தினர். இதில் வானில் இருந்த பொலிஸ்காரர் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். 7 பொலிஸார் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்களில் அந்த பொலிஸ் நிலையத்தின் தலைமை அதிகாரியும் அடங்குவார். அண்மைக் காலங்களில் இந்த மாவட்டத்தில் தலிபான் தீவிரவாதிகள் பொலிஸார் மீது அதிக அளவில் தாக்குதல் நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# அமெரிக்கத் தூதரக அதிகாரியால் கொல்லப்பட்டோர் உளவாளிகளா?

பாகிஸ்தானில் லாகூரில் உள்ள அமெரிக்க தூதரகத்தில் பணியாற்றும் ரேமண்ட் டேவிஸ், 2 பாகிஸ்தானியரை சுட்டு கொன்றார் எனக் கைது செய்யப்பட்டார். அவரால் கொல்லப்பட்டவர்கள், வழிப்பறி கொள்ளையர்கள் என்று பொலிஸார் கூறியிருந்தனர். திடீர் திருப்பமாக, அவர்கள் பாகிஸ்தான் உளவுப்படையைச் சேர்ந்தவர்கள் என்று ஒரு பத்திரிகை, செய்தி வெளியிட்டுள்ளது. அவர்கள், ரேமண்ட் டேவிசின் செயல்பாடுகள், பாகிஸ்தானின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இருப்பதை கண்டுபிடித்தனர் என்றும் அதனால் அவர்களை டேவிஸ் சுட்டுக் கொன்றுவிட்டார் என்றும் ஒரு பாதுகாப்பு அதிகாரி தெரிவித்ததாக அப்பத்திரிகை கூறியுள்ளது.

# CAR விற்பனைக்கு

TOYOTA VITZ 2007 1000 CC
NP- KK XXXX 23,000 Km done,
Dark Blue. Rs 26.5 m



மற்றும் Japan இல் இருந்து நேரடியாக உங்களுடைய பெயரிலேயே வாகனங்கள் இறக்குமதி செய்து கொடுக்கப்படும். TOYOTA - AXIO, ALLION, BELTA, VITZ, HIACE - DX/ GL Permit உள்ளவர்களுக்கு 2010 Brand New வாகனங்கள் புதிய இறக்குமதி வரிக்கு அமைவாக குறைந்த விலையில் இறக்குமதி செய்யலாம்.

தொடர்புகளுக்கு: Vasce 0777752169


# கண்ணீர் அஞ்சலி



எம்முடன் பணியாற்றும் திரு ஐ.பாலரட்ணம் அவர்களின் அன்புத் தாயார்

## திருமதி ஐயாத்துரை மனோன்மணி

அவர்கள் இறைபதமடைந்த செய்தி எம்மை ஆழ்ந்த வேதனைக்கு உள்ளாக்குகின்றது. அன்னாரின் பிரிவில் துயருற்றிருக்கும் அவர்தம் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

முகாமையாளர், ஊழியர்கள்
தேசிய சேமிப்பு வங்கி - யாழ்ப்பாணம் மேற்தரக் கிளை

# மரண அறிவித்தல்

## திருமதி சவிரிமுத்து காணிக்கையம்மா [புனிதசீலி]



கடந்த (06.02.2011) ஞாயிற்றுக்கிழமை காலஞ் சென்ற திருமதி சவிரிமுத்து காணிக்கையம்மாவின் நல்லடக்க ஆராதனை நாளை (10.02.2011) வியாழக்கிழமை காலை 9 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொட்டடி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

167, குருசோ வீதி, கண்டுக்குளி,
யாழ்ப்பாணம். 021 300 7786

தகவல்:
பிள்ளைகள்.

# உங்கள் நினைவுகள் சுமந்த 2ஆம் ஆண்டில்



மலர்வு
14.04.1948

உதிர்வு
01.02.2009

## திருமதி முருகேசு நாகேஸ்வரி

ஆண்டுகள் இரண்டு சென்றுவிட்டது
உன் ஆனந்த முகத்தைக் கண்டு
எத்தனை ஆண்டுகள் ஆனாலும் உம்
பசுமை நினைவுகள் எம் நெஞ்சை விட்டு அகலாது

கல்வயல் வடக்கு,
சாவகச்சேரி

பிரிவால் துயருறும்
பேர்த்தி, பேரன்


O/L தகமையுடன் மருத்துவத்துறையுள் புகும் வாய்ப்பு

# "CERTIFIED MEDICAL ASSISTANT" (An US Curriculum)

சான்றழிக்கப்பட்ட மருத்துவ உதவியாளர் பயிற்சி நெறி புதிய பிரிவிற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.(Batch -#3)

CMA US Curriculum

மருத்துவ உதவியாளர் பயிற்சி நெறி (பிரிவு03)

A pathway for Private Nursing

Quality Assured

தனியார் வைத்தியசாலைகளில்,பல்தேசிய மருந்து தயாரிக்கும் நிறுவனங்களில் Nursing Staff,Admins, Medical Sales Rep,Marketing Rep போன்ற வெற்றிடங்களை உடன் நிரப்புவதற்கான 6 மாத கால கல்வி நெறி.



After O/L
6 Months Training

MBBS வைத்திய விரிவுரையாளர்களால் லாவா வைத்தியசாலையில் செயல்முறையுடன் கற்பிக்கப்படும் மருத்துவ பயிற்சி நெறி.

City & Guilds Qualified

Lava Hospitals — பயிற்சியின் பின் வேலை உறுதிப்படுத்தப்பட்டது.

தகமைகள் : O/L 4 பாடங்கள் சித்தி,நேர்முகப்பரீட்சை மூலம் அனுமதி. குறிப்பிட்ட ஆசனங்கள் மட்டுமே.

பதிவுகளுக்கு முந்துங்கள். விபரங்கள் நேரடியாக மட்டும் வழங்கப்படும்

**Knowledge Universe®**
Malaysian College of Business and IT

Tel: 0777302882 | # 75,Temple Road,Jaffna | www.kugroup.info

லவா வைத்தியசாலை மேல்மாடி


# பருத்தித்துறை - கொழும்பு பஸ் சேவை ஆரம்பம்

வடமராட்சி, பெப். 09

ஏ-9 பாதையில் வெள்ள நிலைமை சீரடைந்ததைத் தொடர்ந்து பருத்தித்துறை கொழும்பு பஸ் சேவை நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை முதல் ஆரம்பமாகியுள்ளது.

அனுராதபுரத்துக்கும் - மதவாச்சிக்கும் இடையில் உள்ள வீதியில் வெள்ளம் மேவிப் பாய்ந்ததையடுத்து சில தினங்களாக போக்குவரத்துக்கள் தடைப்பட்டிருந்தன.

நிலைமை சீரடைந்ததையடுத்து பருத்தித்துறை - கொழும்பு இ.போ.ச. பஸ் சேவை நேற்றுமுன்தினம் முதல் ஆரம்பமாகி வழமை போல நடைபெற்றுவருகிறது.

அதேவேளை கொழும்புக்கான தனியார் சேவைகளும் கடந்த ஞாயிற்றுக் கிழமை முதல் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன. (ஒ-236)


## வீடு வாடகைக்கு தேவை

யாழ். நகர எல்லைக்குள் உடனடியாக வீடு வாடகைக்குத் தேவை.
தொடர்புகளுக்கு: 0770555855


## பதவி வெற்றிடம்

### ராம் சுப்ப சிற்றி

*306, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்*
*தொலைபேசி இல.021 222 1252, 0212221262*

1. காசாளர்
2. கணக்காளர்
3. சாரதி

தகைமையுடையவர்கள் உரிய ஆவணங்களுடன் நேர்முகத் தேர்வுக்கு சமுகம் அளிக்கவும். (5 கிலோ மீற்றருக்கு உட்பட்டவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்)

காலம்: 12.02.2011
நேரம்: முற்பகல் 10 மணி


## விற்பனைக்கு

11 அடி நீளமும் 7 அடி உயரமும் உடைய இரும்பு சுருக்கு கேற் 10 அடி அகலமும் 7 அடி உயரமும் உடைய பலகைக் கதவும் விற்பனைக்கு உண்டு.

(சி-575561) தொடர்பு - 0771298201



அரச ஊழியர்க்கான
## சிங்கள வகுப்பு
ஆசிரியர்
MR.E.S PIYADASA S.L.T.S-I
(S.P.Trd.Sinhala)
(ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர்)

**Feb.20ல் ஆரம்பமாகிறது.**

நேரசூசியில் மாற்றம் தேவைப்படுவோர் ஆரம்பநாள் (ஞாயிறு) பி.ப 3.45 மணிக்கு வருகை தரவும்
மேலதிக விபரங்கட்கு:
- அதிபர்

The Express Institute
Irupalai, Kopay.

## விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள Yamaha DTxxxx (Racing) மோட்டார் வண்டி உடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு -0778297928 (C/052)

## கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான புறொயிலர் கோழிக்குஞ்சுகள் விநியோகம் செய்யப்படும். பதிவுகளை மேற்கொள்ளவும். அத்துடன் கோல்ட்கொயின் கோழித் தீவனங்களையும் பெற்றுக் கொள்ளலாம்.

ஸ்ரீ றீ பாம் றேடேர்ஸ்,
ஆறுமுகநர் வீதி, நல்லியங்கடு.
தொடர்பு:0777238573

மகமாயி ஸ்ரோர்ஸ்,
866, K.K.S.றோட்,
யாழ்ப்பாணம். 0773484992

## வெயிட்டர் தேவை

யாழ். நகரில் இயங்கும் பிரபல ஸ்தாபனமொன்றுக்கு வெயிட்டர் (உணவு பரிமாறுபவர்) உடன் தேவை. நியாயமான சம்பளம், தங்குமிட வசதி, உணவு, சீருடை என்பன வழங்கப்படும்.

**601, நாவலர் வீதி, நல்லூர்.**
**074 4714636**

## கட்டடம் வாடகைக்கு

யாழ்.பலாலி றோட்டில் இலுப்பையடிச் சந்திக்கும் அம்மன் வீதிக்கும் இடையில் 3 தொடர் கட்டடங்கள் வாடகைக்கு விடப்படும். வாகன தரிப்பிட வசதி உண்டு. வியாபார ஸ்தாபனம், அலுவலகப் பாவனை, களஞ்சியசாலைக்கு ஏற்றது.
தொடர்புக்கு: 0773351671. (041)

## தேவை

Accounts Clerk தேவை. பிரபல்யமான கம்பனிக்கு 2 வருடம் வேலையில் அனுபவம் உள்ளவர்களும் கணினி அறிவுடன் MS Office, Package இல் அனுபவம் கொண்டவராக இருத்தல் வேண்டும்.
தொடர்பு:
021 222 0614, 021 5671024. (042)





சீட்டிழுப்பு இலக்கம் 723 திகதி 07-02-2011

வெற்றி எண்கள்

**01 26 37 56 U** (ஆங்கில எழுத்து)

ஜக்பொட் பரிசு ரூ. 10,470,850/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 0 | 10,470,850/= | - |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | 02 | 400,000/= | 800,000/= |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 13 | 2,000/= | 26,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 412 | 1,000/= | 412,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 670 | 1,000/= | 670,000/= |
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | 16121 | 60/= | 967,260/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 7778 | 40/= | 311,120/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 191787 | 20/= | 3,835,740/= |
| | | மொத்தம் | ரூ. 7,022,120/= |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 08 | 50,000/= | 400,000/= |

ரூபா 50,000 வீதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்.

| | |
|---|---|
| களுத்துறை | 600789026-7-47 |
| அம்பாறை | 600789966-1-31 |
| இரத்தினபுரி | 600792982-7-27 |
| நுவரேலியா | 600784332-3-13 |
| கேகாலை | 600787263-8-48 |
| கொழும்பு | 600793632-0-30 |
| திருகோணமலை | 600799240-4-24 |
| குருநாகல் | 600780432-3-23 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 7,422,120/=

இந்த வியாழக்கிழமை சுப்பர் ஜக்பொட
**ரூ. 10,995,400/=**

செம்மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2011 பெப்ரவரி 10 ஆம் திகதி வியாழக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை,
யூனியன் பிளேஸ், கொழும்பு - 02
தொ.பே: 2333546/7

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

# கோண்டாவில் பனைதென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் (வரையுள்ளது)

## பதவி வெற்றிடம்

பதிவு இலக்கம் : ஜே/1572
பதிவுத் திகதி: 01.03.1972
பதவி: கணக்காளர்
குறியீட்டு இலக்கம்: 104/10
சம்பள அளவுத்திட்டம்:
பதவி எண்ணிக்கை 01

10,700 - 120×10 - 130×10 - 13200
128400 - 1440×10 - 1560×10 - 158400

### அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்

அ. கூட்டுறவுப் பணியாளர் 11ஆவது சம்பளத்திட்ட கணக்கு பதிவியலாளர் அல்லது கணக்கு அல்லது கணக்குப் பரிசோதனை அலுவல்கள் சம்பந்தமான எழுதுவினைஞர் பதவி ஒன்றில் (3)வருடங் களுக்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளர் 12ஆவது சம்பளத்திட்ட கணக்கு பதிவியலாளர் அல்லது கணக்குப் பரிசோதனை அலுவல்கள் சம்பந்தமான பதவியொன்றில் ஆறு (6) வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

அல்லது

ஆ. ஐக்கிய இராச்சிய கணக்குப் பதிவியலாளர் நிறுவன இறுதியாண்டு பரீட்சையுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக அல்லது கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் கணக்கு அல்லது கணக்குப் பரிசோதனை அலுவல்கள் சம்பந்தமான மேற்பார்வை மட்ட பதவியொன்றில் இரண்டு (2) வருடங்களுக்கு குறையாத அனுபவம். அல்லது ஐக்கிய இராச்சியக் கணக்கு பதிவியலாளர் நிறுவன இடைநிலைப் பரீட்சையுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக அல்லது கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் கணக்கு அல்லது கணக்குப் பரிசோதனை அலுவல்கள் சம்பந்தமான மேற்பார்வை மட்ட பதவியொன்றில் நான்கு (4) வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

அல்லது

இ. கூட்டுறவுப் பணியாளர் (உயர்தரம்) சான்றிதழ் அல்லது கா.பொ.த (உயர்தரம்) கணக்கியல் உட்பட மூன்று பாடங்களில் சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக அல்லது கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் கணக்கு அல்லது கணக்கு பரிசோதனை அலுவல்கள் சம்பந்தமான மேற்பார்வை மட்ட பதவியொன்றில் நான்கு (4) வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

வயது: விண்ணப்ப முடிவுத் திகதியில் 18 வயதுக்கு மேற்பட்டவராகவும் 45 வயதுக்குட்பட்டவராகவும் இருத்தல் வேண்டும். கூட்டுறவு சங்க பணியாளர்களுக்கு வயது எல்லை விலக்களிக்கப்பட்டுள்ளது. கூட்டுறவு சங்க பணியாளர்கள் தாங்கள் கடமைபுரியும் கூட்டுறவு சங்கத்தின் ஊடாக விண்ணப்பித்தல் வேண்டும்.

* சங்கம் கோரும் பிணைப்பணத்தை ரொக்கமாகவும் ஆதனமாகவும் செலுத்துதல் வேண்டும்.
* கணினி பற்றிய அறிவு உள்ளோருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
* விண்ணப்ப முடிவுத்திகதி 19.02.2011
* விண்ணப்பங்கள் யாவும் சங்கம் வழங்கும் படிவத்தில் பூரணப்படுத்தப்பட்டு சான்றிதழ்களின் நிழல் பிரதிகளுடன் பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.
* விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி

தலைவர்
ப.தெ.வ.அ.கூட்டுறவுச் சங்கம், கே.கே.எஸ் வீதி,
தாவடிச்சந்தி, கோண்டாவில்.

விண்ணப்ப கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "கணக்காளர், குறியீட்டு இலக்கம் 104/10" என குறிப்பிடுதல் வேண்டும்.

## இன்று மின்தடை

உயரழுத்த மின்மார்க்கங்களில் பராமரிப்பு வேலைகள் செய்யும் பொருட்டு இன்று புதன்கிழமை காலை 8 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை சுன்னாகம், குப்பிளான், மயிலங்காடு, ஏழாலை, காங்கேசன்துறை உயர்பாதுகாப்பு வலயப்பகுதி ஆகிய இடங்களில் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. வேலைகள் முன்னதாக முடிவுற்றால் குறிப்பிட்ட நேரத்துக்கு முன்னரே மின் விநியோகம் வழங்கப்படலாம் என்றும் மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார். (ஒ)

## மரண அறிவித்தல்கள்

### செல்வன் பாலசுப்பிரமணியம் சிவசங்கர்



தன்னை, களபூமி, காரைநகரைச் சேர்ந்தவரும் 55/7, சபாபதி லேன், தலையாளி, கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட பாலசுப்பிரமணியம் சிவசங்கர் நேற்று (08.02.2011) செவ்வாய்க்கிழமை அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் பாலசுப்பிரமணியம் மற்றும் பரமேஸ்வரியின் அன்பு மகனும் வசந்தி (எழுதுவினைஞர்), மருத்துவர் பவானி (கனடா), நந்தினி (பொறியியலாளர், லண்டன்), காலஞ்சென்ற பாலசரஸ்வதி ஆகியோரின் அன்புச் சகோதரனும் அருணகிரிநாதர், நாகேஸ்வரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் கானிலாவின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.02.2011) புதன்கிழமை காலை 8 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*55,சபாபதி லேன், தலையாளி,*
*கொக்குவில்.*
*021 3001207*

*தகவல்:*
தாய், சகோதரிமார்,
மைத்துனர்மார்.

### திருமதி நாகேஸ்வரி நாகராசா



கோப்பாய் தெற்கு பழைய வீதியைச் சேர்ந்த திருமதி நாகேஸ்வரி நாகராசா நேற்று (08.02.2011) செவ்வாய்க்கிழமை இறைபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பாஞ்சார் பொன்னுத்துரை - அசுபதி தம்பதியரின் அருமைப் புதல்வியும் காலஞ் சென்ற கந்தையா நாகராசாவின் அன்பு மனைவியும் நாவேந் தன் (புனித திரேசா பெண்கள் கல்லூரி, கிளிநொச்சி), நந்தகுமார் (இத்தாலி) ஆகியோரின் அன்புத் தாயும் கௌரிமலரின் (சமுர்த்தி உத்தியோகத்தர்-தெல்லிப்பழை) அன்பு மாமியும் கிருத்திகாவின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.02.2011) புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக கோப்பாய் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பழைய வீதி,*
*கோப்பாய்.*

*தகவல்:*
நா.நாவேந்தன் (மகன்)

### திருமதி இராசா சின்னப்பிள்ளை (சின்னம்மா)



வடமராட்சி, அல்வாய் மேற்கு திக்கத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி இராசா சின்னப்பிள்ளை 07.02.2011 திங்கட்கிழமை இந்தியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா பத்தினிப்பிள்ளை தம்பதியரின் இரண்டாவது மகளும் காலஞ்சென்ற சின்னத்தம்பி இராசாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற செல்லம்மா மற்றும் முத்தம்மா (சுவிற்சர்லாந்து) ஆகியோரின் சகோதரியும் இராஜேந்திரம் (ஜேர்மனி), சுசீலா (இந்தியா), விமலா (சுவிற்சர்லாந்து), இராசகிருஷ்ணா (சுவிற்சர்லாந்து), அஞ்சலா (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தாயாரும் ராகினி (ஜேர்மனி), அருந்தவராஜா (ஜேர்மனி), சிவயோகநாதன் (சுவிற்சர்லாந்து), சுரேலதா (சுவிற்சர்லாந்து), கல்யாணகுமார் (ஜேர்மனி) ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.02.2011) வியாழக்கிழமை நண்பகல் 12 மணியளவில் இந்தியாவில் சென்னை இராமகிருஷ்ண மண்டபத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், அயலவர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அருந்ததியார் வளவு,
அல்வாய் மேற்கு,
அல்வாய்.

*தகவல்:*
இராஜேந்திரம் (இந்தியா)
00918056105692
இராசகிருஷ்ணா
(மகன்மார்).

(C/048)

## மரண அறிவித்தல்கள்

### ஐயாத்துரை மனோன்மணி



யாழ்ப்பாணம், சுண்டுக்குளியைப் பிறப்பிடமாகவும் மல்லாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட ஐயாத்துரை மனோன்மணி நேற்று (08.02.2011) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை - தங்கம் தம்பதியரின் மகளும் காலஞ்சென்றவர்களான தம்பு-விசாலாட்சி தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற ஐயாத்துரையின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான அரசரட்ணம், தர்மரட்ணம் இராஜபூபதி மற்றும் சீவரட்ணம் (பத்திராபதி பிளேற்றிங்), கமலபூபதி, ஜெயபூபதி, இராசபூபதி (ஜேர்மனி), செல்வபூபதி (சுவிஸ்), பாலரட்ணம் (N.S.B.) ஆகியோரின் அன்புத் தாயாரும் மகேஸ்வரி, சாந்தரூபி, மாலினி (ஜேர்மனி), இராதாகிருஷ்ணன், நாகராசா, இரவீந்திரன், கமலேந்திரன், ஜெயரஞ்சினி ஆகியோ ரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்றவர்களான மகேஸ்வரி, பரமேஸ்வரி மற்றும் கனகமணி, சுந்தரலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் பாலரமணன், தர்சிகா, சிவநாதன், சிவர்சன், துளசிதாசன், வைஷ்ணவி, மதிமோகன்- சங்கீதா, சந்திரமோகன்-சுதர்சினி, செல்வமோகன், றொசாந்தமோகன், ஜெயமோகன், ஜெயரூபி - சுபேசன், சுகந்தினி ஜெயப்பிரியா,தர்மிகா, பார்த்தீபன் கோகுலன், கௌசிகன், சபீனா, கபில்ரமணன், மகிஷா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் மிதுலன் அர்ச்சனா ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (9.02.2011) புதன்கிழமை ந.ப.12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மல்லாகம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

கல்லாரை,,மல்லாகம்.
0213211182

*தகவல்:*
குடும்பத்தினர்.

### சுந்தரராசா புஸ்பமலர்



ஊரெழு கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுந்தரராசா புஸ்பமலர் நேற்று (08.02.2011) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் சுந்தரராசாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற நடராசா மற்றும் இராசமலர் அவர்களின் அன்பு மகளும், சின்னத்தம்பி, கோவிந்தி ஆகியோரின் அன்பு மருமகளும், காலஞ்சென்றவர்களான அருந்தவராசா (ரவி), புவனேந்திரராசா (சின்னராசா), குணேந்திரராசா (பாபு) மற்றும் மகேந்திரராசா (வவா), அற்புதமலர், பொன்மலர், அமுதராசா (சுவிஸ்), புஸ்பராசா (மாம்பழம்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், சுந்தரேஸ்வரி, சாந்தி, காஞ்சனா, சியாமளா, விஜயசங்கர், சிறிபாலேஸ்வரன் (சுவிஸ்), ஜெனிற்றா, புஸ்பலதா, ஸ்ரீபதி, ஞானேஸ்வரன், நந்தாபதி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (09.02.2011) அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் முற்பகல் 11 மணிக்கு தகனக்கிரியைக்காக புன்னாலைக் கட்டுவன் விலங்கன் மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஊரெழு கிழக்கு,
ஊரெழு.

*தகவல்:*
குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி



**செல்லம்மா கணபதிப்பிள்ளை**

எமது வித்தியாலயப் பகுதித் தலைவர் திருமதி கௌரி கணேசலிங்கத்தின் அன்பு மாமியார் செல்லம்மா கணபதிப்பிள்ளை அவர்கள் 07.02.2011 அன்று அமரத்துவம் அடைந்த செய்தி கேட்டு அன்னாரின் பிரிவுத் துயரில் பங்கேற்பதுடன் குடும்ப உறவுகளுக்கு எம் அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

யா/நாவாந்துறை றோ.க.வி.
யாழ்ப்பாணம்.

அதிபர், பிரதி அதிபர், ஆசிரியர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்:
12.03.1932

மறைவு:
01.02.2010

**கந்தர் துரையப்பா**

*ஆறாது ஆறாது அழுதாலும் தீராது*
*தீராது தீராது எம் துயரம் மாறாது*
*மாறாது மாறாது உம் நினைவு போகாது*
*போகாது போகாது ஆண்டொன்று சென்றாலும் ஆறாது*
*ஆனாலும் வழியென்ன தெய்வமே!*
*அழியாத நினைவுடன் ஆறாத்துயருடன்*
*உமக்கு அஞ்சலி செலுத்துகின்றோம்.*

211/14A, கோயில் வீதி,
நல்லூர்.

*என்றும் உம் நினைவுகளுடன்:*
குடும்பத்தினர்.

ஓம் விராட் விஸ்வப் பிரமனே நம

## 19 ஆண்டு நினைவினிலே...



மலர்வு: 25.02.1943

உதிர்வு:09.02.1992

**அமரர் முத்துத்தம்பி இரத்தினவேலு**
*(சந்தனம்)*

ஆண்டுகள் பத்தொன்பது ஆகியும்
உங்கள் நினைவுகள் மாறாது

*என்றும் உங்கள் நினைவுகளுடன்:*
*மனைவி, பிள்ளைகள், மருமகன்,*
*மருமக்கள், பேரப்பிள்ளைகள்.*

தேவாலய ஒழுங்கை,
கூளாவடி, ஆனைக்கோட்டை.

பிறேம் நகைமாடம்
யாழ்.வீதி, மானிப்பாய்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு
11
★
04
★
1924



இறப்பு
21
★
01
★
2010

**அமரர் வைத்திலிங்கம் செல்லத்துரை**

வையத்தில் வாழ்வாங்கு வாழ்ந்து
வானுறையும் தெய்வமாகிவிட்ட
எங்களின் அன்பு அப்பாவே!
புன் சிரிப்பின் புகலிடமே- உங்களின்
இன்முகத்தினை இனி எப்போ காண்போம்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பெரியவிளான்,
இளவாலை.

குடும்பத்தினர்.

# 6 விக்கெட்டுக்களால் வென்றது கொக்குவில் இந்துக் கல்லூரி

வலி.வடக்கு, பெப்.9

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கம் யாழ். மாவட்டப் பாடசாலைகளின் 19 வயதுப் பிரிவு கிரிக்கெட் அணிகளுக்கு இடையே நடத்தி வரும் கிரிக்கெட் போட்டி ஆட்டமொன்றில் கொக்குவில் இந்துக் கல்லூரி 06 விக்கெட்டுக்களினால் வெற்றிபெற்றது.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற போட்டி ஆட்டத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரியும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியும் மோதிக் கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணக் கல்லூரி 61.4 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 159 ஓட்டங்களைப் பெற்றது.

பிரசோபன் 38 ஓட்டங்களையும், பெண்டில் கரன் 37 ஓட்டங்களையும், பிரியலக்சன் 34 ஓட்டங்களையும், அபிராஜ் 16 ஓட்டங்களையும் பெற்றதுடன் உதிரிகளாக 09 ஓட்டங்களும் பெறப்பட்டன.

கொக்குவில் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த இராகுலன் 14.4 ஓவர்களில் ஒரு ஓட்ட மற்ற ஓவருடன் 52 ஓட்டங்களுக்கு 06 விக்கெட்டுக்களையும் பங்குஜன், உத்தமன், கார்த்திக் முறையே 09, 10, 18 ஓட்டங்களைக் கொடுத்து தலா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினார்கள்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கொக்குவில் இந்துக் கல்லூரி 61.3 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 188 ஓட்டங்களைப் பெற்றது.

ஜனுதாஸ் 7 நான்கு ஓட்டங்களையும் ஓர் ஆறு ஓட்டங்களையும் சிலோஜன் 35 ஓட்டங்களையும் பங்குஜன் 34 ஓட்டங்களையும் உத்தமன் 21 ஓட்டங்களையும் பெற்றது. உதிரிகளாக 22 ஓட்டங்களும் பெறப்பட்டன.

யாழ்ப்பாணக் கல்லூரியைச் சேர்ந்த ஸ்ரீகுகன் 17 ஓவர்களில் 09 ஓட்டமற்ற ஓவர்களுடன் 24 ஓட்டங்களுக்கு 05 விக்கெட்டுக்களையும், கஜேந்திரன் 10 ஓவர்கள் பந்து வீசி 02 ஓட்டமற்ற ஓவர்களுடன் 32 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுக்களையும், பிரியலக்சன் 18 ஓவர்கள் பந்து வீசி 03 ஓட்டமற்ற ஓவர்களுடன் 54 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுக்களையும் சோபிநாத் சுவான் 05 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

இரண்டாவது இன்னிங்சில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணக் கல்லூரி 51.2 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 137 ஓட்டங்களைப் பெற்றது.

பிரியலக்சன் 32, சீராளன் 30, பிரசோபன் 16 ஓட்டங்களைப் பெற்றதுடன் உதிரிகளாக 20 ஓட்டங்களும் பெறப்பட்டன.

கொக்குவில் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த சாம்பவன் 19 ஓவர்களில் 04 ஓட்டமற்ற ஓவர்களுடன் 45 ஓட்டங்களுக்கு 03 விக்கெட்டுக்களையும் உத்தமன் 06 ஓவர்களில் 03 ஓட்டமற்ற ஓவர்களுடன் 07 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுக்களையும், இராகுலன் 9.2 ஓவர்களில் 03 ஓட்டமற்ற ஓவர்களுடன் 22 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுக்களையும் கார்த்திக் 08 ஓவர்களில் 02 ஓட்டமற்ற ஓவர்களுடன் 22 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுக்களையும், பங்குஜன் 04 ஓவர்கள் பந்து வீசி 02 ஓட்டமற்ற ஓவர்களுடன் 03 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கொக்குவில் இந்துக்கல்லூரி 28.3 ஓவர்களில் 04 விக்கெட்டுக்களை இழந்து 109 ஓட்டங்களைப் பெற்றது.

உத்தமன் 35 ஓட்டங்களையும் இராகுலன் 28 ஓட்டங்களையும் சங்கீத் ஆட்டமிழக்காது 26 ஓட்டங்களையும் பங்குஜன் 10 ஓட்டங்களையும் பெற்றனர்.

யாழ்ப்பாணக் கல்லூரியைச் சேர்ந்த ஸ்ரீகுகன் 07 ஓவர்களில் 02 ஓட்டமற்ற ஓவர்களுடன் 29 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுக்களையும் பெண்டில்கரன், சீராளன் முறையே 16, 15 ஓட்டங்களைக் கொடுத்து தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள். (த-86)

## வரவேற்பு...



புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி இல்ல மெய்வன்மைப் போட்டியின்போது பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட இலங்கை வங்கி காங்கேசன்துறை முகாமையாளர் ரி.செந்தில்நாதன், சிறப்பு விருந்தினராக யாழ். கல்வி வலய கணித பாட ஆசிரிய ஆலோசகர் கே.விஜயகுமார் ஆகியோர் உள்ளிட்ட விருந்தினர்கள் அழைத்து வரப்படுகின்றனர். (த-72)

# இளவாலை இளஞ்சுடர் கபடியில் சம்பியன்

வலி.வடக்கு, பெப்.9

தெல்லிப்பழை பிரதேச செயலாளர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே நடைபெற்ற பெண்களுக்கான கபடிப் போட்டியில் இளவாலை இளஞ்சுடர் விளையாட்டுக் கழகம் சம்பியனாகியது.

மல்லாகம் ஸ்ரீ பாஸ்கரன் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் மல்லாகம் ஆர்.டி.எஸ் விளையாட்டுக் கழகமும் இளவாலை இளஞ்சுடர் விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டன.

ஆட்டம் ஆரம்பமாகி முடிவடையும் வரை இளஞ்சுடர் விளையாட்டுக் கழகத்தின் ஆதிக்கமே மேலோங்கி இருந்தது.

முதல் பாதி ஆட்டத்தில் இளஞ்சுடர் விளையாட்டுக் கழகம் 22.03 புள்ளியைப் பெற்றது.

இரண்டாவது பாதி ஆட்டத்தில் ஆர்.டி.எஸ் விளையாட்டுக் கழகம் எதிர்ப்புக் காட்டிய போதிலும் புள்ளிகளைப் பெற முடியவில்லை.

இளஞ்சுடர் விளையாட்டுக் கழகம் இரண்டாம் சுற்றில் 13:02 புள்ளிகளைப் பெற்ற நிலையில் ஆட்டம் முடிவடைந்தது.

ஆட்ட நிறைவில் இளஞ்சுடர் விளையாட்டுக் கழகம் 35: 05 புள்ளிகள் பெற்ற அடிப்படையில் ஆர்.டி.எஸ் விளையாட்டுக் கழகத்தை வெற்றி பெற்று பிரதேச செயலக சம்பியனாகியது. (த-86)

# உலகக் கோப்பையில் இருந்து பிரவீன்குமார் நீக்கம்; ஸ்ரீசாந் இணைப்பு




10 ஆவது உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டிகள் எதிர்வரும் 19 ஆம் திகதி தொடங்க விருக்கிறது. இதற்காக தோனி தலைமையிலான இந்திய அணி அறிவிக்கப்பட்டது. இதில் பிரவீன்குமார் இடம் பெற்றிருந்தார்.

ஆனால் தற்போது காயம் காரணமாக அணியில் இருந்து பிரவீன்குமார் நீக்கப்பட்டுள்ளார். இந்தியா- தென்னாபிரிக்கா ஆட்டத்தில் பிரவீனின் முழங்கையில் காயம் ஏற்பட்டது.

இதன் காரணமாக அவர் தொடரில் இருந்து வெளியேறி நாடு திரும்பினார். காயம் விரைவில் குணமடைந்துவிடும் என்று எண்ணியதால் அவர் உலகக் கோப்பை அணியில் சேர்க்கப்பட்டார்.

ஆனால் எதிர்பார்த்ததைவிட காயம் பெரிதானதால் அவர் உலகக் கோப்பை அணியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார்.

பிரவீன்குமாருக்குப் பதிலாக ஸ்ரீசாந்த் அணியில் சேர்க்கப்படுள்ளார். (15)

# மெய்வன்மை போட்டிகள்

யாழ்ப்பாணம், பெப். 9

புத்தகலட்டி ஸ்ரீ விஷ்ணு வித்தியாலயத்தின் இல்ல மெய்வன்மைப் போட்டி நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அதிபர் கு.ரவிச்சந்திரன் தலைமையில் பாடசாலை மைதானத்தில் நடைபெறும்.

இதில் பிரதம விருந்தினராக யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா கலந்து கொள்வார். சிறப்பு விருந்தினர்களாக 'சைல்ட் பண்ட்' நிறுவன செயற்றிட்ட அதிகாரி ரி.பசீதராஜ், வலி.கிழக்கு பிரதேச சபை உப அலுவலகப் பொறுப்பதிகாரி எஸ்.அரியராசா ஆகியோர் கலந்துகொள்வர். (த)

***

யாழ்ப்பாணம், பெப்.9

சுழிபுரம் விக்ரோரியாக் கல்லூரியின் இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று பிற்பகல் ஒரு மணியளவில் அதிபர் வி.சிறிகாந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக தெல்லிப்பழைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ச.கைலாசநாதன் கலந்துகொள்வார். சிறப்பு விருந்தினர்களாக சங்கானைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் துரை எங்கரசு, கௌரவ விருந்தினராக விக்ரோரியாக் கல்லூரி ஓய்வுபெற்ற ஆசிரியை திருமதி சுதந்திரதேவி தங்கராஜா ஆகியோர் கலந்து கொள்வர். (த)

***

யாழ்ப்பாணம், பெப்.9

தொல்புரம் விக்னேஸ்வரா வித்தியாலயத்தின் இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை அதிபர் இ.கணேசநாதன் தலைமையில் நடைபெறும்.

இதில் பிரதம விருந்தினராக வலிகாமம் வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் சு.கணேசலிங்கம் கலந்து கொள்வார். சிறப்பு விருந்தினராக யாழ்.பல்கலைக்கழகப் பாதுகாப்பு உத்தியோகத்தர் பா.சயந்தன் கலந்து கொள்வார். (த)

***

யாழ்ப்பாணம், பெப்.9

யாழ். உடுவில் மான்ஸ் மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலையின் பிரதி அதிபர் செல்வி றூபி இராசரத்தினம் தலைமையில் பாடசாலை மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக சுன்னாகம் இலங்கை வங்கி முகாமையாளர் சி.அரசகுமாரும், சிறப்பு விருந்தினர்களாக வலிகாமம் கல்வி வலய உடற்கல்வி ஆசிரிய ஆலோசகர் கே.சிவராஜாவும் சமாதான நீதிவான் லயன்ஸ் செ.மகாதேவன் ஆகியோரும் கலந்து கொள்வார்கள். (த-313)

# ஆஸி. சுழல் வீரர்களுக்கு முரளி பயிற்சி

இலங்கைக் கிரிக்கெட் அணியின் சுழற்பந்து வீச்சு நட்சத்திரமான முத்தையா முரளிதரன் ஆஸ்திரேலியாவின் எதிர்காலக் கிரிக்கெட் வீரர்களுக்கு பயிற்சியளிக்கவுள்ளார்.பந்தை முறையற்ற விதமாக எறிவதாக ஒருகாலத்தில் ஆஸ்திரேலிய ரசிகர்களால் கூச்சலிடப்பட்ட முரளிதரன் பிரிஸ்பேனைத் தளமாகக் கொண்ட கிரிக்கெட் பயிற்சி நிலையத்தில் எதிர்வரும் ஜூன் மாதம் முதல் பல வாரங்கள் ஆஸ்திரேலியாவின் இளம் சுழற்பந்து வீச்சாளர்களுக்கு பயிற்சியளிக்கவுள்ளதாக ஆஸ்திரேலியாவின் டெய்லி டெலிகிராவ் பத்திரிகை தெரிவித்துள்ளது.

டெஸ்ட் மற்றும் ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் அதிக விக்கெட்டுகளை வீழ்த்திய ஜாம்பவானான முத்தையா முரளிதரன் தனது சுழற்பந்து வீச்சு இரகசியங்களை கற்றுக்கொடுப்பதுடன் தனது பந்துவீச்சுப் பயிற்சிநெறியை பதிவுசெய்து வைக்கவும் உள்ளார். இதன் மூலம் ஆஸ்திரேலியாவின் எதிர்காலத் தலைமுறைக் கிரிக்கெட் வீரர்களும் முரளிதரனிடமிருந்து நுட்பங்களைக் கற்றுக்கொள்ள வாய்ப்பு கிடைக்கும்.

1995 ஆம் ஆண்டு டிசெம்பர் இறுதியில் ஆஸ்திரேலியாவில் நடைபெற்ற டெஸ்ட் போட்டியின்போது அந்நாட்டு நடுவர் டெரல் ஹெயாரினால் குற்றம் சுமத்தப்பட்டவர் முரளிதரன். அதன்பின் அவர் போட்டிகளில் பங்குபற்றும்போது ஆஸ்திரேலிய ரசிகர்களின் அவதூறுக் கூச்சல்களை எதிர்நோக்கினார்.



தற்போது ஆஸ்திரேலியாவின் சுழற்பந்துவீச்சுப் பலத்தை காப்பாற்றுவதற்கு முத்தையா முரளிதரனின் உதவியை ஆஸ்திரேலியா நாடியுள்ளமை குறிப்படத்தக்கது.

''இது ஒரு அற்புதமான வாய்ப்பு. உலகின் தலைசிறந்த சுழற்பந்துவீச்சாளர்களில் ஒருவர் முரளிதரன். நாம் மிக மிக அதிஷ்டசாலி கள்'' என ஆஸ்திரேலிய அணித் தேர்வாளர் கிறேக் செப்பல் தெரிவித்துள்ளார்.

# உலகக் கிண்ணம் இம்முறையும் எமக்குத்தான்


## ஆஸியின் பயிற்சியாளர் டிம் நீல்சன்

உலகக் கோப்பை கிரிக்கெட்டில் 5 ஆவது முறையாக சாம்பியன் பட்டம் வெல்லத் தயாராகிவிட்டோம் என ஆஸ்திரேலிய அணியின் பயிற்சியாளர் டிம் நீல்சன் தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்து அணிக்கு எதிராக ஆஷஸ் டெஸ்ட் தொடரை இழந்த போதிலும், அந்த அணிக்கு எதிரான ஒருநாள் தொடரை 6-1 என்ற கணக்கில் ஆஸ்திரேலியா வென்றுள்ளது.

இந்த நிலையில் பேர்த்தில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் பயிற்சியாளர் டிம் கூறியது:

உலகக் கோப்பை போட்டிக்காக ஆஸ்திரேலியா சிறப்பாகத் தயாராகிவிட்டது. தொடர்ந்து 4 ஆவது முறையாகவும், ஒட்டுமொத்தமாக 5 ஆவது முறையாகவும் ஆஸ்திரேலிய அணி சாம்பியன் பட்டம்



வெல்லும். இதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

இங்கிலாந்து அணிக்கு எதிராகப் பெற்ற வெற்றிகள், அணி வீரர்களுக்கு மிகுந்த நம்பிக்கையை அளித்துள்ளது. அதே உத்வேகத்துடன் உலகக் கோப்பையில் அவர்கள் களம் இறங்குவார்கள். துடுப்பாட்டம், பந்து வீச்சு மற்றும் களத்தடுப்பு என எல்லாவிதத்திலும் ஆஸ்திரேலிய அணி சிறப்பாக உள்ளது.

காயமடைந்திருந்த அணித்தலைவர் பொண்டிங் முழுமையாகக் குணமடைந்துள்ளார். இது அணிக்குக் கூடுதல் பலம் என்றார்.

. இதற்கு முன் 1987, 1999, 2003, 2007 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற உலகக் கோப்பைப் போட்டிகளில் ஆஸ்திரேலியா சம்பியன் பட்டம் வென்றுள்ளது. (15)




# மைக்கல் ஹஸி, நதன் ஹரிஸ் ஆஸ்திரேலிய அணியிலிருந்து விலகல்

உலகக்கிண்ண போட்டிகள் ஆரம்பிப்பதற்கு இன்னும் 10 நாள்களே எஞ்சியிருக்கின்றன. இந்த நிலையில் உலகக்கிண்ண கிரிக்கெட்டில் முக்கிய அணியாக கருதப்படுகின்ற ஆஸ்திரேலிய அணி வீரர்களான ஹஸி மற்றும் ஹரிஸ் ஆகியோர் காயம் காரணமாக விலக்கப்பட்டுள்ளனர்.

பதினைந்து பேர் கொண்ட ஆஸ்திரேலிய அணியில் இடம்பெற்றிருந்த இவர்கள் இருவரும் இங்கிலாந்து அணியுடன் இடம்பெற்ற ஒரு நாள் போட்டித் தொடரில் காயமடைந்தனர். இதன் காரணமாக உலகக் கிண்ணப் போட்டிகளில் பங்கேற்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கின்றது.

இவர்கள் இருவருக்கும் பதிலாக வேப்குசன், கிரேச்சியா ஆகியோர் அணியில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.

ஆஸ்திரேலிய அணி தொடர்ச்சியாக மூன்று தடவைகள் உலகக் கிண்ணத்தை கைப்பற்றிய ஒரே ஒரு அணியாக திகழ்கின்றது. இந்தத் தடவை உலகக்கிண்ணத்தை வெல்ல முடியாது என்று சொல்லப்பட்டபோதும் இங்கிலாந்து அணியுடனான ஒரு நாள் போட்டித்தொடரை 6-1 என்ற கணக்கில் அபாரமாக வென்று தனது திறமையை மீண்டும் நிரூபித்தது.

இந்த நிலையில் அந்த அணியின் முன்னணி வீரர்கள் இவ்வாறு காயங்களின் காரணமாக வெளியேற்றப்படுவது அந்த அணியின் வெற்றி வாய்ப்புகளை நிச்சயமாக பாதிக்கும் என்றே கூறப்படுகின்றது. (15)

# கிண்ணம் வெல்வதற்கு தயாராக இருக்கின்றோம்



இந்தத் தடவை உலகக்கிண்ணத்துக்காக அறிவிக்கப்பட்டுள்ள தென்னாபிரிக்க அணி மிகச்சிறந்த அணி. இந்தத் தடவை கிண்ணத்தை முதன்முறையாக வெல்வோம் என தென்னாபிரிக்க அணியின் தலைவர் கிரேம்ஸ்மித் தெரிவித்திருக்கிறார்.

ஐ.ஓ.எல் என்ற இணையத் தளத்துக்கு அளித்துள்ள பேட்டி ஒன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்தமை வருமாறு:

நாம் 2007 ஆம் ஆண்டு உலகக்கிண்ணப் போட்டிகளில் அரையிறுதிப் போட்டிவரை முன்னேறியிருந்தோம். இம்முறை மிகச்சிறப்பான அணி அமைந்திருக்கின்றது. அவற்றைவிட நாம் 'பவர் பிளேயினை' சரியான தருணங்களில் தெரிவு செய்து போட்டிகளில் உரியமுறையில் விளையாடுவோம்.

எமது துடுப்பாட்டம், பந்து வீச்சு என்பன சிறப்பான முறையில் அமைந்திருக்கின்றது. இந்திய அணியுடனான தொடரில் நாம் சிறப்பாக செயற்பட்டிருந்தோம். அதே போன்று உலகக் கிண்ணத் தொடரிலும் சிறப்பாகசெயற்படுவோம்எனவும்அவர் மேலும் தெரிவித்துள்ளார். (15)



10 நாள்களே

**உதயன் உலகக்கிண்ண கொண்டாட்டம் உங்களுடன்**

உலகக்கிண்ணப் போட்டிகள்.
எதிர்பார்க்கின்றோம் உங்கள் எழுத்துக்களை.
பார்த்த அனுபவங்கள். ரசித்த போட்டிகள்.
எழுந்த எண்ணங்கள். எழுதுங்கள்....
எழுதுங்கள்..... எழுதிக் குவியுங்கள்.
சிறந்ததற்கு உண்டு பரிசு .

"உலகக் கிண்ண வாசகர் கணை"
தபால் உறையின் இடது மேல் மூலைக்குறிப்பு.
உதயன்,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

# சச்சினை மட்டும் புகழ்வது சரியல்ல

இந்த உலகக் கிண்ண போட்டியில் இந்தியா கோப்பையை வெல்வதற்கு மிகவும் பிரகாசமான வாய்ப்புக்கள் உள்ளன. அணியில் உள்ள அனைத்து வீரர்களுமே நல்ல நிலையில் இருக்கிறார்கள்.

அணியும் சிறப்பாக தேர்வு செய்யப்பட்டு உள்ளது. அதிலும் உள்ளூரில் ஆடுவதால் நமக்கு கூடுதல் பலம் இருக்கும். சில ஆண்டுகளாகவே இந்திய அணி நன்றாக ஆடி வருகின்றது.

சச்சின் டெண்டுல்கர் 20 ஆண்டுகளுக்கும் மேலாக விளையாடி வருகிறார். இந்த உலகக் கிண்ண போட்டியிலும் இடம்பெற்று இருப்பது அவருக்கு பெருமை அளிக்க கூடியது. அவர் உதவியால் நிச்சயம் வெற்றி கிடைக்கும் என்று நம்பலாம். ஆனால் வீரர்கள் சச்சினை அதிகம் புகழக் கூடாது என இந்திய அணியின் முன்னாள் கிரிக்கெட் வீரரான சேத்தன் சவுகான் தெரிவித்துள்ளார்.

சச்சினுக்காக உலக கோப்பையை வெல்வோம் என்று வீரர்கள் சொல்கிறார்கள். இப்படி புகழ்ந்து கொண்டிருந்தால் அவருக்கு மனஅழுத்தம் ஏற்பட்டு நெருக்கடி சூழ்நிலை உருவாகிவிடும். இதனால் அவருடைய ஆட்டம் பாதித்து விடக்கூடாது.

வீரர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து போராடி வெற்றி பெற முயற்சிக்க வேண்டும். யூசுப்பதான் அணியில் மிகச்சிறந்த வீரராக திகழ்கிறார். ஆட்டத்தின் போக்கையே மாற்றக்கூடிய சக்தி அவரிடம் உள்ளது-இவ்வாறு அவர் கூறினார். (15)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது அன்புக்கும்
மதிப்புக்குமுரிய எங்கள்
கோட்டக்கல்விப்
பணிப்பாளர்

## உயர்திரு சி.கந்தசாமி

அவர்கள்
12.10.2010 தொடக்கம்
கல்வி நிர்வாக சேவை III ல்
அதிகாரியாகப் பதவி உயர்வு
பெற்றதையிட்டு மனதார
வாழ்த்துகின்றோம்.

சண்டிலிப்பாய் கல்விக்கோட்டம்,
மானிப்பாய்.

*அதிபர்கள்,*
*கோட்ட அலுவலர்கள்*

# ஆங்கிலம்

Saamson English இனது ஆங்கிலப் பயிற்சிநெறியானது சிறியோர்முதல் பெரியவர்கள் வரை எவருமே இலகுவாகவும், வேகமாகவும் பழகிக்கொள்வதற்கு ஏற்றவகையில் உருவாக்கப்பட்டதாகும்.

தற்போது மிகப் பிரபலமாக பேசப்பட்டுவரும் **Listening, Speaking** முறையில், மாணவர்களை செயல்முறை ரீதியாக வசனம் உருவாக்கவும், ஏனையவர் களுடன் பேசிப் பழகுவதற்கும் நாம் வழிபடுத்துவதால் 3மாதத்திலேயே அவர்களால் தமிழைப்போல இயல்பாக ஆங்கிலத்திலும் பேச முடிகிறது.

எமது இப் பயிற்சியில் இணையவிரும்பும் இளைஞர், யுவதிகள், மாணவர்கள், பல்கலை மாணவர்கள் தொழில் புரிவோர்,தாதியர்கள், ஆசிரியர்கள் 12.02.2011 இற்கு முன் பதிவுகளை மேற்கொள்ள முடியும்.

**இறுதிச் சந்தர்ப்பம்:- 12.02.2011 இற்கு முன் இணைவோருக்கு 3மாத பயிற்சிக் கட்டணம் 3500.00 பின்னர் 6000.00**

**சனி, ஞாயிறு பிரிவுகள்: காலை: 8-10, 10-12 மாலை 1-3, 3-5.**

**SAAMSON ENGLISH** 279, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம். **0776214567**

# கண்ணீர் அஞ்சலி



அமரர்
**கலாபூசணம் கதிர்த்தம்பி பாலசுந்தரம்**

எமது பாடசாலை சங்கீத ஆசிரியை தயாநிதி சுதாகரன் அவர்களின் பாசமிகு தந்தை 21.01.2011 அன்று காலமானார். அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யா/கொக்குவில் ஸ்ரீ ஞானபண்டித
வித்தியாசாலை ஆசிரியர் நலன்புரி சங்கம்

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

திருமதி
## முருகேசு நாகேஸ்வரி



தோற்றம்: 14.04.1948
மறைவு: 01.02.2009

*திதி: 09.02.2011*

*மண்ணில் நல்ல வண்ணம் வாழ்ந்து*
*மனமொத்த இல்லறமே நல்லறமென*
*இலக்கணம் வகுத்து*
*பெற்று வளர்த்து பிரியமுடன்*
*அமுதூட்டிய தெய்வமே..!*
*பேதலித்து வாழ்கின்றோம்*
*உன்னை பிரிந்ததனால்*
*இவ் இரண்டாம் ஆண்டு திதி நாளில்*
*ஆல விருட்சமாய் அகிலமெல்லாம்*
*பரந்து விரிந்து வாழும் நாம்- சிரம்*
*தாழ்த்தி அஞ்சலிக்கின்றோம்...*

உங்கள் ஆத்மா
சாந்தி பெற
பிரார்த்திக்கும்:
**குடும்பத்தினர்.**

*வேதனைப் பிள்ளையார்*
*கோயிலடி,*
*கல்வயல், சாவகச்சேரி.*

# சமய சந்நிதிகளில்

மாதகல் செட்டிபாதி அருள்மிகு ஞான வைரவர் ஆலய மகாகும்பாபிஷேகம் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 6மணி முதல் 6.50 மணிவரை நடைபெறவுள்ளது.

இக்கும்பாபிஷேக கிரியாகால நிகழ்வுகளாக இன்று புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பூர்வாங்கக் கிரியைகளும், நாளை வியாழக்கிழமை காலை 8 மணிக்கு எண்ணெய்க் காப்புச்சாத்துதல் வைபவமும் இடம்பெறும். நாளைமறு தினம் வெள்ளிக்கிழமை வைரவர் பெருமானுக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் மகா கும்பாபிஷேகம் நடைபெற்று தொடர்ந்து 11 தினங்கள் மண்டலாபிஷேகமும் இடம் பெறவுள்ளது. (ற-313)

* * *

சுதுமலை அருள்மிகு ஸ்ரீ முருக மூர்த்தி ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் இன்று புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத்தினங்கள் இடம் பெறும்.

இம்மாதம் 17 ஆம் திகதி வியாழக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் வெள்ளிக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெற்று 19 ஆம் திகதி சனிக்கிழமை திரிக்கல்யாணத் துடன் உற்சவம் நிறைவுபெறும். (ற-115)

* * *

உரும்பிராய் ஓடையம்பதி கற்பக விநாயகர் ஆலயத்தின் பாலஸ்தாபன கும்பாபிஷேகம் இன்று புதன்கிழமை காலை 6.30 மணி முதல் 7.30 மணிவரையுள்ள சுபவேளையில் நடைபெறவுள்ளது.(ற)

## வேலைவாய்ப்பு

விற்பனை அபிவிருத்தி உதவியாளர்
(இருபாலாரும்)
0711472276

**தரம் 1, 2, 3, 4**

## வெற்றிப் பயணம்

**வெளிவந்துவிட்டது**

**சமயம் உட்பட 5 பாடங்கள்**

விலை ரூ 20/= மட்டுமே

பாடசாலைகளுக்கு 30% கழிவு
0711472276
ஸ்ரீலங்காவின் NO. 1 வெளியீடு

## தவறிவிட்டது

புளியங்கூடல் வடக்கு, ஊர்காவற்றுறை எனும் முகவரியுடைய சோமசுந்தரம் நிரஞ்சன் என்பவருடைய 791880246 V எனும் இலக்கமுடைய தே.அ.அட்டையும் மோட்டார் சைக்கிள் சிட்டையும் நேற்றுமுன்தினம் 07.02.2011 அன்று யாழ். நகரப் பகுதியிலிருந்து ஊர்காவற்றுறை செல்லும் வழியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்வரும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.
0772936549, 0213206719

## முக்கிய அறிவித்தல்

**வடமராட்சி வடக்கு
கடற்றொழிலாளர் கூட்டுறவுச்
சங்கங்களின் சமாசத்தில்
கணக்காய்வு இடம்
பெறுவதால் சாமசத்துடன்
கொடுக்கல் வாங்கல்களில்
ஈடுபட்டோர் இன்றிலிருந்து
14 நாள்களுக்குள் தொடர்பு
கொண்டு
உறுதிப்படுத்துமாறு
வேண்டுகின்றோம்.**

**தலைவர்**
**வடமராட்சி க. கூ. ச. சமாசம்**

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



பொதுச்சேவை உள்நாட்டு அலுவல்கள் அமைச்சினால் நடத்தப்பட்ட கிராம அலுவலர்களுக்கான முகாமைத்துவப் போட்டியில் யாழ்.மாவட்டத்தில் முதலாமிடம் பெற்ற J/196 சுன்னாகம் நகர் தெற்கு கிராம அலுவலர்

**உயர்திரு இருதயப்பிரகாசம் இயூஜின் மசனட்**

அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதோடு அவர் மேலும் சிறப்புகள் பெற்று உயர இறையாசியை வேண்டி நிற்கிறோம்.

**சுன்னாகம் தெற்கு முத்தமிழ் மன்றம்,**
**சுன்னாகம் தெற்கு விவசாயிகள் சம்மேளனம்.**

# STUDENT VISA

குறுகிய காலத்தில் யாழ் மாணவர்களை UK, CANADA, U.S.A, NEW ZEALAND கல்வி கற்க அனுப்பி நன்மதிப்பைப் பெற்ற FUTURE EDUCATION மீண்டும் ஒரு சந்தர்ப்பத்தை யாழ்.மாணவ, மாணவிகளுக்கு வழங்குகிறது. MARCH, APRIL அனுமதி O/L மட்டும் போதுமானது I.E.L.T.S. தேவையில்லை. ஒரே நாளில் College Admission ஒரு மாதத்தில் பயணம். சிங்கப்பூர் மற்றும் மலேசியா வேலை வாய்ப்பு (WORK PERMIT) உடனடி பயணம்.

**தொடர்பு: FUTURE EDUCATION & CONSULTANT,**
**NO-8 CHANDRALEKA MAWATHA, BORELLA,-**
**COLOMBO - 08.**
**T.P. 0117 631505, HOT LINE - 072336 9058.**

# ஆளணி தேவை

**அரியாலையில் ஆரம்பிக்கவிருக்கும் சிறுவர் இல்லத்துக்கு பின்வருவோர் தேவை**

**தகுதியான ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்**

1. அலுவலக உத்தியோகத்தர்.
2. சமையற்காரர்.
3. மேற்பார்வையாளர் (ஆண்).
4. சமையல் உதவியாளர்கள்.
5. தாதி (ஆண்).

சுயவிவரக்கோவை மற்றும் தகுதிச் சான்றிதழுடன் நேரில்வரவும்.

திகதி: 10.02.2011 வியாழக்கிழமை
நேரம்: காலை 9 - 12 வரை
முகவரி: 272, A.V. றோட், அரியாலை.

**தொடர்புகளுக்கு: நிர்வாகி**
**தொ.பே.: 0772571253**

# இறுதிக்கிரியைகள் பற்றிய அறிவித்தல்



## சடையர் நாகமணி

(ஓய்வுபெற்ற புகையிரதத் திணைக்கள ஊழியர்)

04.02.2011 அன்று கனடாவில் இறைபதம் எய்திய சடையர் நாகமணி அவர்களின் இறுதிக் கிரியைகள் கனடாவில், கனடா நேரப்படி 09.02.2011 புதன் கிழமை முற்பகல் 11.00 மணியிலிருந்து பி.ப.2 மணிவரை இடம்பெறும். (இலங்கை நேரம் முன்னிரவு 10.30 இல் இருந்து பின்னிரவு 1.30வரை).

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
ஐயாத்துரை வரதராஜா (பேரமகன்),
சிவநாமம் சிவதாசன்
(சமாதான நீதிவான்- மருமகன்)

இல.58,கனகரத்தினம் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.



# புதுக்கடைத் திறப்பு விழா

அன்புடையீர்!..

நிகழும் மங்களகரமான விகிர்தி வருடம் தைமாதம் 27ஆம் நாள் நாளை (10.02.2011) வியாழக்கிழமை சித்த யோகமும் பரணி நட்சத்திரமும் கூடிய காலை 8.00- 9.30 மணி வரையுள்ள மீன லக்கின சுபமுகூர்த்த வேளையில் எம்மால் புதிதாக அமைக்கப்பெற்ற

## தேவி கருமாரி நகைமாடம்

என்னும் தங்க வியாபர ஸ்தாபனத்தை இல.66, கஸ்தூரியார் வீதியில் இயங்கிய தேவி கருமாரி நகைமாடமும் இல.205/6, கஸ்தூரியார் வீதியில் இயங்கிய ஸ்ரீகருமாரி நகைமாடமும் இல.171, 173 மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம் என்னும் விலாசத்தில் மாற்றப்பட்டு புதுப் பொலிவுடன் ஆரம்பிக்க இறைவன் திருவருள் கூடியுள்ளது என்பதை அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் அறியத்தருவதோடு இவ்விழாவில் கலந்து சிறப்பிக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.**

உரிமையாளர்,
ச.கனகசபாபதி (சபா)

**இல.171, 173, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். T.P: 0212229508, 0774373786.**

## ஊடகங்களைத்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூறி அவசரகாலச் சட்டத்தை அரசு நீடித்தது. ஆனால், தற்போது போலியான காரணங்களைச் சுட்டிக்காட்டி அவசரகாலச் சட்டத்தை நீடிக்கிறது.

அரசு, கடந்த காலங்களில் ஜனநாயகத்தை மீறும் நட வடிக்கைகள், ஊழல்கள் ஆகியவற்றின் பின்னால் உள்ள அரசியல்வாதிகளைப் பாதுகாக்க முயற்சிகளை மேற்கொண்டது.

அவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடும் அரசியல்வாதிகளை சமூகத்துக்கு அம்பலப்படுத்தும் ஊடகங்களை முடக்க ஊடகங்கள் மீதான தாக்குதல்கள், ஊடகவியலாளர்கள் கடத்தல் ஆகிய நடவடிக்கைகளில் அரசு ஈடுபட்டுள்ளது.

7 கோடி ரூபா மோசடி, வறக்காபொல சம்பவம், பியகம கொலை ஆகியவற்றை இந்நாட்டுப் பொலிஸார் கண்டுபிடித்து சம்பந்தப்பட்டவர்களைக் கைதுசெய்தார்கள். குற்றவாளிகளை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினார்கள். ஆனால், சியத்த, சிரச, லங்கா ஈ நியூஸ் போன்ற ஊடக நிறுவனங்களையும், ஊடகவியலாளர்களையும் தாக்கியவர்களையோ, கடத்தியவர்களையோ இந்நாட்டுப் பொலிஸாரால் கைது செய்ய முடியாதது ஏன்?

அரசே இதற்கும் பின்னால் உள்ளது என்று இவற்றிலிருந்து தெரிகிறது. அப்படி இல்லாவிட்டால், குற்றவாளிகளைக் கண்டுபிடித்து சட்டத்தின்முன் நிறுத்தும் கடப்பாடு அரசுக்கு உள்ளது.

அரசு, ஊடகங்களுக்குப் பெரும் அச்சுறுத்தலாக மாறி வருகிறது. எமது நாட்டு சட்ட மா அதிபரின் நடவடிக்கை எவ்வாறு என்றால், சமுர்த்தி தொடர்பான ஊழலில் சிக்கியிருந்த ஒருவரை அவர் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை நிரூபணமாக்கும் ஆதாரங்கள் போதாமையால் விடுதலை செய்ய வேண்டும் என்று நீதிமன்றில் சட்ட மா அதிபர் கூறி யுள்ளார். ஆர்ப்பாட்டம் நடத்துவதற்கு மக்களுக்கு உரிமை உள்ளது. ஆனால், அமைதியான ஆர்ப்பாட்டங்களை மேற்கொள்ளும் போது அதன் மீது தாக்குதல் மேற்கொள்ளப்படுகிறது. இதுவா ஜனநாயகம்? என்று தெரிவிக்கப்பட்டது.

## 35 வீதமான.... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வீதம் அழிவடைந்துள்ளதாக விவசாய அமைச்சு நேற்றுத் தெரிவித்தது. இதனால் அரிசி விலை அதிகரிக்க வாய்ப்புக்கள் உண்டு என்றும் அமைச்சு தெரிவித்தது.

இந்த ஆண்டு நாடு முழுவதும் 7 லட்சத்து 39 ஆயிரம் ஹெக்டேயர் நிலப்பரப்பில் நெல் செய்கை பண்ணப்பட்டிருந்தது. இதிலிருந்து 2.7 மில்லியன் மெற்றிக் தொன் விளைச்சல் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் மழை மற்றும் வெள்ளத்தால் சுமார் 3 லட்சம் ஹெக்டேயர் பரப்பில் நெற்பயிர்கள் அழிந்துள்ளன. இதனால் 1.75 மில்லியன் மெற்றிக் தொன் அறுவடையே கிடைக்கும் என்று அதிகாரிகள் கூறுகின்றனர்.

இந்த நிலைமைச் சமாளிக்க வேகமாக வளரக்கூடிய இன விதை நெல்லை வழங்குமாறு உலக உணவுத் திட்டத்திடம் அரசு கோரிக்கை விடுத்துள்ளது. ''மார்ச் மாத இறுதியில் மீள் விதைப்புக்கு நடவடிக்கை எடுப்பதற்கு முயற்சிக்கிறோம். ஆனால் பெரும்பாலான வயல் நிலங்களும் பாதிக்கப்பட்டுள்ளதுதான் சிக்கலாக இருக்கின்றது'' - என்றார். (உ)

## இலங்கைக்கு......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

11 ஆயிரத்து 600 பேருக்கு புனர்வாழ்வு அளிக்கப்பட்டுள்ளது. ஆறாயிரம் பேர் விடுதலை செய்யப்பட்டிருக்கின்றனர். இவ்வாறு விடுதலை செய்யப்பட்டவர்களுள் ஒரு பிரிவினர் சட்டவிரோதச் செயல்களில் ஈடுபட்டுள்ளனர் என்று தகவல்கள் கிடைத்துள்ளன. இது தொடர்பாக அரசு தீவிரமாகப் பரிசீலனை செய்து வருகின்றது.

அனைத்துலக மட்டத்தில் புலிகளுக்கு பணம் வழங்கியும் ஆயுதங்களை வாங்குவதற்கும் உதவி செய்துவந்த புலம்பெயர் தமிழர்கள் தொடர்பான விசாரணைகளும் துரிதப்படுத்தப்பட்டுள்ளன.

சுவிட்ஸர்லாந்தில் புலிகளுக்கு ஆயுதம் வாங்க நிதி உதவி செய்த பத்துப் பேரை சுவிஸ் பொலிஸார் கைது செய்துள்ளனர். இதனைத் தொடர்ந்து சுவிஸ் அரசு புலி ஆதரவாளர்களுக்கு எதிரான விசாரணைக ளைத் துரிதப்படுத்தி உள்ளது.

கனடா அரசு புலிகள் இயக்கத்துக்குச் சொந்தமான வங்கிக் கணக்குகளையும், சொத்துகளையும் முடக்கி வைத்துள்ளது.

இப்படியான நிலையிலும் நாம் வடக்கு, கிழக்கு உட்பட இங்கு வாழும் தமிழர்களின் பிரச்சினைகளுக்கு நிரந்தர அரசியல் தீர்வு காண்பதற்கு ஈடுபாட்டுடன் முயற்சித்து வருகின்றோம்.

ஆனால், அடுத்த மாதம் ஜெனிவாவில் நடைபெறவுள்ள மனித உரிமைகள் மாநாட்டில் அரசுக்கு எதிராகப் போர்க்குற்ற விசாரணை நடத்தப்படவேண்டும் என புலம்பெயர் தமிழர்களும் புலி ஆதரவாளர்களும் மீண்டும் கோஷங்களை ஆரம்பித்துவிட்டனர்.

யுத்தம் முடிந்துவிட்ட நிலையிலும் பல பொலிஸ் பிரிவுகளில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன. சில குழுக்கள் ஆயுதங்களுடன் சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளன.

நாட்டில் சட்டத்தையும், ஒழுங்கையும் நிலைநாட்ட வேண்டியது அரசின் கடமை. துரதிர்ஷ்டவசமாக காலநிலை மாற்றத்தினால் வெள்ளம், மண்சரிவு ஆகியவற்றினால் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இது எமது நாட்டில் மட்டுமல்ல, உலக நாடுகள் பலவற்றிலும் இப்படியான இடர்கள் ஏற்பட்டுள்ளன.

எனினும், நாம் பாதிப்பட்டவர்களுக்கு அவசியமான உதவிகளை செய்துள்ளோம். எதிர்க்கட்சியினர் அரசை விமர்சிப்பதை கைவிட்டு, நாட்டு மக்கள் மத்தியில் உணர்வுகளைத் தூண்டிவிடாமல் அரசுக்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என்றும் பிரதமர் கேட்டுக்கொண்டார். (உ-சி)

## போர்க்.... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புதிய உள்நாட்டு மோதல்கள் உருவெடுக்கலாம்.

இலங்கை ஜனாதிபதியை எவ்வாறு நல்லிணக்கப் பாதைக்குக் கொண்டு வருவது என்பது பற்றிய தெளிவான அறிவு என்னிடம் இல்லை. ஆனால் அதற்கான முயற்சிகள் வரவேற் கத்தக்கது. அதேசமயத்தில் போர்க்குற்றங்களை முக்கியத்து வப்படுத்திப் பார்க்க வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

ரெரெசிற்றா ஸ்காபர் அம்மையார் தந்திரோபாய மற்றும் அனைத்துலக கற்கைகளுக்கான நிலையத்தின் தெற்காசிய நிகழ்ச்சித் திட்டப் பணிப்பாளராகத் தற்போது இருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (உ)

## மாவை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கொள்ளப்பட்டுள்ளன.இந்த விடயத்தைச் சுட்டிக்காட்டி மாவை சேனாதிராசா ஜனாதிபதிக்கு அவசர கடிதம் ஒன்றை அனுப்பி வைத்தார். உடனடியாகத் தலையிட்டு இத்தகைய செயற்பாடுகளை ஜனாதிபதி நிறுத்த வேண்டும் என்று அவர் அதில் கேட்டிருந்தார்.

ஆனால் ''இக்குற்றசாட்டுகள் அடிப்படையற்றவை'' என்று இராணுவப் பேச்சாளர் மேஜர் ஜெனரல் உபய மெதவல நேற்றுத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்தாவது:-

பொலிஸ் கட்டளைச் சட்டத்தின்படி நாட்டின் ஒவ்வொரு குடிமகனும் பதிவுசெய்து கொள்வது அவசியமாகும். யாழ்ப்பாணத்தில் மாத்திரமல்ல, கம்பஹா போன்ற இடங்களிலும் இத்தகைய நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. விரைவில் மின்னியல் முறையிலான அடையாளங்காணல் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட வுள்ளன.

இராணுவம் எதற்காக யாழ். நகரில் பொது இடங்களில் குடும்பப் படங்களைப் பிடிக்கப் பணம் வசூலிக்க வேண்டும்? இத்தகைய குற்றச்சாட்டுகள் அடிப்படையற்றவை. நாம் இவற்றை முற்றாக நிராகரிக்கிறோம் என மேஜர் ஜெனரல் உபய மெதவல கூறினார்.

''யாழ்ப்பாணத்தில் சட்டம் ஒழுங்குகளை பேணும் நடவடிக்கைகளை இராணுவத்தின் உதவியுடன் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். எனினும் இராணுவம் வீதி அபிவிருத்தி போன்ற பணிகளிலும் ஈடுபட்டு வருகின்றது'' - என்றார் அவர். (உ)

### உங்களுக்கு பணம் அவசர தேவைதானா?

இதோ உங்களுடைய அவசியத்துக்கு ஒரு மணி நேரத்தில்....

உங்களுடைய கார், வான், லொறி ஆகிய வாகனங்களுக்கு ஒரு மணித்தியாலத்துக்குள் லீஸிங்!

எங்களுக்கு அவசியமானது வாகனப்புத்தகம் மாத்திரமே..! (வேறெதுவும் தேவையில்லை)

பதிவுசெய்யப்படாத வாகனங்களுக்கான குறைந்த மாதாந்தக் கட்டணம் எங்களிடம்

தொடர்புகளுக்கு:
களுதோட்ட பினான்ஸ் சேர்விஸ்
(பிறைவேற்) லிமிட்டெட்
யாழ்ப்பாணம்.

இல.88, ஆஸ்பத்திரி வீதி,
மார்ட்டீன் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 4922455,
0777696991.

### இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
உ தயாகுமார்
(கண்ணன்)

தோற்றம் 1974.12.23 மறைவு 2009.02.09



ஆருயிரே என் அண்ணா - உன்
அன்பு முகம் பார்த்து
இரண்டு வருடங்கள் ஆனதய்யா - நீ
வருவாய் என்று நாம் வழிபார்த்தோம்
உன்னை கொடிய காலன்
பிரித்துவிட்டான்- அண்ணா
உன் முகம் காணாமற் தவிக்கிறோம்.

நாவலடி,
கோப்பாய் மத்தி,
கோப்பாய்.

தங்கை, தம்பி.

### வாடகைக்கு

2 அறைகள் கொண்ட அனெக்ஸ் அட்டாச் பாத்ரூம், கரன்ட், குடிதண்ணீர் வசதிகளுடன் நீர்கொழும்பில் வாடகைக்கு மாதம் 6,000/- 2 வருட அட்வான்ஸ் எதிர்பார்க்கப்படும். 0773427843

### தேவை

வாடிக்கையாளர் சேவை உத்தியோகத்தர்கள் தேவை (சந்தைப்படுத்தல்) 26 வயதுக்குட்பட்டவரும், உற்சகமாக வேலை செய்யக் கூடியவராகவும் இருத்தல் வேண்டும்.

**உடனடியாக தகைமைச் சான்றிதழ்களுடன் நேரில் வரவும்.**

09.02. பி.ப. 2 - மாலை 5 வரை
10.02 மு.ப. 9 - மாலை 5 வரை

131, ராசாவின் தோட்டம் பாதை,
நல்லூர், யாழ்ப்பாணம்,
தொ.பே.: 021567220

### ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் தெல்லிப்பழை



எமது தேவஸ்தானத்தால் நிர்வகிக்கப்படும் துர்க்காபுரம் மகளிர் இல்லத்தில் பணியாற்றுவதற்கு பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விடுதி மேற்பார்வையாளர் (பெண்)
நாற்பது வயதுக்கு மேற்பட்டவராகவும் கல்வி சமயப்பண்பாடு ஆளுமை மிக்கவராகவும் உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.
2. சமையலாளர்
அனுபவமுள்ள இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
3. பாதுகாப்புக்கான பகல் இரவு காவலாளிகள் 35 வயதுக்கு மேற்பட்ட தகைமையுயோர் விண்ணப்பிக்கலாம்.

கல்வித் தகைமை அனுபவம் நற்சான்றிதழ் கடிதம் அடையாள அட்டைப் பிரதி என்பவற்றை இணைத்து விண்ணப்பிக்கவும். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்
விண்ணப்ப முடிவு திகதி - 18.02.2011

ஆறு. திருமுருகன்,
தலைவர்

நிர்வாக சபை,
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.

### இராமநாதபுரம் அருள்மிகு மாவடி ஸ்ரீ மாரி அம்பாள் ஆலயப் பொதுக்கூட்டம்

*10.02.2011*

மேற்படி ஆலயப் பொதுக்கூட்டம் 10.02.2011 வியாழக்கிழமை பி.ப. 3 மணிக்கு ஆலய முன்றிலில் தலைவர் **வே.செல்லத்துரை** அவர்களின் தலைமையில் நடைபெற உள்ளது. அன்றையதினம் புதிய பரிபாலனசபைத் தெரிவும் நடைபெற இருப்பதால் சகல விழா உபயகாரர்களையும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

கிளிநொச்சி. ஆலய பரிபாலனசபை.

### மரண அறிவித்தல்

*திருமதி ஆனந்தராசா தனபாக்கியம்*



அந்தணத்திடல், கப்பூதுவைப் பிறப்பிடமாகவும் மணியகாரன் தோட்டம், கரணவாய் தெற்கு, கரவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஆனந்தராசா தனபாக்கியம் 08.02.2011 செவ்வாய்க்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பாலு - அன்னம்மா தம்பதியரின் ஏகபுத்திரியும் காலஞ்சென்ற ஆனந்தராசாவின் அன்பு மனைவியும் தவப்பிரகாசம் (சுவிஸ்), ஜெயக்குமார் (கனடா), ஜெயராணி (கனடா), நந்தகுமார் (சுவிஸ்), கிருபா, கிருபாகரன் ஆகியோரின் அன்புத் தாயும் குமுதா (சுவிஸ்), பாமிலா (கனடா),ஸ்ரீமோகன் (கனடா), மைதிலி (சுவிஸ்), மகேந்திரன் ( நிதுஷா ஸ்ரூடியோ, நெல்லியடி) ஆகியோரின் மாமியும் தனு, கீர்த்தி, செந்தூரி, சாம்பவி, சுஜித், நிலாந்தினி, தர்மிகா, தரிக்கா, மதுரா, விநோத், விநித் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(09.02.2011) புதன்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவரசம்திட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவம்.

தகவல்:
குடும்பத்தினர்.

# கிழக்கில் மழை தொடர்ந்து பொழிகிறது மற்றைய பகுதிகளில் ஓரளவு ஓய்ந்தது

கொழும்பு, பெப்.09

கிழக்கு மாகாணத்தில் தொடர்ச்சியாக அடைமழை பெய்து வருகின்றது என்றும் வடமத்திய மாகாணத்தில் நேற்றுமுதல் மழை ஓரளவு ஓய்ந்துள்ளது என்றும் எமது செய்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த 10நாள்களுக்கு மேலாக 18 மாவட்டங்களில் தொடர்ச்சியாகப் பெய்து வரும் அடைமழை, வெள்ளம், மண்சரிவு காரணமாக இதுவரை 14 பேர் பலியாகியுள்ளனர். 8பேர் காயமடைந்துள்ளனர். மூன்று பேர் காணாமல் போயுள்ளனர்.

-இவ்வாறு அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் பிரதிப் பணிப்பாளர் பிரதிப் கொடிப்பிலி தெரிவித்தார்.

அகோர மழையால் 3 லட்சத்து 41 ஆயிரத்து 63குடும்பங்களைச் சேர்ந்த 11லட்சத்து 32ஆயிரத்து 654பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும்-

703 தற்காலிக முகாம்களில் 51 ஆயிரத்து 544குடும்பங்களைச் சேர்ந்த ஒருலட்சத்து 93ஆயிரத்து 742 பேர் தங்கவைக்கப்பட்டுள்ளனர் என்றும் அவர் கூறினார்.

அத்துடன் வெள்ளம், மண்சரிவு காரணமாக நேற்றுவரை 2ஆயிரத்து 492 வீடுகள் முற்றாகச் சேதமடைந்துள்ளன. 14ஆயிரத்து 343 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன என்று மத்திய நிலையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் அறிக்கைப்படி மாவட்ட ரீதியிலான நிலைவரங்களின் விவரங்கள் வருமாறு:-

* மட்டக்களப்பில் 28ஆயிரத்து 151 குடும்பங்களைச் சேர்ந்த ஒருலட்சத்து 2ஆயிரத்து 978பேர் பாதிக்கப்பட் டுள்ளனர். 101 தற்காலிக முகாம்களில் 7ஆயிரத்து 928 குடும்பங்களைச் சேர்ந்த 35 ஆயிரத்து 71 பேர் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.
* மட்டக்களப்பில் 65 சதவீத குடும்பங்கள் தமது வீடுகளுக்குத் திரும்பிவிட்டனர் என்றும் நலன்புரி முகாம்களின் எண்ணிக்கை 197இலிருந்து 101 ஆகக் குறைந்துள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.
* அம்பாறையில் 66ஆயிரத்து 891 குடும்பங்களைச் சேர்ந்த 2 லட்சத்து 57ஆயிரத்து 138பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 43 தற்காலிக முகாம்களில் 2ஆயிரத்து 207குடும்பங்களைச் சேர்ந்த 8ஆயிரத்து 494 பேர் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.
* திருகோணமலையில் 88ஆயிரத்து 874 குடும்பங்களைச் சேர்ந்த 3 லட்சத்து 30 ஆயிரத்து 266பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 15ஆயிரத்து 336 குடும்பங்களைச் சேர்ந்த 54 ஆயிரத்து 541 பேர் 135 தற்காலிக முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.
* புத்தளத்தில் 249குடும்பங்களும், மொனறாகலையில் 76குடும்பங்களும் பாதிக்கப்பட்டுள்ளன.
* பொலன்னறுவையில் 5ஆயிரத்து 268 குடும்பங்களைச் சேர்ந்த 19ஆயிரத்து 194 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 59 தற்காலிக முகாம்கள் இயங்கி வருகின்றன.
* பதுளையில் ஆயிரத்து 930குடும்பங்களைச் சேர்ந்த 7ஆயிரத்து 361 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 38 தற்காலிக முகாம்களில் 867குடும்பங்கள் தங்கவைக்கப்பட்டுள்ளன.
* வவுனியாவில் 24 ஆயிரத்து 617 குடும்பங்களைச் சேர்ந்த 95ஆயிரத்து 127 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 109 தற்காலிக முகாம்களில் 9ஆயிரத்து 696 குடும்பங்களைச் சேர்ந்த 37ஆயிரத்து 634 பேர் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.
* நுவரெலியாவில் 423 குடும்பங்களும், கண்டியில் 803 குடும்பங்களும், கிளிநொச்சியில் 3ஆயிரத்து 733 குடும்பங்களும், முல்லைத்தீவில் 10ஆயிரத்து 45 குடும்பங்களும் பாதிக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

(சி)

## ஆளும் தரப்புக்கிடையில் மோதல்

காலியில் ஆளுங்கட்சியின் இரண்டு வேட்பாளர்களின் ஆதரவாளர்களுக்கு இடையே ஏற்பட்ட மோதலில் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளபட்டது என்றும் இதன்போது வேட்பாளர் உட்பட மூவர் காயமடைந்தனர் என்றும் பெந்தோட்டப் பொலிஸார் தெரிவித்தனர்.

## 30 ஆயிரம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதன்படி 30 ஆயிரத்து 191 பசு மாடுகள், 7 ஆயிரத்து 332 எருமைகள், 22 வளர்ப்புப் பன்றிகள், 225 வளர்ப்பு முயல்கள், ஒரு லட்சத்து 5 ஆயிரத்து 778 கோழிகள், கோழி தவிர்ந்த ஏனைய 403 பறவைகள் ஆகியன உயிரிழந்துள்ளன என்றும் அவர் கூறினார்.

கிழக்கு மாகாணத்தில் மொத்தமாக இறந்துள்ள கால்நடைகள் தொடர்பான தகவல்கள் இன்னும் மதிப்பீடு செய்யப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கிழக்கு மாகாணத்தில் மூன்று லட்சத்துக்கும் அதிகமான கால்நடைகள் இறந்திருக்கலாம் என அச்சம் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

## சுழிபுரம் வாசியின் சடலம் மீட்பு

சுழிபுரத்தைச் சேர்ந்த இளம் குடும்பஸ்தர் ஒருவர் நேற்று மாலை 4.30 மணியளவில் குளத்தில் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சுழிபுரம், பாண்டலட்டைப் பகுதியைச் சேர்ந்த முருகேசு சிவநேசன் (வயது 28) எனும் ஒரு பிள்ளையின் தந்தையே உயிரிழந்த நிலையில் மீட்கப்பட்டவராவார்.

வேலை முடிந்து மதுபோதையில் வீடு திரும்பியதாக் கூறப்படும் பிரஸ்தாபநபர் சுழிபுரம் கல்லைவேம்படி வெள்ளவராயன் குளத்தில் குளிக்கச் சென்றபோதே நீரில் மூழ்கி மரணமானார் எனக் கூறப்பட்டது.சடலம் யாழ்.போதனா வைத்திய சாலை பிரதே அறையில் வைக்கப்பட்டுள்ளது. (ஒ-78)

## கொக்குவிலிலும் சடலம் மீட்பு

கொக்குவிலில் கிணற்றில் இருந்து இளைஞன் ஒருவர் சடலம் நேற்று மாலை மீட்கப்பட்டுள்ளது.

கொக்குவிலில் தலையாளிப் பகுதியைச் சேர்ந்த சுப் பிரமணியம் சிவசங்கரன் (வயது -35) என்பவரே சடலமாக மீட் கப்பட்டவர் ஆவார்.

உறவினர்களின் தகவலையடுத்து பொலிஸாரால் சடலம் மீட்கப்பட்டு யாழ். ஆஸ்பத்திரி பிரேத அறையில் மரண விசாரணைக்காக வைக்கப்பட்டுள்ளது. (ஒ-323)

## பிள்ளையார்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இரு பிள்ளைகளின் தாயார் ஆவார். அவரது இறுதிக் கிரியைகள் நடந்து முடிந்துள்ளன.

இவர்கள் வசித்த 16 மாடிக் கட்டடத்தில் திடீரென ஏற்பட்ட தீ விபத்தில் கருகி இவர்கள் இருவரும் பலியாகினர்.

திருமதி தர்மலிங்கம் 2004ஆம் ஆண்டும் தனது பிள்ளைகளைப் பார்ப்பதற்காக லண்டன் மற்றும் பாரிஸ் நகரங்களுக்கு வந்து திரும்பியுள்ளார். 7 ஆண்டுகளின் பின்னர் அவர் மீண்டும் வந்த போது இந்தப் பரிதாபச் சம்பவம் இடம்பெற்றது என்று உறவினர்கள் தெரிவித்தனர்.

''பயங்கரப் போருக்குள்சிக்கிய பின்னரும் அம்மா உயிருடன் எங்களிடம் வந்து சேர்ந்தார் என்று சந்தோசப் பட்டோம். ஆனால் தீ எல்லாவற்றையும் நாசமாக்கி விட்டது. அவரது இழப்பால் நானும் குடும்பத்தினரும் பெரும் துன்பம் அடைந்துள்ளோம்'' என்றார் அவரது மகள் நந்தினி.

இரு பெண்களதும் சாவுக்குக் காரணமான தீயை ஏற்படுத்தினார் என்ற குற்றச்சாட்டில் சான்ட்ரா கிளார்க் என்பவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். அவரும் அதே தொடர்மாடியில் வசிப்பவராவார். அவருக்கு எதிராக கம்பர்வெல் கிறீன் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (உ)




*Applications are invited from graduates who are prepared to undergo Industrial Training in a recognised training centre in Colombo for two weeks. Food and Accommodation will be provided. Training will be Free of Charge.*

*Those who wish to under go the industrial training may Apply to*

**cborecruit@gmail.com**

யாழ் நகரில் புகைப்படத்துறையில் மற்றுமோர் புதிய அறிமுகம்.

டொட் லைன்

டிஜிற்றல் கலர் லாப்

புகைப்படத்துறைக்கோர் வழிகாட்டி.

உலகத் தரம் வாய்ந்த, மிகச்சிறந்த
Fuji Frontier L.P 7500 தனது சேவையை
இன்று முதல் மகிழ்ச்சியுடன் ஆரம்பிக்கும் நிகழ்வில்
இத்துறைசார் நண்பர்கள் வாடிக்கையாளர்கள்
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்



திகதி: 09.02.2011 (புதன்கிழமை)
நேரம்: காலை 11.30
இடம்: 198/6 நாவலர் வீதி, யாழ்ப்பாணம்

அனுசரணை
Hayleys
Fujifilm imagination Mini Lab

டொட் லைன் டிஜிற்றல் கலர் லாப்
198/6 நாவலர் வீதி, யாழ்ப்பாணம்
021 222 8443
dotlinejaffna@yahoo.com

**காணி உடனடி விற்பனைக்கு**

யாழ்.நகர், ஆனைப்பந்தி சந்திக்கு அருகாமையில் பருத்தித்துறை பிரதான வீதியில் 7 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

* குடியிருப்புக்கு
* தொழில் நிறுவனங்கள்
* வியாபாரஸ் தாபனங்கள்/
* தொடர்மாடி வீடுகள்

முதலியவற்றுக்கு உகந்தது.

தொ. பே: 0725305782, 0783088249.

**Deutsch - (டொச்)**
Deutsch - (டொச்)
Dutch - (டச்)
**Dutch - (டச்)**

எம்பஸி பரீட்சைகளுக்கான Deutsch மற்றும் Nederland - Dutch, French, Italian மொழி வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

Vivekananda Academy
No.3, 2nd Lane, palay Road.

Tel:- 0213216928, 0779927117, 0774842464

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 09.02.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.